# இதழியல்

*பாடம்–1*

## இதழியல் அறிமுகம்

வியக்கத்தக்க வகையில் இதழியல் விரைந்து வளர்ந்து வருகின்றது. அறிவியல், தொழில்நுட்ப முன்னேற்றத்தின் விளைவாக இதழ்கள் - செய்தித்தாட்கள் - அளவாலும், இயல்பாலும், பரப்பாலும், வகைகளாலும் நமது அரசியல், பொருளாதார சமுதாய வாழ்க்கையில் சிறப்பிடம் பெற்றுத்திகழ்கின்றன.

“காலையில் எழுந்தவுடன் செய்தித்தாள்” என்பது இன்று பலரின் பழக்கமாகிவிட்டது. இதழ்களின் தாக்கத்திற்குட்படாத, எந்தத் துறையும் இல்லை. பத்திரிக்கைகளின் செல்வாக்கு எழுத்தில் அடங்காது. ‘ஆக்கல், அழித்தல்’ என்று ‘எல்லாம் வல்லதாக’ இதழியல் செல்வாக்கும் சொல்வாக்கும் பெற்றிருப்பதால் அதனைப் பற்றி அறிந்துகொள்ளுதல் இக்காலத் தேவையாகிவிட்டது. ‘பத்திரிக்கை’யின் பேராற்றலை மக்கள் உணரும் வகையில் பைந்தமிழ்ப் பாவேந்தர் பாரதிதாசன்,

**“காரிருள் அகத்தில் நல்ல**
**கதிரொளி நீதான்! இந்தப்**
**பாரிடைத் துயில்வோர் கண்ணிற்**
**பாய்ந்திடும் எழுச்சி நீதான்**
**ஊரினை நாட்டை இந்த**
**உலகினை ஒன்று சேர்க்கப்**
**பேரறி வாளர் நெஞ்சில்**
**பிறந்த பத்திரிக்கைப் பெண்ணே”**

என்று வாழ்த்தி வரவேற்கின்றார்.

**இதழியல் விளக்கம்**

சொல்விளக்கம்: ‘ஜெர்னலிசம்’ (Journalism) என்ற ஆங்கிலச்சொல்லின் தமிழாக்கம் ‘இதழியல்’. இந்தச் சொல்லின் மூலம் ‘டையர்னல் (Diurnal)’ என்ற பழைய இலத்தீன் மொழிச் சொல்லில் இருந்து பிறந்தது. ‘சர்னல்’ ‘டையர்னல்’ என்றால், ‘அன்று’ (அன்றைய) என்று பொருள். ‘சர்னல்’ என்றால், ‘அன்றாடம் நடந்ததை எழுதி வைக்கும் ஏடு’, என்று பொருள்படும். வாசுகோடாகாமாவின் பயண நூல் ‘எ சர்னல் ஆப் தி பஸ்டு வாயேஜ் ஆப் வாஸ்கோடகாமா’ என்று பெயர் பெற்றது. ஆனால் இப்பொழுது ‘சர்னல்’ என்பது ‘இதழ்’களையே குறிக்கிறது என்று எழுத்தாளர் அ.மா.சாமி விளக்குகின்றார்.

இதழ் என்பதை ‘பத்திரிக்கை’, ‘செய்தித்தாள்’, ‘தாளிகை’ என்றும் குறிப்பிடுகின்றார்.

இதழ்களுக்கும், குறிப்பாக செய்தித்தாட்களுக்கும் எழுதும் தொழிலைத்தான் முதன்முதலில் இதழியல் என்ற சொல் குறித்தது. இப்பொழுது அதனுடைய பொருளும், பரப்பும் விரிவடைந்து, செய்திகளையும், கருத்துக்களையும் பரப்புகின்ற மக்கள்தொடர்பு நிறுவனமாக மாறியும், சமுதாய விழிப்புணர்ச்சியின் ஓர் உறுப்பாக அதுவே உருவெடுத்தும், அதனுடைய நடவடிக்கைகளுக்கு அற அடிப்படையில் சட்ட நோக்கிலும் பொறுப்பேற்கும் அமைப்பாகவும் இதழியல் திகழ்கின்றது என்று ஆர்.இராமச்சந்திர ஐயர் விளக்குகின்றார்.

வெப்ஸ்டரின் மூன்றாவது பன்னாட்டு அகராதியில் (webster’s Third International Dictionary), “வெளியிடுவதற்காகவோ, பதிப்பிப்பதற்காகவோ,

ஒலிபரப்புவதற்காகவோ நடைமுறை ஈடுபாடுள்ள விவரங்களைத் தொகுப்பதும், எழுதுவதும், செப்பனிடுவதும் இதழியல்" என்று விளக்கம் உள்ளது.

செய்திகளைச் சேகரித்தலும் சேகரித்த செய்திகளைப் பத்திரிக்கை வாயிலாகப் பரப்புதலும் இதழியல் எனப்படும். "Journalism means gathering and disminінating" ஜெர்னலிசம் என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கம் இதழியல் இச்சொல் 'டையர்னல்' என்ற பழைய இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து பிறந்தது. சர்னல்/டையர்னல் என்றால் அன்றாடம் நடந்ததை எழுதி வைப்பது என்பது பொருள். தற்பொது சர்னல் என்ற சொல் இதழ்களையே குறிக்கிறது என்கிறார் அ.மா.சாமி. இதழ் என்பதை பத்திரிக்கை, செய்தித்தாள், தாளிகை என்றும் குறிப்பிடுகின்றார்.

ஓர் இதழ் உருவாகும் நிலையைத் தொடக்கம் முதல் இறுதி வரை முறைப்படுத்தியுள்ளன. செய்திகளை சேகரிப்பது, எழுதுவது, செப்பனிடுவது, அச்சிடுவது, வெளியிடுவது ஆகிய அனைத்தும் ஆய்வுமுறையிலேயே அமைகின்றது.

**இதழியலின் இயல்பும் நோக்கமும்**

இன்றைய உலகில் ஆற்றல்மிக்கவையாக விளங்கும் இதழ்களால் சிறந்த பயன்கிடைக்க வேண்டுமானால் அவை தங்களது பணியைச் செவ்வனே செய்ய வேண்டும். உண்மையான மக்களாட்சி செயல்பட வேண்டுமானால் எல்லா மக்களும் ஆட்சியல் அறிவார்ந்த முறையில் பங்கு பெறவேண்டும். அதற்குத் துணைசெய்வதாக இதழ்கள் இருக்கின்றன.

மக்கள் தகவல் தொடர்பில் (Mass Communication) இதழ்கள் தலையாய இடத்தைப் பெறுகின்றன.

அண்ணல் காந்தியடிகள் தனது சுயசரிதையில் "செய்தித்தாள்களின் நோக்கங்களில் ஒன்றாக, மக்களின் உணர்வினை அறிந்து, அதனை வெளியிடுவது இருக்க வேண்டும். மற்றொன்று, மக்களிடம் மிகவும் வேண்டிய உணர்வுபூர்வமான எண்ணங்களை உருவாக்க வேண்டும். மூன்றாவதாக பொதுமக்களிடம் இருக்கும் குறைகளையும் துணிச்சலாக எடுத்துரைக்க வேண்டும்" என்று வலியுறுத்திக் கூறுகின்றார்.

இதழ்களின் பணிகள் எப்படிப்பட்ட குறிக்கோள்களோடு அமைய வேண்டுமென்பதை இங்கிலாந்தின் பத்திரிக்கை மன்றம் (Press Council) தனது இரண்டாவது ஆண்டு அறிக்கையில் 'அநீதியை வெளிக்காட்டுவது, தவற்றைத் திருத்துவது, ஆலோசனை வழங்குவது, நண்பர்களில்லாதவர்களோடு நட்பு கொள்வது ஆதாரவற்றவர்களுக்கு உதவுவது ஆகியவை செய்தித்தாட்கள் செய்ய வேண்டிய சேவைகளில் அடங்கும். வேறுவகையில் பெற முடியாதவர்களுக்குத் தொடர்ந்து உதவிகளை வழங்க வேண்டும். பொதுக்காரணங்களை எடுத்துக்கொண்டு தேவையானால் போராட்டங்கள் நடத்தவும் வேண்டும்' என்று அழகாக விளக்குகின்றது.

**இதழியல்-ஒரு கலையியல்**

அறிவியலாக விளங்கும் இதழியல் ஓர் அற்புதக் கலையியலாகவும் (Art) திகழ்கின்றது.

கலையியல் என்பது உள்ளத்து உணர்ச்சிகளை அழகாக வெளிப்படுத்துவதாகவும், மகிழ்ச்சியை வழங்குவதாகவும், ஓர் உயரிய குறிக்கோளை நோக்கி அழைத்துச் செல்வதாகவும் இருக்க வேண்டும். இதழியலில் இத்தகைய இயல்புகள் அனைத்தும் ஒளிர்கின்றன.

## தொடக்ககால இதழியல் வரலாறு

தற்கால இதழியல் வளர்ச்சி அச்சுக்கலையைச் சார்ந்திருக்கின்றது. அச்சகம் அமைந்த பிறகுதான் பத்திரிக்கைகள் வெளிவரத் தொடங்கின.

இந்தியாவில் முதன்முதலில் நூற்களை அச்சிடவும் அச்சகத்தை அமைக்கவும் கிறித்தவப் பாதிரிமக்கள் முயன்றனர். அவர்கள் அச்சிட்ட நூற்களின் துணையோடு கிறித்தவ சமயத்தைப் பரப்ப முயன்றனர்.

முதன்முதலில் தூத்துக்குடி வட்டாரத்திலிருந்து பாதிரியார்கள் 1554-இல் போர்ச்சுக்கல்லில் ‘லூ சே தமிழ் வினாவிடை’ என்ற நூலை ரோமன் எழுத்து முறையில் அச்சிட்டு வெளியிட்டனர். ஆனால் இந்தியாவில் முதல் அச்சகம் கிறித்தவ பாதிரியர்களால் 1556-இல் கோவாவில் அமைக்கப்பெற்றது.

தமிழகத்தில் அண்டிறிக் பாதிரியார் 1578-இல் தூத்துக்குடிக்கும் திருச்செந்தூருக்கும் இடையிலுள்ள புன்னக்காயலில் தூத்துக்குடி மீனவர்கள் அளித்த நானூறு ரூபாய் உதவியில் அச்சகத்தை அமைத்தார். அதன் பின்பு தமிழ் நூல்களைத் தமிழகத்தில் அச்சிடும் நிலை வந்தது. படிப்படியாக தமிழகத்தில் அச்சுக்கலை வளர்ந்தது. சென்ற நூற்றாண்டின் மத்திய காலத்தில் சென்னையில் பத்து அச்சகங்கள் இருந்தன.

## இதழியல் தொடக்கம்

இதழ்களின் வளர்ச்சி பற்றிக் குறிப்பிடும்பொழுது, “வாழ்வோடு இணைந்து, பெருவளர்ச்சி பெற்றுத் திகழ்கிறது. பத்திரிக்கைத்துறை நாழிகை தோறும் வளர்ந்து வரும் அறிவியலால் ஆக்கம் பெற்று, மலர்ந்து வரும் மக்களாட்சி முறையில் ஊக்கம் அடைந்து, மக்களை ஈர்க்கும் ஆற்றல் படைத்து விளங்குகிறது. பத்திரிக்கை படிக்காத நாளெல்லாம் பிறவாத நாளே என்னும் அளவுக்கு மக்களின் அன்றாட நடைமுறையில் பத்திரிக்கை இடம்பெற்றுவிட்டது”

என்று சோமலெ கூறுகின்றார். தமிழகத்தில் தோன்றி வளர்ந்த வரலாறு இவரது கருத்தை உறுதிப்படுத்துகின்றது.

இந்தியாவில் வேறுபகுதிகளில் ஏற்பட்டதைப் போன்றே தமிழகத்திலும் இங்கிருந்த ஆங்கிலேயர்களின் தேவைக்காக ஆங்கிலச் செய்தித் தாட்களை முதன்முதலில் வெளியிட்டனர். முதன்முதலில் சென்னையில் ‘மெட்ராஜ் கெஜட்’, ‘கவர்ன்மென்ட் கெஸட்’, மெட்ராஸ்கூரியா’ ஆகிய மூன்று வார இதழ்களாக வெளிவந்தன. இவற்றில் ‘மெட்ராஸ் கூரியர்’ என்னும் இதழை ரிச்சர்ட் ஜான்சன் என்பவர் 1578-இல் தொடங்கினார். அவரது நோக்கம் வெள்ளையர்களுக்கு வேண்டிய செய்திகளை வழங்குவதாகும். ஆனால் செய்திப் போக்குவரத்து வளராமையால், செய்திகளைக் காலம் தாழ்த்தியே தொடக்கக்கால இதழ்கள் அச்சிட்டு வெளியிட்டன. அரசின் கெடுபிடிகளும், சட்டதிட்டங்களும் கடுமையாக இருந்தன. பொதுமக்களிடம் ஆங்கில அறிவும் மிகுந்திருக்கவில்லை. இத்தகைய காரணங்களினால் தொடக்கக்கால இதழ்கள் குறுகிய காலமே வாழ்ந்தன.

### கிறித்தவ பாதிரியார்களும் இதழ்களும்

தமிழகத்தில் அச்சுக்கலையை வளர்த்து பொதுமக்கள் படிக்கும் வகையில் இதழ்களை வெளியிட்டவர்கள் கிறித்தவ பாதிரியார்கள். 1772-இல் தஞ்சை மாவட்டத்திலுள்ள தரங்கம்பாடியில் டேனிஷ் கிறித்தவ சங்கத்தினர் அச்சகத்தை அமைத்தனர். தமிழ் எழுத்துக்களை வளர்ப்பதிலும் அச்சுக்கோர்ப்பதிலும் முன்னேற்றம் ஏற்பட்டது. கிறித்தவ பாதிரியர்கள் தங்களது சமயங்களைப் பற்றியே நூற்களையும் மதமாற்றம் பற்றிய செய்திகளையும் வெளியிட்டனர்.

கிறித்தவ சமயத்தில் பல உட்பிரிவுகள் இருந்தன. ஒவ்வொரு பிரிவினரும் தனி அச்சகத்தை அமைத்துக்கொண்டு மதக் கருத்துக்களைப் பரப்ப போட்டியிட்டனர். தங்களது மதத்தைப் பரப்பும் பணிக்கு உதவும் வகையில் கல்விக்கூடங்களையும், மருத்துவமனைகளையும் அமைத்து மக்களுக்குத்

தொண்டு செய்தனர். இதனால் மக்கள் மத்தியில் எழுத்தறிவு வளர்ந்தது. தமிழ் இதழ்களைத் தொடங்குவதற்கான சூழல் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்டது.

**முதல் இதழ்கள்**

தமிழில் வெளிவந்த முதல் இதழ் எது என்பது பற்றித் திட்டவட்டமாகத் தெரியவில்லை. பொதுவாக 1831-இல் கிறித்தவ சங்கத்தினர் நடத்திய தமிழ் மேக்சின் (Tamil Magazine) என்பதுதான் தமிழில் வெளிவந்த முதல் இதழ் என்று கருத்து நிலவுகின்றது. ஆனால் அ.ம.சாமி முதல் தமிழ் இதழ் 1812-ஆம் ஆண்டிலேயே வெளிவந்துவிட்டது. அதன் பெயர் மாசத் தினச்சரிதை என்பது என்று கூறுகின்றனர்.

1856-இல் பெர்சிவல் பாதிரியார் சென்னையில் தொடங்கி நடத்திய ‘தினவர்த்தமானி’ தமிழில் வெளிவந்த முதல் வாரஇதழாகும். இந்த இதழில் செய்திகள் மட்டுமின்றி கலை, இலக்கியம், அறிவியல் ஆகியவை பற்றிய கருத்துக்களும் இடம்பெற்றன.

1870-இல் அரசின் கல்வித்துறையின் ஆதரவில் ஜனவிநோதினி என்ற தமிழ் மாத இதழை வெளியிட்டார். ஆங்கிலத்தில் வெளிவந்த கட்டுரைகளை மொழிபெயர்த்து இதழில் வெளியிட்டனர். கல்வி வளர்ச்சி தாள் இந்த இதழின் தலையாய குறிக்கோளாயிருந்தது.

1887-இல் தமிழில் முதல் நாளிதழாக ‘லலித பிரசனோதயா’ என்ற இதழ் வெளிவந்தது. 1882-இல் ஜி.சுப்பிரமணிய ஐயரால் வார இதழாகத் தொடங்க பெற்ற சுசேதமித்திரன் 1899-இல் நாளிதழாக மாறியது.

## இதழ்களின் வளர்ச்சி

பெண்ணாள் இந்தியாவில் கையெழுத்துப் பிரதியாய்த் தோன்றிப் பின் மேல்நாட்டார் தொடர்பால் அச்சுக்கலையின் அரியாசனத்தில் என்றும் நின்றுலாவும் எழிலரசியாய் விளங்கும் இயல்பினை இப்பாடத்தில் காணலாம். தோற்றக் காலத்தில் ஆட்சியாளர்களின் அச்சுறுத்தலினால் அவள் பெற்ற இன்னல்கள் ஏராளம். கட்டுப்பாட்டிற்குள் கிடந்து தவித்தாள். எழுத்தாளர்களின் இடையறா முயற்சியால் பீடுநடை போடும் பெருமையைப் பெற்றாள். முகலாயர் காலம், ஆங்கிலேயர்கள் காலம், கிருத்தவ இயக்கம், இந்து சமயம், பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டு காலங்களில் இதழ்கள் வளர்ந்துவந்த நிலை ஆகியவற்றை இதன்கண் காணலாம்.

## ஆரம்ப நிலை

இந்தியாவில் இவ்விதழியல் முகலாய மன்னர்களின் காலந்தொட்டு நாட்டில் நல்ல வண்ணம் நடைபோட ஆரம்பித்தது எனலாம். முகலாய மன்னர்களில் குறிப்பிடத்தகுந்தவர் ஔரங்கசீப். இவருடைய ஆட்சிக்காலத்தில் அரசியல் பணியாளர்கள் நாடு முழுவதும் நியமித்து அவ்வப்போது நாட்டில் நடைபெறும் செய்திகளைத் தலைநகருக்கு அனுப்பும்படிக் கட்டளை இட்டிருந்தான். அவ்வாறு வரும் செய்திகளை நள்ளிரவுவரை கூடப் படிக்கச்செய்து அதற்கேற்ப நடவடிக்கை எடுத்தான் என முகலாய அரசின் வரலாறு நமக்குக் காட்டுகிறது. ஆனால் இந்திய நாட்டின் முதல் முழுமை பெற்ற அச்சுவடிவ வாரச்செய்தி ஏடு 1780-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 29-ஆம் நாள் சனிக்கிழமை ‘பெங்கால் கெசட்’ அல்லது ‘கல்கத்தா அட்வர்டைசர்’ என்ற பெயரில் கல்கத்தாவிலிருந்து வெளிவந்தது. ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி அச்சுக்கலையில் மிகமிக ஆர்வம் உடையவர் 12”x8” அளவில் இரண்டு பக்கங்களைக் கொண்டதாக இவ்வாசிரியர் இதனை வெளியிட்டார். இந்திய இதழ்களின் வளர்ச்சிக்கு இஃது அரிச்சுவடி

எனலாம். இவ்விதழ் இங்கிலாந்து இதழ்களில் வெளிவந்த செய்திகள், வணிகக் கடிதங்கள், விளம்பரங்கள் இவைகளைப் பொருளடக்கமாகக் கொண்டு வெளிவந்தது. இந்தியர்களுக்கென்று இ∴து விளங்கவில்லையாயினும், இந்திய நாட்டின் முதல் செய்தித்தாள் என்ற சிறப்பினைப் பெற்றது. ஆங்கில ஏகாதிபத்தியத்தின் முறையற்ற செயல்களை மிகத்துணிவாக எழுதிக் கண்டித்தது பெங்கால் கெசட்.

இந்தியத் தலைமை ஆளுநராக விளங்கிய வாரன் ஹேஸ்டிங்ஸ்சும், இந்திய உச்சநீதி மன்றத்தின் நீதிபதி எலிஜா இம்பேயுங்கூட இவ்விதழின் கண்டனத்திற்கு ஆளானார்கள். இங்கிலாந்து பாராளுமன்றத்தில் இவ்விதழை ஆதாரமாகக் கொண்டு எதிர்க்கட்சியினர் ஆளுங்கட்சியினர் மீது குற்றஞ்சாட்டினர். இதனால் இவ்விதழ் பல தொல்லைகளுக்கு உள்ளாகியது. இவ்விதழாசிரியர் வழக்கு மன்றம் அடிதடிகள் அச்சுறுத்தல், சிறைச்சாலை வாசம், நாடு கடத்தல், அபராதம் முதலியவற்றைச் சந்தித்தார். சிறை சென்றும் மனந்தளராமல் ‘பெங்கால்கெசட்’ வெளிவந்தது எனினும் ஆட்சியாளர்களின் அழுத்தத்தால் 1782 மார்ச்சுத் திங்கள் அச்சுப்பொறிகளும் எழுத்துக்களும், பறிமுதல் செய்யப்பட்டு அச்சகம் இழுத்து மூடப்பட்டது. இதழியல் வரலாற்றில் புதியதோர் எழுச்சியை உருவாக்கிச் சென்றது. அதனால் ‘இந்திய செய்தித்தாள்களின் தந்தை’ என ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி அழைக்கப்பட்டார்.

இவ்விதழை அடுத்து கல்கத்தாவில் 1772-இல், பெர்னார்டு மெஸ்ஸிங், பீட்டர்ரீட் என்ற இரண்டு வணிகர்கள் ‘இந்தியா கெசட்’ என்ற இதழை வெளியிட்டனர். தொடக்கத்தில் வணிக விளம்பரமாகத் திகழ்ந்த இவ்விதழ் பின்னால் செய்தித்தாளாக மாறியது. இவ்விதழும் தலைமை ஆளுநர் வாரன்ஹேஸ்டிங்ஸ் விதிக்கின்ற கட்டுப்பாட்டிற்குள் அடங்கியே வெளிவந்தது. இந்தியாவின் மூன்றாவது செய்தித்தாளாக ‘கல்கத்தா கெசட் அண்டு ஓரியண்டல்

அட்வர்டைசர்' 1784-இல் வெளிவந்தது. இ∴து அரசினரின் செய்திகளையே வெளியிடும் இதழாக விளங்கியது. 1785-இல் 'பெங்கால் ஜெர்னல்' என்ற அரசு தரும் விளம்பரங்களை இலவசமாக வெளியிட ஒப்புக்கொண்டு வெளிவந்தது. இதே ஆண்டில் இந்தியாவின் முதல்மாத இதழான, 'ஒரியண்டல்மெகசின் அல்லது கல்கத்தா அமியூஸ்மெண்ட்' வெளிவந்தது. 1786-இல் 'கல்கத்தா கிரானிக்கிள்' என்ற வார இதழ் வெளிவந்தது. இதே காலத்தில் 'இந்தியன் வோர்ல்டு' என்ற இதழும் தோன்றியது. இவ்விதழாசிரியரான வில்லியம்டுயன் இவ்விதழால் பலதொல்லைகளுக்கு ஆளானார். அரசினர் இவ்விதழில் யாரும் விளம்பரம் படிக்கக்கூடாதென்றும் மறைமுகமான கட்டுப்பாட்டை விதித்தனர். கவர்னர் ஜெனரல் ஸர்ஜான்ஹோரை நேரில் பேட்டிகாணச் சென்றபோது, இவ்விதழாசிரியர் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டார். சுருக்கமாகச் சொன்னால் கல்கத்தாவில் தோன்றிய இவ்வார, மாத இதழ்கள் அனைத்தும் தன்னிச்சையின்றி அரசின் பிடியில் சிக்கி வெளிவந்து கொண்டிருந்தன.

**வெல்லெஸ்லியின் ஐந்து அம்சத்திட்டங்கள்**

1798-இல் 'ஏஷியாடிக் மிர்ரர்' என்ற இதழானது வெல்லெஸ்லியின் கோபத்திற்கு ஆளாகியது. அவ்விதழில் திப்புசுல்தானை எதிர்த்துப் போரிட்ட ஆங்கிலேய இந்திய வீரர்களின் திறமையைக் கேலிசெய்து செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இ∴து திப்புசுல்தானை எதிர்த்துப் போரிட்ட வெல்லெஸ்லிக்கு மிகவும் ஆத்திரத்தை உண்டாக்கியது. இதழ்கள் அனைத்தையுமே கட்டுப்படுத்த வேண்டும் என்ற இராணுவத் தளபதிக்குக் கடிதம் எழுதியதோடு 1799-இல் ஒரு ஐந்து அம்சத்திட்டத்தையும் நடைமுறைக்குக் கொண்டுவந்தார். அதனடிப்படையில்,

1. இதழ்கள் அச்சிடுவோர் அச்சிட்ட பிரதியின் கடைசியில் தங்கள் பெயரைக் குறிப்பிட வேண்டும்.
2. அரசின் தலைமைச் செயலருக்கு இதழின் ஆசிரியரோ அல்லது சொந்தக்காரரோ தமது முகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
3. ஞாயிற்றுக்கிழமைகளில் இதழ் வெளிவரக்கூடாது.
4. அரசின் தலைமைச் செயலகம் அனுமதி கொடுத்தாலொழிய இதழ்களை அச்சடிக்கவோ, வெளியிடவோ கூடாது.
5. மேற்கண்ட விதிமுறைகளினின்று வழுவியோர் உடனடியாக ஐரோப்பாவிற்கு அனுப்பப்படுவார்கள். இத்திட்டத்தால் 1835-வரை ஆங்கிலேயர்களுக்குப் புறம்பாக எச்செய்தியினையும் இந்திய இதழ்கள் வெளியிடாத கட்டுப்பாட்டிற்குள் அமுங்கிக்கிடந்தன.

வெல்லெஸ்லிக்குப் பிறகு ஆங்கிலேய அரசுப் பிரதிநிதியாக வந்த வார்டு மிண்டோ 1807-இல் சில திருத்தங்களைச் செய்தார். அதன்படி செராம்பூர் இதழ்கள் அனைத்தும் அச்சாவதற்கு முன்பு அரசின் பார்வைக்குச் சென்று ஒப்புதல் பெறவேண்டும். இக்காலத்தில்தான் செராம்பூர் கிருத்தவர்கள் அச்சகம் ஒன்றை நிறுவிச்சமயம் பரப்பும் இதழ்களை வெளியிட்டனர். ஆனால் அரசினரின் சட்டக்கடுமையால் மார்னிங் போஸ்ட், டெலிகிராப், கல்கத்தா கூரியர், ஓரியண்டல் ஏஷியாடிக் மிர்ரர் ஆகியவை ஒன்றின் பின் ஒன்றாக நின்றுவிட்டன. வாரன்ஹேஸ்டிங்பிரபு ஆளுநர் பதவியை ஏற்றதும், இதழ்களின் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் இருந்த சில கடுமையான விதிகளை நீக்கினார். 1819-ஆம் ஆண்டு தோன்றிய பெங்கால் கார்கரு வார இதழ் மிகவிரைவில் நாளிதழாக மாற்றப்பட்டது. அதன் குறிக்கோள் ஆங்கிலக் கல்வியைப் பரப்புவதாக இருந்தது. அதனால் இவ்விதழ் தபால் கட்டணச்சலுகை பெற்றது. இருப்பினும் 1814-இல் கல்கத்தாவின் தலைமைச் செயலராகவும், செய்தி தணிக்கையாளராகவும்

இருந்த ஜான் ஆடம்ஸ் என்பார் இதழின் ஒவ்வொரு செய்தியினையும் நன்கு படிக்கப் பார்த்த பின்னர்தான் அனுமதிப்பாராம்.

## இந்திய இதழியல் வரலாற்றில் ஒரு திருப்பம்

1816-இல் இந்திய இதழியல் வரலாற்றில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. இந்தியாவில் ஆங்கிலேயர்களால் நடத்தப்பட்டு வந்த இதழியல் துறையில் இந்தியர் ஒருவர் புகுந்து முதன்முதல் ‘பெங்கால் கெசட்’ என்ற வாரஇதழ் வெளிவந்தது. இதன் ஆசிரியர் சாதாரண பள்ளி ஆசிரியர் கங்காதர் பட்டச்சாரியாராவார். 1818-அக்டோபர் 2-இல் ஜேம்ஸ் சில்க் பக்கிங்ஹாம் என்று ஆங்கிலேயர் ‘கல்கத்தா ஜெர்னல்’ என்ற வார இருமுறை இதழைத் தொடங்கினார். எட்டுப்பக்கங்களைக் கொண்ட இவ்விதழின் விலை ரூபாய் ஒன்றுக்கு விற்கப்பட்டது. இவ்விதழ் ‘இந்தியன் கெசட்’ பெங்கால் காரகாரு சியாட்டிக் ஏமிரர் போன்ற இதழ்களுடன் போட்டியிட்டு விற்பனையில் முன்னணிக்கு வந்தது. 1820-இல் கார்டியன் என்ற ஞாயிறு இதழ் கல்கத்தாவிலிருந்து வெளிவந்தது. 1821-இல் ‘ஜான்புல் இன்த ஈஸ்ட்’ (John Bull in the East) என்ற இதழ் கிழக்கிந்தியக் கம்பெனி அலுவலர்களால் தொடங்கப்பெற்றது. எனினும் மக்கட்குக் கருத்துச்சுதந்திரம் வேண்டியும், பெண்கள் உடன்கட்டை ஏறும் வழக்கத்தைக் கண்டித்தும் எழுதி இந்திய மக்களின் இதயத்தில் பக்கிங்ஹாம் நிங்காதொரு இடத்தைப் பெற்றதபோல ஏனைய இதழாசிரியர்கள் இடம்பெறவில்லை. இவர் தமது கல்கத்தா ஜர்னலில் இதழின் முக்கியத்துவத்தை ‘அறிவினைத் தூண்டி அறியாமை என்னும் சாக்கேட்டினைத் தொலைக்க வேண்டும் என்றால் முன்னதை ஊக்கிப் பின்னதைத் தவிர்க்கும் பத்திரிக்கைத் தொழில் பள்ளிகள் கல்லூரிகள் போன்ற அறிவாலயங்கள் ஒத்து வளர்க்கப்பட வேண்டும். ஏனெனில் பத்திரிக்கையும்,

பள்ளிப்படிப்பும் அறிவு மரத்தின் இருவேறு கிளைகளாகும்' என்பர். இத்தகைய தன்மை வாய்ந்த இவர் தமது இதழில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஊழல்களை எழுதியதால் ஜான் ஆடம் ஆளுநராக வந்த காலத்தில் இங்கிலாந்து நாட்டிற்கு அனுப்பப்பட்டார்.

**கிருத்தவ இயக்கமும் இந்து சமயமும்**

இதழியல் துறையில் புதிய வேகத்தோடு கிருத்தவ இயக்கமும், இந்துச்சமயமும் நுழைந்தன. 1818 'தீக்தர்சன்' என்ற இதழ் வங்காள மொழியில் செராம்பூரிலிருந்து வெளிவந்தது. இந்தியமொழி இதழ்களின் முதல் மாதஇதழ் இதுவேயாகும். இதனையடுத்து அதே ஆண்டில் சமாச்சார் தர்பன், என்ற ஆங்கில மொழி மாத இதழும் வெளிவந்தன. இவ்விதழ் இதழியல் வரலாற்றில் தனக்கென ஓர் இடத்தைப் பெற்றுத் திகழ்ந்தது. இவ்விதழ்களெல்லாம் கிருத்துவ இயக்கத்தைச் சார்ந்தவை. இவை அரசினர் அறிவிப்புகளை அரசியல் செய்திகளுடன் வெளியிட்டதோடு இந்துசமயக் கோட்பாடுகளையும், வேதாந்தங்களையும் விமர்சித்தன. இவற்றிற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இராஜாராம் மோகன்ராய் 'கிராணிக்கல் மேகசின்' என்ற இதழைத் தொடங்கினார். 'கிருத்துவ இயக்கத்தாரின் தாக்குதலை எதிர்த்து இந்து சமயக் கொள்கைகளை நியாயப்படுத்துவது' இதன் நோக்கமாகும்.

வங்காளம் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் 'பிராமிண் சேவாதி' என்ற இதழைப் பின்பு வெளியிட்டார். இதழியல் துறையில் இந்தியர்களின் சிந்தனைக்கு வித்திட்டவர் இவரே எனலாம். 1821-இல் 'சம்சாத்கௌமதி' என்ற வார இதழைத் தோற்றுவித்தார். இவ்விதழ் இவருக்குப் பல வகையிலும் புகழ் சேர்த்தது. பெர்சியன் மொழியில், வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருமாறு 'மீராட் அல்-அஹ்பர்' என்ற வார இதழை வெளியிட்டார். கல்கத்தா ஜெர்னல்

இவ்விதழின் தலையங்கத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டது. 1822-இல் மிகச்சிறந்த இதழான ‘ஷாம்-இ-ஷான் நியூமா’ பெர்சின், வங்காளம், இந்தி ஆகிய நான்கு மொழிகளில் ‘பெங்கால் தத்தா’ அல்லது ‘பெங்கால் ஹெரால்டு’ வெளிவந்தது. இவ்விரு மாத இதழ்களின், போக்கைக் கண்ட ஆங்கிலேய அரசு 1823-இல் இந்தியமொழி இதழ்கள் கட்டுப்பாட்டுச் சட்டத்தைக் கொண்டு வந்தது. அதனால்தான் அனுமதி, தணிக்கை, எச்சரிக்கைகள், கைது, சிறைச்சாலை, அபராதம், தொல்லைகள் முதலியவற்றை இதழியல் துறை சந்திக்க நேர்ந்தது. இக்காலத்தில் இந்திய மொழி இதழ்கள் அரசியல் செய்திகளோடு, இந்துமதப் பழக்கவழக்கங்கள், ஆங்கில மருத்துவக் கல்வியின் முக்கியத்துவம், சிற்சில வெளிநாட்டுச் செய்திகள், கப்பல் போக்குவரத்துக்கள், நிலவரங்கள் முதலியவற்றையும் வெளியிட்டன. அதனால் ஐரோப்பியர்கள், நடத்திய இதழ்களோடு ஆங்கிலப் பாராளுமன்ற நடவடிக்கைகளையும், உள்நாட்டுச் செய்திகள் சிலவற்றையும், இந்திய மொழி இதழ்களில் வெளிவந்த சிலவற்றையும், இந்திய மொழி இதழ்களில் வெளிவந்த சிலவற்றின் மொழிபெயர்ப்புகளையும் வெளியிட்டன.

**பத்தொன்பதாம் நூற்றாண்டில் இதழ்கள்**

ஆங்கில அரசப் பிரதிநிதியாகப் பதவியேற்ற கானிங்பிரபு இதழ்கள் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக உள்ளன என்று காரணங்காட்டி 1857-இல் செய்தித்துறை ஒழுங்குப்படுத்தும் சட்டத்தைக் கொண்டுவந்தார். இதனால் ஆங்கிலேயர்களாலும், இந்தியர்களாலும் நடத்தப்பட்ட அனைத்து இதழ்களும் இச்சட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. இதனால் ‘ப்ரண்ட் ஆப் இந்தியா’, ‘பாம்பேடைம்ஸ்’, ‘சுல்தான்’, ‘அல்-அக்பர்’ போன்ற இதழ்கள் பெருந்தொல்லைகளுக்கு உள்ளாகின. பண்டிட் ஈஸ்வர் சந்தி வித்தியாசாகர் தொடங்கிய ‘சோம் பிரகாஷ்’ எனும் வங்க இதழ் தடைசெய்யப்பட்டது.

செய்தித்தாள்களை வெளியிட்டு வந்த முப்பத்தைந்து நிறுவனங்களின் எண்ணிக்கையும் ஆறாகக் குறைந்தது. இந்தியர்கள் இதனை, ‘வாய்ப்பூட்டுச்சட்டம் (Gagging Act) என்ற பெயரிட்டு அழைத்தனர். இச்சட்டச் செய்கை இதழாளர்களுக்குப் பெரிதும் ஆத்திரத்தை வரச்செய்தது. வருவது வரட்டும் எனத் துணிந்து இதழ்கள் அரசியலை ஆராய்ந்து ஆட்சியாளர்களின் குற்றங்களை துணிச்சலோடு வெளியிடத் தொடங்கின. இதன்பயனால் மக்கள் மன்றத்தில் இதழ்களின் மதிப்புக்கூடியதோடு, இதழ்கள் மக்களின் கருத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகக் கருதப்பட்டன. 1830-இல் இருந்து 1855-வரை வங்காளம், பம்பாய் மற்றும் வடமேற்கு மாநிலங்களில் இதழ்களின் எண்ணிக்கையும் வளர்ச்சியும் அதிகரிக்கத் தொடங்கின. அவை முழுக்க முழுக்க அரசியல் உணர்வும் தேசிய உணர்வும் ஊட்ட தயாராக அமைந்தன.

**இந்திய தேசிய காங்கிரசும் இதழ்களும்**

1885-இல் இந்திய தேசிய காங்கிரசு உருவானது. அதன் முதற்கூட்டத்தில் மகாதேவ கோவிந்த ரானேட நரேந்திராசன், இந்து இதழாசிரியர் சுப்பிரமணிய அய்யர் முதலிய இதழியல் தொடர்புடையவர்களே மிகுதியாகக் கலந்துகொண்டனர். அதனால் அன்றாடச் செய்தியாக இந்தியர்களின் அரசியல், பொது நிர்வாக நுழைவுமிளிர்ந்தது. அரசியல் நிர்ணய சபையில் இந்தியர்களின் பேச்சு விவாதங்களையும் இதழ்கள் தொகுத்து வெளியிட்டன. இதனால் இந்திய மக்களிடையே அரசியல் தெளிவு, விடுதலை உணர்வு, தேசிய ஒருமைப்பாடு, கொள்கைப்பிடிப்பு, தலைமைக்குக் கட்டுப்படுதல் போன்ற பண்புகள் வளரத்தொடங்கின.

இதழ்களின் வளர்ச்சிக்குப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் அறிவியல் வளர்ச்சிபெறும் காரணமாக அமைந்தது. தகவல் தொடர்புச் சாதனங்களின் மூலம் செய்திகள் உடனுக்குடன் பல்வேறு இடங்களிலிருந்தும் செய்தி நிறுவனத்திற்கு

எளிதில் கிடைக்கப்பெற்றது. இந்நூற்றாண்டில்தான் நாட்டின் மிகச்சிறந்த இதழ்களான டைம்ஸ் ஆப் இந்தியா, இண்டியன் சோசியல் ரிபார்மர் (பம்பாய்), பயோனீர் (அலகாபாத்து), ஸ்டேட்ஸ்மேன், ஆமிர்த பஜார் பத்திரிகா, கேபிடல் (கல்கத்தா), மெயில் இந்து சுதேசமித்திரன் (சென்னை0, சிவில் அண்டு மிலிடெரி கெஜட், டிரிபியூன் (லாகூர்) முதலியன தோன்றி புகழோடு வளரத் தொடங்கின.

## இருபதாம் நூற்றாண்டில் இதழ்கள்

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் முதலே இதழ்கள் அன்றாடம் மக்கள் பார்த்துப் பயனடையும் பொருளாக மாறின. இதழியல் துறையில் ஜி.ஏ.நடேசன், சி.ஒய்.சிந்தாமணி, என்.சி.கோல்கார், திலகர், கோகலே, சுரேந்திரநாத் பானர்ஜி, பண்டிட் மதன்மோகன் மாளவியா, பெரோஸ்ஷா மேத்தா, பூப்பேந்திரநாத் தாதாபாய் நவ்ரோஜீ, அரவிந்தர், காந்தியார், பாரதியார் முதலியோர் அரசியலைப் போன்றே இதிலும் ஈடுபட்டு செயலாற்றினர். இக்காலத்தில்தான் கே.சி.இராய் ஆறு இந்திய இதழ்களின் அரவணைப்போடு 1910-இல் ‘அசோசியேட் பிரஸ் ஆப் இந்தியா’ (Associated press of India) என்ற இந்தியச் செய்தி நிறுவனத்தை நிறுவினார். உட்பூசல் காரணமாக இந்திய தேசியக் காங்கிரசின் தீவிரவாதிகள் (Extremiss) மிதவாதிகள் (Moderates) என்ற இரு பிரிவுகள் தோன்றின. 1919-இல் அரசு கொண்டு வந்த மிண்டோ-மார்லி சீர்திருத்தத்தைத் தீவிரவாதிகள் எதிர்க்கவும், மிதவாதிகள் ஏற்றுக்கொள்ளவும் செய்தனர். இப்பிரிவு இதழ்களிடையேயும் சென்றது. கேசரிக் தேசவே இதழ்கள் தீவிரவாதிகள் பக்கமும், லீடர் என்ற நாளிதழ் மிதவாதிகள் பக்கமும் சேர்ந்து கொண்டன.

1961-ஆம் ஆண்டு இந்திய இதழ்கள் சட்டம் ஆங்கில அரசால் கொண்டுவரப்பட்டு இதழ்களை ஒடுக்க முனைந்தது. எட்டு இதழ்கள் இதன் கெடுபிடியால் நின்றுவிட்டன. திலகர் மீது அரசுச்சட்டம் 124-A பிரிவின்கீழ் இரண்டாகக் குற்றம் சுமத்தப்பட்டு நடவடிக்கை எடுத்து, பம்பாயில் வெளியாகும்

டைம்ஸ் ஆப் இந்தியா பாம்பே கெஜட், அட்வகேட் ஆப் இந்தியா முதலிய மூன்று இதழ்களும் ஆங்கிலேயர் வழியே சென்றன. 1913-இல் ‘பெரோஸ்ஷா மேத்தர் பாம்பே கிரானிக்கிள்’ என்ற ஆங்கில நாளிதழைத் தொடங்கினார். இது இந்தியர்களின் உரிமைக் குரலையே முழுதும் ஒலித்தது. அன்னிபெசண்ட் அம்மையாரின் ஹோம்ரூம் இயக்கக வெளியீடாக, நியூ இந்தியா (1941), நாளிதழ் மௌலான முகமது அலி தொடங்கிய ‘காம்ரேட் (1911)’, மௌலான அபுல்கலாம் ஆசாத்து நிறுவிய உருது இதழ் அல் ‘ஹிலால்’ வி.எஸ்.விஸ்வநாதன் சாரியார் ஆசிரியராயிருந்த ‘சேர்வண்ட் ஆப் இந்தியா’ (1920) முதலியன யாவும் இந்திய விடுதலை முழுக்க எழுச்சி சங்க நாதங்களாக ஒலித்தன. இதே நேரத்தில் தென்னாப்பிரிக்காவில் இந்தியர் விடுதலைக்காகப் போராடிய மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் ‘இந்தியன் ஒப்பினியன்’ என்ற இதழின் செய்திகள் இந்தியச் செய்தித்தாள்களின் பக்கங்களில் நிரம்ப இடத்தைப் பிடித்துக்கொண்டன.

**இதழியல் துறையில் காந்தியார்**

தென்னாப்பிரிக்காவிலிருந்து தாயகம் திரும்பிய காந்தியார், 1920-இல் இந்திய தேசியக் காங்கிரசின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். ‘இதழ்கள் மக்களின் உண்மையான ஆதரவைப் பெற்று கொள்கையின் சார்பிலேயே நிலைத்து நிற்க வேண்டும்’ என்றும் விரும்பினார். அதன் அடிப்படையிலேயே ‘யங் இந்தியா’ (ஆங்கில நாளிதழ்), ‘நலஜீவன்’ (குஜராத்தி நாளிதழ்) தொடங்க பெற்று எவ்வித விளம்பரங்களும் இல்லாமல் முறையே 45,000 படிகளும், 20,000 படிகளும் விற்கத் தொடங்கின. இவைகளில் இந்து முஸ்லீம் ஒற்றுமை, மதுவிலக்கு கதர்கிராம முன்னேற்றம், கைராட்டையின் பயன்கள், உழவுத்தொழில் வருவாய்ப் பெருக்கும் தீண்டாமை ஒழிப்பு இந்திய மொழிகளின்

வளர்ச்சி, சுதேசிப் பொருள் ஆதரிப்பு முதலியவைகளே பெரும் வரிகளாய் அமைந்தன. தமது வாழ்க்கை வரலாற்றைத் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக இந்தியரில் காந்தியார் எழுதி வந்தார். இதனால் மொழியாலும் இனத்தாலும் பண்பாட்டாலும் வேறுபட்டிருந்த மக்களிடையே ஒற்றுமை உணர்வு தலைதூக்க ஆரம்பித்தது.

காந்தியாரின் செய்கை கண்டு, 'பாம்பே கிரானிக்கிள்' 'இண்டிபென்டெண்ட்' (அலகாபாத்து) 'தி சர்வண்ட்' (கல்கத்தா) முதலிய நாளிதழ்கள் இவருக்கு ஆதரவு தந்தன. அதே சமயம் கி.ஒய்.சிந்தாமணியின், 'லீடர்' என்ற இதழ் வெளிப்படையாகவே தமது எதிர்ப்பை வெளிப்படுத்தின. 1917-இல் வி.எம்.நாயரை ஆசிரியராகக் கொண்டு 'ஜஸ்டிஸ்' என்ற இதழை நீதிக்கட்சி சென்னையிலிருந்து வெளியிட்டது. 1918-இ 'சர்ச்லைட்' என்ற அய்சர்வர்' புள்ளையா என்பவரை ஆசிரியராகக் கொண்டு தெளிந்தது. காந்தியக் கொள்கைகளைப் பரப்புவதற்கொன்றே டி.பிரசாகத்தால் 'போர்வேர்டு' (Forword) என்ற செய்தித்தாளை ஆரம்பித்தார். இவ்வேளையில் நேருவாலும் சி.ஆர்.தாஸ்ஸாலும் ஆரம்பிக்கப்பெற்ற 'சுயராட்சியக்கட்சி'க்கு ஆதரவாக கொள்கை பரப்பும் ஏடாக சர்தார் கே.எம்.பணிக்கரை ஆசிரியராகக் கொண்டு 'இந்துஸ்தான் டைம்ஸ்' வெளிவந்துள்ளது. ஒன்றன் பின் ஒன்றாக சென்குப்தாவின் 'அட்வான்ஸ்' சச்சிதானந்தாவின் 'இந்துஸ்தான் ரிவியூ' ஜி.ஏ.நடேசனின் 'இண்டியன் ரிவியூ', இராமானந்த சட்டர்சியின் 'மார்டன் ரிவியூ' அரவிந்தரின் ஆர்யா 'வந்தே மாதரம்' முகமது அலியின் 'காம்ரேட்' முதலிய இதழ்கள் தோன்றின.

1933-ஆம் ஆண்டு காந்தியாரால் பூனாவிலிருந்து 'ஹரிஜன்' என்ற வார இதழ் வெளியிடப்பட்டது. இவ்விதழின் விலை ஓரணாவாகும். செய்தியாளர்களின்

கூட்டத்தில் எழுந்த ‘ஹரிஜன்’ என்ற சொல்லையே தமது வார இதழுக்குச் சூட்டி அந்தச் சொல்லை நாடு பூராவும் மொழிகள் அனைத்திலும் பரவச்செய்து பெருமை கொண்டார். ‘ஹரிஜன’ இதழ் ஆங்கிலம், இந்தி, தமிழ், தெலுங்கு, ஒரியா, மராத்தி, குஜராத்தி, கன்னடம் முதலிய பல்வேறு மொழிகளிலும் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. காந்தியார் காலத்து நாட்டு உணர்ச்சி தீப்போல் மக்களிடையே பரவியது. இதனால் ஆங்கிலேயர் நடத்திய இதழ்கள் சரியத் தொடங்கின. தேசிய இதழ்கள் அவ்விடத்தைப் பிடித்தன. சென்னையில், ‘மெட்ராஸ் மெயில்’ (Madras) வீழ்ந்து ‘இந்த’ (Hindu) சிறந்தது. ‘பயோனீர்’ இடத்தை ‘டைம்ஸ் ஆப் இந்தியா’வும் ‘ஸ்டேட்மேன்’ இடத்தை லீடரும் (டெய்லி கெஜட்டின் இடத்தை ‘ட்ரிப்யூனும்’ பிடித்தன. 1935-ஆம் ஆண்டு அரசியல் சீர்திருத்தச் சட்டத்திற்குப் பின் தொடர்ந்து பல இதழ்கள் தோன்றின. இவற்றில் சண்டே ஸ்டாண்டர்டு (பம்பாய்-1936) ஸ்டார் ஆப் இந்தியா, இந்துஸ்தான் ஸ்டாடு ஜீகாந்தர் (கல்கத்தா -1937) ∴ரீபிரஸ் புல்லட்டின் பாரதஜோதி (பம்பாய் 1938) நேசனல் ஹெரால்டு (லக்னோ 1938) டான் (தில்லி -1937) இந்துஸ்தான் (தில்லி-1937) பிளிட்ஸ் (பம்பாய்-1941) வந்தே மாதரம் (பம்பாய் -1945), பீபள்ஸ் வார் (பம்பாய்-1942), கல்வி (சென்னை-1495), தினத்தந்தி (மதுரை-1942) குறிப்பிடத்தக்கன.

வளர்ச்சிக்கேற்ப ஆங்கிலேயர்களின் கெடுபிடியால் இதழ்கள் பல தடைசெய்யப்பட்டன. ஆனால் காந்தியாரின் சத்தியாகிரகத் திட்டத்தில், தடைசெய்யப்பட்ட இதழ்களைப் பொதுமக்களுக்குப் படித்துக்காட்டுவதும் முக்கியமான செய்திகளைத் துண்டு பிரசுரங்களாக வெளியிடுவதும் முக்கிய அம்சமாக இருந்தது. 1940-அக்டோபரில் காந்தியாரின் தனிநபர் சத்தியாகிரகம் தொடங்கப்பட்டது. சத்தியாகிரகப் போராட்டத்தைப் பற்றிய செய்திகளை இதழில் வெளியிடக்கூடாது என்று அரசினர் தடைவிதித்ததனால் காந்தியார் ‘ஹரிஜன்’

இதழை நிறுத்திவிட்டார். மீண்டும் இவ்விதரு மகாதேவ தேசாய், சவகர்லால் நேரு, கே.ஜி.மஜ்ரு லாலா ஆர்.ஆர்.திவாகர், ஜி.இராமச்சந்திரன், சி.இராசகோபாலச்சாரியார் போன்ற தேசியத்தலைவர்களின் உணர்ச்சியூட்டும் கட்டுரைகளைத் தாங்கி காந்தியார் மறைவு வரை (1948) வெளிவந்தது.

**சுதந்திரத்திற்குப் பின் இதழியல் வளர்ச்சி**

இந்திய விடுதலையினால் இதழ்கள் முழுகருத்துச் சுதந்திரம் பெற்றன. விடுதலைக்குப் பின்னால் இதழ்கள் இல்கியம், அறிவியல், சமுதாய முன்னேற்றம் முதலிய துறைகளையும் வெளியிட முன்வந்தன. பெரும் நிறுவனங்கள் பெரும் முதலீட்டில் இதழ்களை வெளியிடத் துவங்கின. அவ்வாறு தோன்றிய நிறுவனங்களை 1. ஒரே மையத்திலிருந்து பல இதழ்களை வெளியிடும் நிறுவனங்கள் (Group Publications) 2. ஒரே நிறுவனத்தின் கீழ் பல மையங்களிலிருந்து இதழ்களை வெளியிடும் நிறுவனங்கள் (Chain Publications) 3. பொதுநிர்வாக அமைப்பில் இதழ்களை வெளியிடும் நிறுவனங்கள் (Trust Publications) என்ற பிரிவில் அடக்கலாம்.

1. ஒரே மையத்திலிருந்து பல இதழ்களை வெளியிடும் நிறுவனங்கள் (Group Publications)

அ) நேஷனல் பிரஸ் நிறுவனம் (பம்பாய்)

∴ப்ரீ பிரஸ் ஜெர்னல், ∴ப்ரீ புல்லட்டின், பாரத்ஜோரி நவசக்தி முதலிய இதழ்களை வெளியிடுகிறது.

ஆ) ஆனந்த மபஜார் பத்திரிகா நிறுவனம் (கல்கத்தா)

ஆனந்த பஜார் பத்திரிகா, இந்துஸ்தான் ஸ்டாண்டர்டு, தேஜ் (வங்காள வார இதழ்) ஆகிய இதழ்களை நடத்துகிறது.

இ) கஸ்தூரி & மக்கள் நிறுவனம் (சென்னை)

இந்து, ஸ்போர்ட்ஸ் அண்டு பாஸ்டைம் (இப்போது நிறுத்தப்பட்டுள்ள), வீக்லி ரிவியூ ஆகிய இதழ்களை வெளியிடுகிறது.

2. ஒரே நிறுவனத்தின் கீழ் பல மையங்களிலிருந்து இதழ்களை வெளியிடும் நிறுவனங்கள் (Chain Publications)

அ) எக்ஸ்பிரஸ் செய்தித்தாள் நிறுவனம் (சென்னை)

இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில செய்தித்தாள், சென்னை, மதுரை, பெங்களூர், விஜயவாடா, அகமதாபாத், கொச்சின், பம்பாய், தில்லி, முதலிய எட்டு இடங்களிலிருந்து வெளியாகிறது. இத்துடன் தினமணி (தமிழ்), லோக சாட்ட (மராத்தி), ஆந்திர பிரபா (தெலுங்கு), பைனான்சியல் எக்ஸ்பிரஸ், ஸ்கிரீன் (ஆங்கிலம்) முதலிய இதழ்களையும் இந்நிறுவனம் வெளியிடுகிறது.

ஆ) பென்னட் கோல்மேன் குழுமம் (பம்பாய்)

டைம்ஸ் ஆப் இந்தியா (பம்பாய், தில்லி), நவபாரத டைம்ஸ் (பம்பாய், தில்லி) ஈவினிங் நியூஸ் ஆப் இந்தியா, இல்லஸ்ட் ரேட்டட் வீக்லி ஆப் இந்தியா, எக்னாமிக் டைம்ஸ், மகாராஷ்டிரா டைம்ஸ், பிலிம் பேர் பெமினா, தர்மயோக்பாரசு, சாரிகா, மாதுரி, இந்திரஜாகாமிக்ஸ், தினமான் முதலிய இதழ்களை வெளியிடுகிறது.

இ) இந்துஸ்தான் டைம்ஸ் அண்டு அல்லெய்டு பப்ளிகேசன் (தில்லி)

இந்துஸ்தான் டைம்ஸ், இந்துஸ்தான் டைம்ஸ் ஈவினிங் நியூஸ், இந்துஸ்த்தான் சாப்தஹிக், இந்துஸ்தான் பிலிம் விசேஷங்க் ஆகிய இதழ்களைத் தில்லியிலிருந்தும், லீடர் பாரத் போன்ற இதழ்களை அலகாபாத்திலிருந்தும், சர்ச்லைட், பிரதீப் ஆகிய இதழ்களை பூனாவிலிருந்தும் வெளியிடுகிறது. தொழில் அதிபர் ஜி.டி.பிரிலாவின் கட்டுப்பாட்டில் இந்நிறுவனம் இயங்கி வருகின்றது.

3. பொதுநிர்வாக அமைப்பில் இதழ்களை வெளியிடும் நிறுவனங்கள் (Trust Publications)

சௌராஷ்டிரா டிரஸ்ட் நிறுவனம்: ஜன்ம பூமி குஜ்மித்ரா ஆகிய இதழ்களை வெளியிடுகிறது. திலகரால் ஆரம்பிக்கப்பெற்ற பூனாவிலுள்ள கேசரிடிமகாராட்ட டிரஸ்ட் கேசரி (ஆங்கிலம்) மராட்டா (மராத்தி) சாகியத்திரி முதலிய இதழ்களை வெளியிடுகிறது. கர்நாடக மாநில ஹீப்ளியில் உள்ள லோக சிக்கன்ன டிரஸ்ட் சமயுத்த கர்நாடகா, கர்ம வீரர்க்ஸ்தூரி முதலிய இதழ்களையும், சென்னையிலுள்ள தினத்தந்தி டிரஸ்ட் தினத்தந்தி நாளிதழ், வாராந்தரி ராணி, ராணிமுத்து முதலிய இதழ்களை வெளியிடுகின்றது.

1949-இல் இராய்டரின் ஒப்பந்தத்துடன் பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா (Press Trust of India) தொடங்கப்பட்டது. இதனால் இந்திய இதழ்களின் செல்வாக்கு உயர்ந்து, சுவிட்சர்லாந்திலுள்ள உலகநாடுகள் செய்தித்தாள் நிறுவனத்தில் (International Press Institute IPI) உறுப்பு நாடாகியது. இந்நிறுவனத்தின் இந்தியக்கிளைக்கு இந்து நாளிதழ் ஜி.நரசிம்மன் தலைவராகப் பணியாற்றினார். மேலைநாடுகளில் நம்நாட்டுச் செய்தியாளர்களும் நம் நாட்டில் தலைவராகப் பணியாற்றினார். மேலைநாடுகளில் நம்சாட்டுச் செய்தியாளர்களும் நம் நாட்டில் அயல்நாட்டுச் செய்தியாளர்களும் இதன்மூலம் பணியாற்றினர். இந்திய குடியரசானபின், இந்திய அரசியல் அமைப்புச்சட்டத்தின் 13, 19-ஆம் பிரிவுகள் இதழ்களின் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பு அளித்தது என்றாலும் 1951-இல் நாடாளுமன்றத்தில் உள்துறை அமைச்சராக இருந்த இராஜாஜியால் கொண்டு வரப்பட்ட ‘இதழ்கள் சட்டம்’ (சட்டத்திற்குப் புறம்பான செய்தியாகக் கருதப்பட்டால் இரண்டாயிரம் ரூபாய் அபராதமும், ஆறுமாதச் சிறைத்தண்டனையும் அளிக்க வகை செய்தல்) இன்றுவரை வேண்டும்

பொழுதெல்லாம் இதழியல் துறையை அச்சுறுத்தும் தன்மை வாய்ந்ததாக உள்ளது.

இந்திய அரசியல் சட்ட இதழ்கள் சட்டத்தின் 19-ஆம் பிரிவு திருத்தப்பட்டதனால், அனைத்து இந்தியச் செய்தித்தாள் ஆசிரியர்கள் அமைப்பும் (All India News Paper Editor’s) இந்திய உழைக்கும் இதழாளர்கள் கழகமும் (Indian Fedaratin of Working Journalists) தோன்றின. இவற்றின் வற்புறுத்தலினால் 1952-இல் இதழ்கள் பற்றிய விசாரணைக்குழு (Press Commission of India) பம்பாய் உயர்நீதி மன்ற நீதிபதி ஜி.எஸ்.இராஜாதிடியாக்ஷா தலைமையில் ஏற்பட்டது. இக்குழுவில் நாடறிந்த சி.பி.இராமசாமி ஐயர், வி.கே.ஆர்.வி.ராவ், ஆச்சர்ய நரேந்திரதேவ், ஜாகிர்உசேன், பி.எச்.பட்டவர்த்தன், டி.என்.சிங்.ஜெய்பால் சிங், ஏ.ஆர்.பட், எம்.சலபதிராவ், ஏ.டி.மணி, ஜெ.நடராஜன் முதலியோர் உறுப்பினர்களாக இருந்தனர். இக்குழுவின் பரிந்துரையால் இதழியல் துறையில் பணியாற்றுவோருக்குக் குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயிக்கும் சட்டத்தை அரசு இயற்றியது. செய்தித்தாள் பதிவாளர் அலுவலகம் (Institution of the press Registar) டில்லியில் நிறுவப்பட்டது. இந்தியாவில் நடத்தப்படும் அனைத்து இதழ்களின் புள்ளி விவரவங்களையும் இது தொகுத்து ஆண்டுதோறும் புத்தகமாக வெளியிடுகிறது.

இதழ்களும் தங்களின் விற்பனையைப் பெருக்க இதழ்களில் சிறப்புப் பகுதிகள், பொழுதுபோக்குப் பகுதிகள், அறிவுப்போட்டிகள், பெண்கள் பகுதி, வீட்டுக்குறிப்புகள், திரைப்படம், விளையாட்டுத் துறைகள், அறிவியல் பகுதிகள் பேனர்ற பிரிவுகளைத் தொடங்கின. இதழியல் துறை, நாளும் தலைசிறந்த இதழாசிரியர்களையும் எழுத்தாளர்களையும் கொண்டு ஏறுநடை போட்டது. அவர்களுள் குறிப்பிடத்தகுந்தவர்கள் காசா சுப்பாரால், போத்தன் ஜோசப்,

பி.சிவராவ், துர்ககாதாஸ்ஸம், சலபதிராவ், என்.இரகுநாத ஐயர், பிராங்மோரியசு, டி.எஸ்.சொக்கலிங்கம், ஏ.எண்.சிவராமன் முதலியோராவர்.

இந்தியாவின் முதல் தேர்தல் (1952) முதற்கொண்டு மக்களுக்குத் தேர்தல் முறையைக் கற்றுத்தந்தவை இதழ்களேயாகும். குடியரசு நாட்டின் தேர்தல் முறைகள் வாக்களிக்கும் முறைகள், வாக்குச்சீட்டுகளைப் பயன்படுத்தும் முறை, தொகுதிகள் பற்றிய விளக்கங்கள் இவற்றைத் தெளிவாக மக்களுக்குத் தேசிய இதழ்களும், வட்டார வாக்குகளின் எண்ணிக்கை, வாக்குகள் வேறுபாடு, தொகுதிவாரியான வாக்குகள் வேட்பாளர் பற்றிய அறிமுகங்கள் வெளியிட்டன. தொகுத்துத் தந்தன, அமைச்சரவை அழைப்புகளைப் புகைப்படங்களுடன் வெளியிட்டன. நேரு காலத்தில் தேவை ஏற்படும்போது கூட இந்தியப் பாதுகாப்புச்சட்டம் இதழ்களின் மீது பாயக்கூடாது என்று கருதினார். ‘அரசை விமர்சனம் செய்யும் இதழ்களே ஒரு நாட்டின் உண்மையான எதிர்க்கட்சி’ என்றும் அவர் வெளிப்படையாகக் கூறினார்.

**நெருக்கடிக் காலமும் இதழ்களும்**

ஆனால் இந்தியநாட்டின் தலைமை அமைச்சராக இருந்த இந்திராகாந்தியால் 1975-ஆம் ஆண்டு ஜுன் 25-ஆம் நாள் நெருக்கடி நிலைச்சட்டமான ‘உள்நாட்டுப் பாதுகாப்புப் பராமரிப்புச் சட்ட்’ (Maintenance of Internal Security Act) குடியரசுத் தலைவர் கையொப்பமிட்டு அமுலுக்க அன்றிரவேவந்தது. இச்சட்டத்தால் இதழியல் துறை பல இன்னல்களைச் சந்தித்தது. ஜுன் 26-ஆம் நாள் டெல்லி, பஞ்சாப் மத்தியப் பிரதேசம், முதலிய இடங்களிலிருந்து செய்தித்தாள்கள் வெளிவரவில்லை. எல்லாச் செய்திகளையும் முன் தணிக்கையாக ஒப்படைக்குமாறு அரசு ஆணை பிறப்பித்தது. தணிக்கை விதிமுறை நகல்களை வழங்கியதோடு எவற்றையெல்லாம் வெளியிடக் கூடாதென்றும், வரையறை செய்தது. ஸ்டேட்ஸ்மேன், இந்துஸ்தான் டைம்ஸ்

இதழ்கள் பெரிதும் தொல்லைகளுக்கு இலக்காகி, இந்துஸ்தான், டைம்ஸ் விற்பனையிடங்களிலிருந்து பறிமுதல் செய்யப்பட்டது. செயப்பிரகாசர் நடத்திய எவ்ரிமேன், பிரஜா நிதி பிலுமோடியின் பார்ச் ஆப் இண்டியா போன்ற இதழ்களும் நின்றுவிட்டன. மதர்லேண்ட், ஆர்க்னைசர் போன்ற ஜனங்க இதழ்கள் தடைசெய்யப்பட்டன. பல நாளிதழ்களில் தலையங்கத்தின் இடம் வெற்றிடமாகவே வெளிவந்தது. முரசொலி இதழ் 'விளக்கெண்ணையும் வெண்டைக்காயும்' என தலையங்கம் தீட்டித் தன் வயிற்றெரிச்சலைக் காட்டியது.

**சமாச்சார் தோற்றம்**

வெளிநாட்டு இதழ்கள் சில அரசை விமர்சனம் செய்தன எனக் காரணங்காட்டி அவைகள் உள்நாட்டில் அனுமதிக்கப்படவில்லை. இலண்டன் டைம்ஸ், நியூஸ் வீக், இலண்டன் டெய்லி, டெலிகிராப் முதலிய வெளிநாட்டு இதழ்களின் செய்தியாளர்களை வெளியேற்றியது. 'அனைத்துலகச் செய்தித்தாள் நிறுவனம்' (International Press Institute) தணிக்கை முறையை நீக்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டது. ஆனால் அரசோ ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நடைமுறையிலிருந்த 'அரசுக்குப் புறம்பான செய்திகளைத் தடைசெய்யும் சட்டத்தை' (Prevention of Publicational Objectionable Matter Act) மீண்டும் கொண்டு வந்தது. பி.டி.ஐ.யு.என்.ஐ, இந்துஸ்தான் சமாச்சார், சமாச்சார் பாரதி முதலிய நான்கு செய்தி நிறுவனங்களும் இணைக்கப்பட்டு சமாச்சார் என்ற பெயர்பெற்றது. இவ்வமைப்பிற்குத் தலைவர் ஒருவருடன் பதினைந்து உறுப்பினர்களையும் ஜனாதிபதி நியமித்தார். பதினெட்டு மாதங்கள் இந்திய இதழ்கள் இருபது அம்சத்திட்டம் (20 Points Programme) ஒன்றையே இடைவிடாது பரப்பின.

**1980-க்குப் பின் இதழ்கள்**

1977-இல் தேர்தல் அறிவிப்பு வந்தது. 1977 மார்ச்சுத் திங்கள் மொராஜிதேசாயைத் தலைமை அமைச்சராகக் கொண்டு நடுவண் அரசு அமைந்தது. இவ்வாட்சியில் இதழ்களுக்கு மீண்டும் சலுகைகளும், உரிமைகளும் கிட்டின. சரண்சிங் தலைமை அமைச்சராய்த் திகழ்ந்த காலத்திலும் இதழ்கள் தொடர்ந்து உரிமையோடு தம் பணியைச் செய்தன. மீண்டும் இந்திரா அம்மையார் 1980-இல் நடுவண் அரசின் தலைமை அமைச்சர் ஆனார். இதழ்களின் சுதந்திரம் தடுக்கப்படாமல் உரிமையோடு தொடர்ந்து தம் பணியைச் செய்து வருகின்றன.

கைப்பிரதியாய்த் தோன்றி, அச்சுக்கலையினால் அழகு பெற்று தனக்கென்று பல நிறுவனங்களையும், தொடர்புகளையும் பெற்று உடனுக்குடன் மக்களுக்குச் செய்திகளைப் பல்வகையில் தரும் அரிய கலைப் பொக்கிஷமாக இத்துறை இந்தியாவில் இன்று விளங்குகிறது. இத்துறை இதழ்கள் பொய்மைக்கு இடந்தராது வாய்மைக்கு இடம் தந்தது. பல்வேறு இடங்களில் முன்னேறி இந்திய வரலாற்றில் அழியா இடம் பெறும் என்பது திண்ணம்.

பாடம்–2

# இதழ்களும் இதழாசிரியர்களும்

ஒரு நாளிதழின் இதயம் ஆசிரியர்தான் என இதழியல் வல்லுநர் மேத்தா கூறியுள்ளார். ஒரு நாளேட்டின் தரமும் தனித்தன்மையும் அதனுடைய ஆசிரியர் பகுதியைச் சார்ந்ததாகும். இப்பொறுப்பை தலைமை ஆசிரியர் ஏற்றுக்கொள்கிறார். இவருக்குத் துணையாக ஒவ்வொரு பகுதிக்கும் ஓராசிரியரும், துணையாசிரியரும், செய்தியாளர்களும் எழுத்தாளர்களும் பணிபுரிவர்.

**பாரதிக்கு முன்**

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி. இதனை இந்திய விடுதலை இயக்க காலமாகக் கொள்ளலாம். பெருவெள்ளம் போன்று நாட்டுப்பற்றும் விடுதலை உணர்வும் பெருக்கெடுத்து ஓடியதால் இதழ்களிலும் விடுதலை இயக்கத்தின் தாக்கம் இருந்தது. இக்காலத் தமிழ் இதழ்களின் வளர்ச்சிப்போக்கில் இதனை வெளிப்படையாக காணலாம். இதழ்களை நடத்தியவர்களும், இதழில் பணியாற்றியவர்களும், எழுதியவர்களும் பெரும்பாலும் தேசிய இயக்கங்களில் நேரடியாகப் பங்குபெற்றவர்கள். ஆதலால் இதழ்களும் அவர்களது வழியிலேயே நடைபயின்றன.

சுதேசமித்திரன் தமிழில் முதல் அரசியல் இதழென்ற புகழுக்குரிய சுதேசமித்திரனை 1882-இல் வார இதழாகத் தொடங்கி 18870இல் வாரம் மும்முறையாகி 1889-இல் நாளிதழாக மாற்றி நடத்தி வந்த ஜி.சுப்பிரமணிய ஐயர் இந்திய தேசிய காங்கிரசில் தொடக்கத்திலிருந்தே பெரும்பங்கு பெற்றவர். ஆதலால் தேசிய உணர்வின் உந்துதலோடு சுதேசமித்திரனையும் நடத்தினர். 1918-இல் ஏ.ரெங்கசாமி ஐயங்கர் இதன் ஆசிரியரானார். பத்தாண்டுகளுக்குப் பின்னர் சி.ஆர்.சீனிவாசன் இதன் ஆசிரியராகி ஐம்பதாண்டுகள் இதனை நடத்தி வந்தார்.

**பாரதியார்**

1904-இல் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் சுதேசமித்திரனில் துணையாசிரியராக சேர்ந்தார். அக்கினிக்குஞ்சாக விளங்கிய அவரது புரட்சி கருத்துக்களாலும் வளமான உரைநடையாலும் சுதேசமித்திரன் புதுப்பொலிவோடும் வலுவோடும் வெளிவந்தது. கவிதையில் உரைநடையின் எளிமையையும் உரைநடையில் கவிதையின் வளத்தையும் ஏற்றிய பாரதியாரின் எழுத்து தமிழ்மக்களைத் தட்டி எழுப்பிது.

1905-இல் வங்காளத்தைப் பிரித்த பொழுது நாடே கொதித்தெழுந்தது. மகாகவி பாரதியார், இந்திய அரசியலில் தீவிரவாதிகளின் தலைவராக விளங்கிய பாலகங்காதர திலகரைப் பின்பற்றிப் புரட்சி கவிஞராக ஒளிர்ந்தார். தன்னைப் போன்ற தீவிரக் கருத்துக்கொண்டவர்களோடு சேர்ந்து 1907-இல் இந்தியா என்ற தமிழ்மாத இதழையும், ‘பாலபாரதி’ என்ற ஆங்கில வார இதழையும் தொடங்கினார்.

மகாகவி பாரதியார் இந்தியா இதழை ஒரு புரட்சிகரமான இதழாக நடத்தியதை அவர் அறிவித்திருந்த சந்தா விவரத்திலிருந்தே அறிந்துகொள்ளலாம். இந்தியா இதழுக்கு அவர் அறிவித்திருந்த ஆண்டு சந்தா விவரம்

எல்லா கவர்மெண்டாருக்கும் ரூ.50

ஜமீன்தாரர்கள் ராஜாக்களுக்கு ரூ.30

மாதம் ரூ.200-க்கு மேற்பட்ட வருமானம் உள்ளவர்களுக்கு ரூ.15

மற்றவர்களுக்கு ரூ.3

அரசின் கடுமையான போக்கின் விளைவாக மகாகவி பாரதியார் பாண்டிச்சேரியில் குடியேறினார். அவர் நடத்திய இதழ்கள் சென்னையிலும்

புதுச்சேரியிலும் வெளிவந்தன. நிதிநெருக்கடியால் அவரால் தொடர்ந்து நடத்த இயலவில்லை. 1910-இல் அவை நின்றுவிட்டன. பாரதியார் சென்னைக்குத் திரும்பியபின் மறுபடியும் சுதேசமித்திரனில் பணியாற்றினார். அவர் தனது 39-ஆம் வயதிலேயே காலமாகிவிட்டதால் அவரது இதழில் சாதனைகளும் நடுவிலேயே நின்றுபோயின.

**திரு.வி.க.**

திரு.வி.க. 1917-இல் தேசபக்தன் என்னும் நாளிதழைத் தொடங்கினார். சுதேசமித்திரனுக்குப் பிறகு தமிழகத்தில் முரசு கொட்டிய நாளிதழ் தேசபக்தன். திரு.வி.க. தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர். சிறந்த சீர்திருத்த உள்ளத்தினர். இவற்றோடு அவரது தமிழ் புலமையும், சேர 'தேசபக்தன்' தெருவெங்கும் தமிழ் முழக்கமும், தேசிய முழக்கமும் செய்கின்ற இதழாக வெளிவந்தது. அன்று தமிழகத்தில் இளைஞர்களின் உள்ளம் கொண்ட இதழாக தேசபக்தன் திகழ்ந்தது. பின்னர் வ.வே.சு. ஐயர் இவ்விதழ் பொறுப்பேற்றார். ஆனால் 1920-இல் இவ்விதழ் நின்றது.

திரு.வி.க. அவர்களின் இதழியல் பணி தொடர்ந்தது. அவர் நவசக்தி என்னும் வார இதழைத் தொடங்கினார். இருபது ஆண்டுகள் இவ்விதழைத் திறம்பட நடத்தினார். இவ்விதழின் மூலம் எழுத்துலகிற்கு வந்து புகழ்பெற்றவர்களுள் கல்கி இதழின் ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தியும் கலைமகள் இதழாசிரியர் கீ.வா.ஜகந்நாதனும் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

**கல்கி**

நவசக்தியில் துணை ஆசிரியராக விளங்கிப் பயிற்சி பெற்று ஆனந்தவிகடன் ஆசிரியராக விளங்கிய கல்கி அடுப்பூதும் பெண்களையும் இதழ்படிக்க வைத்தவரானார்.

கல்கி கிருஷ்ணமூர்த்தியின் இதழியல் பணியைத் தேசீயம் வளர்த்த தமிழ் என்னும் நூலின் ஆசிரியர் கா.திரவியம்,

“வாழ்வோடு ஒட்டிய வளமான தமிழ்நடையில் தமிழ்ப்பற்றையும், தேசிய உணர்வையும் குழைத்து அடிமைத்தனத்திற்கு மருந்தாகவும், ஆர்வத்துக்கு விருந்தாகவும் பாமரர்க்கும் படித்தோருக்கும் இடையில் பாலமாகவும் பத்திரிக்கையைப் பயன்படுத்துவதில் இந்தத் தலைமுறையில் இணையற்ற வெற்றிக்கண்டவர் கல்கியாவார்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

**ஈ.வே.ரா**

தமிழ் இதழியல் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு புரிந்தவர்களில் பெரியார் ஈ.வே.ராமசாமி குறிப்பிடத்தக்கவர். இவர் குடியரசு என்ற இதழைத் தொடங்கி, நாட்டின் விடுதலை இயக்கத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் தேடினார். இவர் காங்கிரசுக் கட்சியை விட்டு வெளியேறி பிறகு, இவ்விதழும் காங்கிரசுக்கு எதிராகச் செயல்பட்டது. தந்தை பெரியார் பிராமணர் அல்லாதாரின் நல இயக்கத்தில் ஈடுபட்டபின் 1936-இல் விடுதலை இதழைத் தொடங்கினார். திராவிட இயக்கத்தின் தாய் இதழ் இதுவாகும்.

**டி.எஸ்.சொக்கலிங்கம்**

‘பேனா மன்னன்’, பத்திரிக்கை உலக ஜாம்பவான், பத்திரிக்கை உலகப் பிரம்மா என்றெல்லாம் அழைக்கப்பட்டவர் டி.எஸ்.சொக்கலிங்கம் ஆவார். விடுதலை போருக்கு இவரும் இவர் இதழும் ஆற்றிய அரும்பணியை அளவிட்டுக்கூற முடியாது. 18 வயதில் இதழில் எழுதத்தொடங்கிய சொக்கலிங்கம் 68 வயது வரை ஓயாது எழுதிக்கொண்டே இருந்தார்.

சொக்கலிங்கம் 1923-இல் சேலம் சென்று ‘தமிழ்நாடு’ வார இதழில் துணை ஆசிரியராகச் சேர்ந்தார். 1927-இல் சென்னையில் நாளிதழாக மாறியதும்

அதன் நிர்வாக ஆசிரியர் ஆனார். 1931-இல் தாமே ‘காந்தி’ என்ற வாரம் இருமுறை வெளிவரும் இதழைத் தொடங்கினார். வந்தே மாதரம் என்ற நாளிதழையும் நடத்தினார். அறப்போராட்டம் தொடங்கக் காங்கிரசு தீர்மானித்த செய்தியை வெளியிடக்கூடாது என அரசு தடைவிதித்தது. அந்தச் செய்தியை காந்தி இதழில் இவர் வெளியிட்டார். இதன் விளைவு அரசு, ஆறுமாத சிறை தண்டனையும், 200 ரூபாய் தண்டமும் இவருக்கு விதித்தது.

அவர் சிறையிலிருந்து வெளிவந்ததும் மீண்டும் காந்தியைத் தொடங்கினார். 1933-இல் ‘காந்தி’யை நாளிதழாக மாற்றினார். இதழின் விலை காலனா என்றாலும் சூடான செய்திகளைச் சுவையாகக் கொடுத்தது. இதழுலகில் சூறாவளியைக் கிளப்பியது. காந்தி ஒரு விஷயத்தைச் சொல்லுகிறது என்றால், சென்னையிலுள்ள காந்தி பத்திரிக்கை சொல்லுகிறதா அல்லது மகாத்மா காந்தியே சொல்லுகிறாரா என்று சந்தேகப்படும்படி ஏற்பட்டுவிட்டது என இராஜாஜியே குறிப்பிட்டுள்ளார்.

சொக்கலிங்கம் 1944-இல் தினசரியைத் தொடங்கி நடத்தினார். விடுதலைப்போர் உச்சத்தில் இருந்த நேரம் அது. சொக்கலிங்கத்தின் பேனா பரபரப்பாக இயங்கியது. இவரே ஜனயுகம், பாரதம், நவசக்தி ஆகிய இதழ்களையும் நடத்தினார்.

**சி.என் அண்ணாதுரை**

பேரறிஞர் அண்ணா தலைசிறந்த பத்திரிக்கையாளர். முதலில் தந்தை பெரியாரின் விடுதலையில் துணை ஆசிரியராக அரும்பணியாற்றியவர். திராவிட நாடு மாலைமணி, காஞ்சி, நம்நாடு ஆகிய தமிழ் இதழ்களையும் ஹோம்லாண்டு ஆங்கில இதழையும் நடத்தினார். திராவிட இயக்கத்தின் கொள்கை பரப்பு ஏடுகளான இவற்றை நடத்தியவர், கைப்பொருள் இழந்தவர். அதே சமயம் இவ்விதழ்கள் அவரது எழுத்தாற்றலைப் பல்வேறு துறைகளில் வெளிப்படுத்த

நல்ல வாய்ப்புகளை நல்கின. சிந்தனையைத் தூண்டும் சீர்திருத்தமணம் கமழும் சிறுகதைகள், கட்டுரைகள், மடல்கள், புதினங்கள், நாடகங்களை எழுதிருவித்தார்.

நவயுகம் என்னும் ஏடுதான் அண்ணாவை தமிழ் எழுத்துலகிற்கு அறிமுகப்படுத்தியது. தன் பெயரில் மட்டுமின்றி ‘பரதன்’, சௌமியன் ஆகிய புனைப்பெயர்களிலும் கதை கட்டுரைகள் எழுதி வெளியிட்டார்.

விடுதலை ஏட்டில் அண்ணா தீட்டிய தலையங்கங்கள் நெஞ்சை அள்ளும் ஆற்றல் படைத்தவை. மறைந்தாயோ செல்வமே, கல்கத்தா காய்ச்சல், அதிர்ச்சி வைத்தியம், ஓமான் கடற்கரையிலே ரிப்பன் கட்டிடத்துச் சீமான்கள் முதலியன அவற்றுள் குறிப்பிடத்தக்கவை. விறுவிறுப்பான வீரநடையில் காங்கிரஸ் ஏடுகளுக்கு சூடாகப் பதில்கொடுத்தார் அண்ணா.

திராவிட நாடு ஏட்டினை 1934-இல் தோற்றுவித்தார். இந்த ஏட்டிலேயே ஓரிரு பக்கங்களைத் தவிர மற்றவை யாவும் என்னாலேயே எழுதப்படுபவை என்று அண்ணாவே கூறியுள்ளார். இதில் சுவர் தீட்டிய ‘தம்பிக்குக் கடிதம்’ பகுதி மடல் இலக்கியத்தைப் பிரபலப்படுத்தியது. ஆந்திரகேசரி பிரகாசத்திற்கும், ஓமாந்தூர் இராமசாமியாருக்கும் முதலமைச்சர் பதவிக்கு ஏற்பட்ட போட்டி பற்றி திராவிட நாட்டில் திறனாய்வு செய்திருந்தார் அண்ணா. அக்கட்டுரைகள் வகுப்புக் கலவரங்களைத் தூண்டுவதாகக் குற்றம் சாட்டி ரூ.3000 பிணையத் தொகையாகக் கட்டும்படி ஆணையிட்டது அரசாங்கம். வாசகர்கள் வழங்கிய நன்கொடை கொண்டு அண்ணா அதனைக் கட்டினார். மேல்முறையீட்டில் உயர்நீதிமன்றம் அரசு ஆணையைத் தள்ளுபடி செய்தது. திரும்பக் கிடைத்த மூவாயிரத்தை நன்கொடையாளர்களுக்கே திருப்பி அனுப்பினார் அண்ணா.

1943-இல் அண்ணா எழுதிய ‘ஆரியமாலை’ நூலுக்கு 1950-ஆம் ஆண்டு தடைவிதித்து வழக்குப்போட்டது. அரசு நீதிமன்றம் அண்ணாவைக் குற்றவாளி

என்று தீர்ப்பளித்து ரூபாய் 700 அபராதம் அல்லது ஆறு மாதம் என தண்டனையும் விதித்தது. எழுத்துரிமைக்காகச் சிறைசென்று தியாக வேள்வியில் குதித்தார். அவரது மணிமொழிகளைத் தாங்கி இனி எழுச்சியைத் தூண்டும் வகையில் அமைந்த நூல் இலட்சிய வரலாறு அதற்கும் தடை விதித்து வழக்கு தொடர்ந்தது அரசு. அதிலும் நீதிக்குப் போராடி வெற்றிபெற்றார்.

திராவிட முன்னேற்றக்கழகம் உருவானதைத் தொடர்ந்து ‘மாலைமணி’ நாளேட்டின் ஆசிரியர் பொறுப்பேற்றார். 1953-ஆம் ஆண்டு ‘நம்நாடு’ நாளேடு கட்சியின் அதிகாரப்பூர்வமான ஏடாக வெளியாயிற்று. பொதுச்செயலாளரான அண்ணா அதன் ஆசிரியராகவும் பணியாற்றினார். பின்னர் ஹோம்லாண்டு ஆங்கில ஏட்டையும், காஞ்சி இதழையும் தொடங்கினார்.

பல்வேறு இதழ்களில் அண்ணா அவ்வப்போது தீட்டிய கட்டுரைகளும், சிறுகதைகளும், நெடுங்கதைகளும் சமூக மறுமலர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்தன.

**ஏ.என் சிவராமன்**

ஏ.என் சிவராமன் ஒத்துழையாமை இயக்கத்தில் இருமுறை சிறை சென்றவர். வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகத்தில் பங்கெடுத்தவர். ‘தமிழ் ஹரிஜன்’ இதழின் ஆசிரியராக மகாத்மாவாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டவர். பேனா மன்னன் டி.எஸ்.சொக்கலிங்கத்திற்குப் பிறகு தினமணி ஆசிரியர் பதவியை ஏற்று சிறப்பாக பணியாற்றினார். இதழியல் துறைக்கு அவர் ஆற்றிய அருந்தொண்டிற்காக அவருக்குப் பஜாஜ் விருது கிடைத்தது.

மிகச்சிக்கலான செய்திகளையும் சிறப்புக் கட்டுரைகள் வாயிலாக உள்ளங்கை நெல்லிக்கனி போல விளக்கிவிடுவார். அவர் கணக்கர், குமாஸ்தா, சீடன் போன்ற பல புனைபெயர்களில் சிறப்புக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

ஈழத்தமிழர் பிரச்சனை, தேர்தல் முறை, கல்விச்சீர்திருத்தம், பயிற்றுமொழி, நாணயமதிப்பு, குறைப்பு, விண்வெளிப் பயணம் போன்றவற்றையெல்லாம் பல்லாயிரக்கணக்கான வாசகங்களுக்குப் புரிய வைத்திருக்கிறார்.

ஆங்கில நாளேடுகளைப் போலவே தினமணியிலும் அரசியல் தலைவர்கள் எழுதும் சிறப்புக் கட்டுரைகளையும் புகுத்தினார். தினமணிச் சுடரில் பயனுள்ள அறிவியல் கட்டுரைகள் வெளிவரச் செய்தார். ஆங்கில நாளேடுகளைப் போலவே நாள்தோறும் விளையாட்டரங்கச் செய்திகளையும், அங்காடி நிலவரத்தையும் வெளியிடும் தமிழ் இதழ் தினமணியே. கிட்டதட்ட அரை நூற்றாண்டுக் காலம் தமிழ் இதழ்களுக்குத் தொண்டாற்றி சிறப்பித்தவர் சி.என்.எஸ் ஆவார்.

**சி.பா.ஆதித்தனார்**

தமிழன், தினத்தந்தி, மாலைமுரசு ஆகிய பத்திரிக்கைகள் நிறுவியவர் சி.பா.ஆதித்தனார். அவர் ஒரு பிறவி பத்திரிக்கையாளர் எனலாம். லண்டனில் படித்த ஐந்து ஆண்டுகளிலும் செலவுக்கு வேண்டிய பணத்தை பத்திரிக்கைகளுக்குக் கதை, கட்டுரை, கடிதங்கள் எழுதித் தானாகவே சம்பாதித்துக் கொண்டவர். 1942-ஆம் ஆண்டு தமிழன் வார இதழைத் தொடங்கினார். தமிழ்ப்பத்திரிக்கை உலகில் ஒரு புரட்சியை உண்டாக்கியது தமிழன்.

அடுத்து 1942-இல் மதுரையில் தந்தி நாளிதழைத் தொடங்கினார். தினத்தந்தியை ஆதித்தனார் வாழ்க்கைப் போராட்டம் என்றே சொல்லலாம். பல இன்னல்கள், இழப்புகளுக்கு இடையே அதை வளர்த்தார். தினத்தந்தி தொடங்கியபோது உலகப்போர் நடந்து கொண்டிருந்ததால் பத்திரிக்கைக் காகிதம் கிடைக்கவில்லை. ஆதித்தனாரே காகிதம் செய்தார். அதற்கு தமிழன் கைக்காகிதம் என்று பெயர் வைத்தார். அதிலேதான் தந்தி அச்சிடப்பட்டது.

அக்காலத்தில் சென்னைக்கு வெளியே நாளிதழ்கள் தொடங்கப்பட்டது நடத்தப்பட்டது கிடையாது. மதுரையில் தொடங்கப்பட்ட முதல் நாளிதழ் ‘தந்தி’தான் உள்ளுர் செய்திகளைப் பகிர்ந்து கொள்ள வேறு பத்திரிக்கைகள் இல்லாததால் தினத்தந்தியை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. எனவே மதுரையிலிருந்து 150 மைல்களுக்குள் இருப்பவர்களுக்கு அன்றைய செய்திகள் அன்றே வழங்கப்பட்டது.

தமிழ் பத்திரிக்கைகளில் நாள்தோறும் தொடர்ந்து கருத்துப்படம் வெளியிட்டவர் ஆதித்தனார்தான். படக்கதை சிரிப்பு, கதைகள், கேள்விபதில், திரைப்படச் செய்திகள் போன்ற பொழுதுபோக்கு அம்சங்களுக்கு வழிகாட்டியதும் தந்திதான்.

படித்தவர்கள் தான் பத்திரிக்கை படிப்பார்கள், படிக்க முடியும் என்ற நிலையை மாற்றியவர் ஆதித்தனார். அவருடைய நோக்கம் சாதாரணக் கூலியாள், ரிக்ஷா இழுப்பவன் ஆகியோரையும் பத்திரிக்கை படிக்க வைக்க வேண்டும் என்பது அந்த நோக்கத்தை அவர் நிறைவேற்றி விட்டார் என்கிறார் சோமலெ.

தந்தியை மக்கள் பத்திரிக்கையாக நடத்தினார். ‘மக்கள் தமிழிலேயே’ செய்திகளை எழுதினார். புலவர் தமிழை கல்கி எளிய தமிழாக ஆக்கினார். தந்தி மக்கள் தமிழாக ஆக்கியது என்பார் ஆதித்தனார். புள் என்று புலவர்கள் எழுதியதை ‘பறவை’ என்று கல்கி எழுதினார். ‘குருவி’ என்று எழுதவைத்தார் ஆதித்தனார். பேச்சுத் தமிழை கொச்சை நீக்கி எழுத வேண்டும் என்பது தந்தியின் பொற்சட்டம் ஆகும்.

1948-இல் தந்தி என்ற பெயர் தினத்தந்தியாக மாறியது. காலை எழுந்ததும் தந்தி என்று சொல்லும் அளவுக்கு தமிழர்களின் வாழ்வுடன் தினத்தந்தி ஒன்றிவிட்டது.

மேலைநாடுகளில் போல தமிழகத்திலும் மாவட்டப் பத்திரிக்கைகள் தோன்ற வேண்டும் என்று ஆதித்தனார் ஆசைப்பட்டார். மாலைமுரசு பத்திரிக்கையைத் தொடங்கி வைத்தார். முதன்முதலாக அதிக இடங்களில் அச்சிடப்பட்ட பத்திரிக்கை என்ற சிறப்பும் தினத்தந்திக்கு உண்டு.

நாள்-தாள்-எழுத்தாளர் கையேடு வெளியிட்டுத் தமிழில் நடைஏடு இல்லாத குறையைப் போக்கினார். இது பத்திரிக்கையாளரின் திருக்குறள் என்று போற்றப்படுகிறது.

1962-இல் சன்காகித ஆலையைத் தொடங்கினார். இந்த ஆலைக்காகிதத்தை தினத்தந்தியும் மற்ற பத்திரிக்கைகளும் பயன்படுத்துகின்றன.

ராணி, ராணிமுத்து, ராணி காமிக்ஸ், தேவி, தினகரன், மாலைமலர் இதழ்கள் ஆதித்தனர் குடும்பப் பத்திரிக்கைகளே.

ஆசிய நாடுகளிலேயே பத்திரிக்கை உலகின் முடிசூடா மன்னராக ஈடுஇணையற்று விளங்கினார் ஆதித்தனர்.

**சுதேசமித்திரன்**

இந்திய தேசிய காங்கிரஸ் உதயமானவுடன் பாமரமக்களுக்கும் நாட்டு நடப்பை விளக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்நிலையில் தாய்மொழி இதழ்களின் இன்றிமையாமையை உணர்ந்து அதற்கே செயல்வடிவம் தந்தவர் ஜி.சுப்பிரமணிய ஐயர் ஆவார். இதனால்தான் இவரைத் தமிழ்ப்பத்திரிக்கை உலகின் தந்தை எனப் போற்றுகின்றார். இந்திய தேசிய காங்கிரசைத் தோற்றுவித்த தலைவர்களுள் இவரும் ஒருவர்.

இந்து என்ற ஆங்கில இதழை 1878-இல் நிறுவி அதன் ஆசிரியராகவும் பணியாற்றினார் இவ்விதழ் ஆங்கிலத்தில் மட்டுமே வந்ததால் தமிழகத்தில்

அதன் மூலம் செய்திகளைக் கொண்டு சேர்க்க முடியாது என்பதை உணர்ந்தார். எனவே 1882-இல் சுதேசமித்திரன் என்ற பெயரில் வார இதழைத் தொடங்கினார். ஐந்து ஆண்டுகளில் அதனை வாரம் இருமுறை வெளிவரும் இதழாக (1887) மாற்றினார். 1889-இல் நாளிதழாக இது வெளிவரத் தொடங்கியது.

தமிழ் மக்களின் அறிவை வளர்ப்பதே மேன்மையானது எனக் கருதி இவ்விதழ் வெளிவந்தது. தமிழ்ப்பத்திரிக்கையைத் தினசரியாக (நாளிதழாக) நடத்துவது முடியாது எனப் பலர் கூறிவந்த போதிலும் தான் எடுத்த முயற்சியைக் கைவிடாது நடத்தியதாக ஜி.சுப்பிரமணிய ஐயரே கூறியுள்ளார். தமிழ் மக்களிடையே அரசியல் உணர்வும், காந்தியமும் வேரூன்ற இவ்விதழைப் பயன்படுத்தினார். தென்னாப்பிரிக்கச் சத்தியாகிரகத்தைப் பற்றி எண்பது முறை தலையங்கம் தீட்டினார். காந்தியடிகளைப் பற்றி முதன்முதலாகச் செய்தி வெளியிட்ட பெருமை சுதேசமித்திரனுக்கே உரியதாகும்.

இவ்விதழில் மொழி, நடை முதலியன பற்றிக் கவலை கொள்ளவில்லை. சுதேசமித்திரன் அறிவைப் பரப்புகிறதா? ஆங்கில அறிவைப் பரப்புகிறதா? என தேசபக்தர் சுப்பிரமணிய சிவா வினா எழுப்பினார். ஆனால் பிழிந்து கொடுக்கும் பணியை சுதேசமித்திரன் மட்டும் செய்தது. மேலும் வாசகர்களின் அறிவுப்பசிக்குத் தீனிபோட்ட தமிழிதல் என்ற பெருமையையும் பெற்றது. அன்றைய நிலையில் முழுமையாகத் தமிழில் இதழ்கட்கு எழுதத் தெரிந்தவர்கள் சிலரே. இதழ்களில் எழுதியவர்கள் மொழிக்கலப்பையே மொழிநடையாகக் கொண்டிருந்தனர். எனவே சுதேசமித்திரன், மக்களுக்குச் செய்தி சென்றுவிட வேண்டும் என்பதிலேயே கவனத்தைச் செலுத்தியது.

மகாகவி பாரதியார் இவ்விதழில் துணையாசிரியராகப் பணியாற்றினார். ஜி.சுப்பிரமணிய ஐயருக்குப் பிறகு ரெங்கசாமி ஐயங்காரும், சி.ஆர்.சீனிவாசனும் ஆசிரியர் பொறுப்பேற்று இவ்விதழை மேன்மேலும் வளர்த்தனர். அரசியல்.

பொருளாதாரம் போன்ற பலதுறைகளில் செய்திகளை, கட்டுரைகளை வழிவகை செய்த இதழ் தலையங்கம் துணுக்குச்செய்தி பெட்டிச்செய்தி, மாநாட்டு நிகழ்ச்சித் தொகுப்பு போன்றவற்றை வெளியிட்ட இதழ் என்ற பெருமை உடையது. 1882 முதல் 1976 வரை தமிழ் இதழியல் உலகில் நல்ல தொண்டாற்றிப் புகழ்பெற்ற இதழ் என்ற பெருமையைப் பெற்றது.

**குடியரசு**

தமிழ்நாட்டில் கதரைப் பரப்பிய பெருமை ஈ.வே.ராவுக்கே உண்டு. தீண்டாமைப் பேயை விரட்ட அவர்பட்ட பாட்டை அறியாதவர் யாருமில்லை. நாட்டு விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டு பலமுறை சிறைநண்ணியவர். பெரியார் 1925-இல் குடியரசு வார இதழைத் தொடங்கினார். பெரியாரின் மனைவி நாகம்மையார் அதன் வெளியீட்டாளராக விளங்கினார். இந்த இதழின் நோக்கம் ஆங்கில ஆட்சியை இந்நாட்டை விட்டு விரட்டிக் குடியரசை நிலை நிறுத்த வேண்டும் என்பதுதான் என்று ‘நாள், கிழடை, திங்கள் இதழ் விளக்க வரிசை’ அதன் முகப்புப் பக்கத்தில் கையில் கொடி ஏந்திய பாரத மாதாவின் படமும் இராட்டை சுற்றும் ஒரு பெண்ணின் படமும் இடம்பெற்றன. இதழ் தவறாது ‘கதர் கட்டுங்கள்’ என்ற விளம்பரம், விடுதலைப்போருக்கும், அந்த போருக்குக் கருவியாக விளங்கிய இதழ்களுக்கும் பெரியார். பெருந்துணையாக விளங்கினார்.

**தினமணி**

சதானந்தம் என்பார் நாட்டுப்பற்று நிறைந்தவர். இவர் இந்திய உரிமைப்போர் செய்திகளை, விடுதலைப் போர்த்தலைவர்கள் ஆற்றல்மிகு சொற்பெருக்குகளை இதழ்களுக்கு வழங்க இந்திய செய்தி நிறுவனம் ஒன்று தேவை என்று 1921-இல் பம்பாயில் அசோயியேடட் பிரஸ் ஆப் இந்தியா என்ற செய்தி நிறுவனத்தைத் தொடங்கினார். 1934-இல் தினமணி என்ற இதழைத் தொடங்கினார். நாட்டுப்பற்றை வளர்த்த இவ்விதழில் முதல் எட்டு ஆண்டுகள்

தெ.ச.சொக்கலிங்கம் ஆசிரியராக இருந்தார். அதன்பின்பு நீண்டகாலம் ஏ.என்.சிவராமன் ஆசிரியராகப் பணியாற்றினார். ஒரு தமிழிதழில் நீண்டகாலம் பணியாற்றியவர் என்ற புகழுக்குரியவர் ஏ.என்.சிவராமன். தமிழில் நீண்டகாலம் நடைபெறும் இதழும் இதுவாகும்.

**தினத்தந்தி**

நாட்டு விடுதலைக்கு முன்பு தோன்றிய நாளிதழ்களில் தனியிடம் பெறுவது தினத்தந்தி. இதனை ‘தமிழர் தந்தை’ என்று தமிழகத்து மக்களால் போற்றிப் புகழப்பெறும் சி.பா.ஆதித்தனார் 1942-இல் தொடங்கினார். முதலில் இவ்விதழும் நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்டது. பின்னர் காங்கிரசுக்கு எதிராகச் செயல்பட்டது. மக்களின் பேச்சுத்தமிழில் செய்திகளை வெளியிட்டு, பொதுமக்களிடம் செய்தித்தாள் படிக்கும் பழக்கத்தைக் கொண்டு வந்தவர் சி.பா.ஆதித்தனாரே.

**தினமலர்**

தமிழ் நாளிதழ்களின் விற்பனையில் தினமலர் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இவ்விதழ் 06.09.1951-இல் திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் தலைநகராக விளங்கிய திருவனந்தபுரத்தில் தொடங்கப்பட்டது.

டி.வி.ஆர் என்று அன்பாகப் போற்றப்படும் டி.வி.இராமசுப்பையர் இதன் நிறுவனரும் அப்போதைய ஆசிரியருமாவார். தினமலர் வியாபார நோக்கத்திற்காகத் தொடங்கப்பட்டதல்ல. தினமலர் நாளிதழுக்கு 1969 முதல் 1976 வரை அரசு விளம்பரங்கள் கொடுக்கப்படவில்லை. இக்காலக்கட்டத்தில் தினமலர் பல சிக்கல்களைச் சந்தித்தாலும் அரசின் ஆதரவில்லாவிட்டாலும் மக்களின் ஆதரவில் வெற்றிநடை போட்டது. தினமலர் திருவனந்தபுரத்திலிருந்து திருநெல்வேலி தச்சநல்லூருக்கு 04.04.1957-இல் மாற்றப்பட்டது. பின்னர் பல இடங்களிலிருந்து அதன் பதிப்புகள் வெளிவரத் தொடங்கின.

தினமலர் வாரந்தோறும் சிறுவர்மலர், வாரமலர், ஆன்மிகமலர் என்று மூன்று வார இதழ்களை நாளிதழோடு சேர்த்து வெளியிடுகின்றத. சிறுவர்மலர், வாரமலர், ஆன்மிகமலர் வெளியிடப்படும் நாட்களில் இதன் விற்பனை மற்ற நாட்களைவிட அதிக அளவில் உள்ளது குறிப்பிடத்தக்கது. திங்கள் - பங்குச்சந்தை, செவ்வாய் - மணமாலை, புதன் - விவசாய மலர், வெள்ளி – திரைமலர், சனி – விளையாட்டுமலர், நகர்மலர், வேலைவாய்ப்பு மலர், கல்விமலர் வெளியிடப்படுகின்றன.

எஸ்.எஸ்.எல்.சி மற்றும் +2 மாணவர்களுக்கு வழிகாட்டுதல், பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் பல போட்டிகளை நடத்தி அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் கல்வியாளர்களைத் திருப்திப்படுத்த தீபாவளி மலரைச் சிறப்பாக அமைத்தல் என்று பல நிலைகளில் பலருக்கும் உதவி வருகிறது. தற்பொழுது தினமலரில் அதிக அளவில் விளம்பரங்கள் வெளிவருகின்றன. மணமாலைப் பகுதியை இலவசமாக வெளியிட்டுத் திருமணம் முடிக்காதவர்களுக்குத் தினமலர் உதவி வருகின்றது.

**தினகரன்**

தினகரன் நாளிதழ் 1977-இல் சென்னையிலிருந்து வெளிவருகின்றது. முன்னணி நாளிதழ்களில் ஒன்றாக விளங்குகின்ற தினகரன் சென்னை, பாண்டிச்சேரி, வேலூர், கோவை, திருச்சி, மதுரை, நெல்லை, நாகர்கோவில், பெங்களூர் ஆகிய இடங்களில் வெளியாகின்றது. தினகரன் இலவச இணைப்புகளாக, சனிக்கிழமைதோறும் ‘அருள்’ என்ற ஆன்மீக இதழையும், ஞாயிறுதோறும் ‘வசந்தம்’ என்ற பல்சுவை இதழையும் வெளியிடுகின்றது.

**புதிய தினகரன்**

புதிய வடிவத்தில் தினகரன் ஒரு ரூபாய் விற்பனையில் மக்களிடத்தில் அதிக செல்வாக்கினைப் பெற்று விற்பனையில் சாதனைப் படைத்தது. தற்போது தினகரன் இரண்டு ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. தினகரனின் முதல் பக்கத்தில் 'தினகரன்' என்ற தலைப்பின் கீழ் 'ஒரு புதிய அனுபவம்' என்றும் ஒவ்வொரு பக்கத்திலும் பிரசுரமாகின்ற முக்கிய செய்திகளின் தலைப்புகளையும் வெளியிடுகிறது. 'ஜன்னல்' என்ற தலைப்பின் கீழ் முக்கிய கட்டுரைகளையும் 'பீட்டர்மாமா' என்ற தலைப்பின்கீழ் அரசியல் சார்ந்த விமர்சனைங்களையும் வெளியிடுகிறது. இப்பத்திரிக்கை சென்னை, பாண்டிச்சேரி, வேலூர், சேலம், கோவை, திருச்சி, மதுரை, நெல்லை, நாகர்கோவில், பெங்களுர் ஆகிய இடங்களிலிருந்து வெளிவருகின்றது.

**கதிரவன்**

1993-இல் சென்னையிலிருந்து 'கதிரவன்' நாளிதழ் வெளிவந்தது. பின்னர் திருநெல்வேலி, கோவை, மதுரை ஆகிய இடங்களிலிருந்தும் வெளியானது. இப்பத்திரிக்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பானதாகும். இப்பத்திரிக்கை வெள்ளிக்கிழமைகளில் சிறுவர் பகுதியையும், ஞாயிற்றுக் கிழமைகளில் 'சூரியகாந்தி' என்னும் பல்சுவை இதழையும் வெளியிட்டது. செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் திரைத்துறை சார்ந்த செய்திகள் அதிகமாக வெளிவந்தன. சனிக்கிழமைகளில் வேலைவாய்ப்பு, இளைஞர் பகுதிகள் இடம்பெற்றன. கதிரவனின் இலவச இணைப்பாக மாதபலன், கிரகப்பெயர்ச்சிப் பலன்கள் போன்றன வெளியிடப்பட்டன. தற்போது இப்பத்திரிக்கை வெளிவரவில்லை.

**தினபூமி**

14.10.1994-இல் மதுரை, சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மும்பை ஆகிய இடங்களில் இருந்து ‘தினபூமி’ என்னும் இதழ் வெளியிடப்பட்டது. 1990-இல் தொடங்கப்பட்ட அதிர்ஷ்டம் என்னும் இதழை வெளியிட்டு வந்த நிறுவனம் தினபூமியையம் வெளியிடத் தொடங்கியது. தினபூமியின் நெல்லைப் பதிப்பு 1997-இல் வெளியிடப்பட்டது. பின்னர் சேலத்திலும், 2001-இல் வேலூரிலும் இது தொடங்கப்பட்டது. தினபூமி தன் இணைப்பு வெளியீடுகளாக ஞாயிறுபூமி (ஞாயிறு), மருத்துவபூமி (தங்கள்), மங்கையர்பூமி (செவ்வாய்), T.V. பூமி (புதன்), கதை பூமி (வியாழன்), ஆன்மீக பூமி (வெள்ளி), மாணவர் பூமி (சனி) என்பனவற்றை வெளியிடுகின்றது. விளையாட்டு பூமி, ஞாயிறு பூமி ஆகியன தனிப்புத்தகங்களாக வெளியிடப்படுகின்றன. தினபூமி நிறுவனத்திலிருந்து மாத இதழாகச் ‘சாம்பியன்’ என்னும் விளையாட்டு இதழும், வார இதழாக ‘அருள்பூமி’, ‘ஜோதிடபூமி’ ஆகியனவும் வெளியிடப்படுகின்றன.

தமிழகம் அல்லாத பிற மாநிலத்தில் தொடங்கப்பட்ட தமிழ்ப்பத்திரிக்கை என்னும் சிறப்பினைப் பெற்றுள்ளது. ‘தினபூமி’ பத்திரிகையாகும்.

பாடம்–3

# இதழ்ச் சட்டங்கள்

முடியாட்சி நாட்டில் குடிமகனுக்கும் இதழ்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் பேச்சுரிமையும், எழுத்துரிமையும் பொதுவானவை. சட்டத்திற்குப் புறம்பாக நடக்காத வரை, தனிமனிதன் நாட்டின் குடிமகனாகவும், இதழ்கள் உரிமைப் பெற்ற மக்கள் தொடர்புச் சாதனமாகவும் விளங்குகின்றன. அவ்வாறின்றிக் கட்டுப்பாடற்ற முறையில் செயல்படும் போது நாட்டின் நலன் கருதி அரசு வகுத்திருக்கும் சட்டங்களைச் சந்திக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக நேரிடுகிறது. மரபானால் சிலவற்றைத் தரக்கூடாது என்பது அரசின் சட்டமாக உள்ளது. முன் அனுமதியின்றிச் செய்திகளை வெளியிடும் உரிமையைப் பத்திரிக்கைச் சுதந்திரமாக இதழ்கள் பெற்றுள்ளன. சில சட்டவரையறைக்கு உட்பட்டே இந்த உரிமைகளைப் பயன்படுத்த வேண்டுமென்று அரசு விரும்புகிறது.

செய்தித்துறையினர் எல்லா வகையிலும் பொறுப்புடையவர்கள். அவர்களைப் பாதிக்கின்ற சட்டங்களைப் பற்றிய தெளிவான அறிவு அவர்களுக்கு வேண்டும். தனிமனித அவதூறு, நீதின்ற அவமதிப்பு, குற்றம்புரிய தூண்டுதல், உள்நாட்டு பாதுகாப்பிற்கும் வெளிநாட்டு உறவுக்கும் தீங்கான செய்திகளைப் பரப்புதல் முதலியனவற்றைச் செய்தித்தாள்களின் குற்றமாக அரசு கருதுகிறது. இக்குற்றங்களின் அடிப்படையில் வழக்கு தொடர்ந்து தண்டனையளிக்க அரசியல் சட்டப் பிரிவுகள் இடம்தருகின்றன.

**மானநஷ்டம், தரக்குறைவாக எழுதுதல்**

இதழியாளர்களும், செய்தித்தாட்களை வெளியிடுபவர்களும் அவமதிப்புச்சட்டம் குறித்து மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஒருவரின் மான இழப்புக்குக் காரணமாகின்றவரின் மீது குற்றவியல் சட்டத்தின்படியும்

(Criminal law) சமுதாயவியல் சட்டத்தின்படியும் (civil law) நடவடிக்கை எடுக்கலாம்.

ஒருவரை வாய்மொழியாக இழிவுபடுத்துதை அவதூறு (Scandal) என்றும் எழுத்தின் மூலம் அவமதிப்பதை சட்டவழக்கிற்குட்பட்டது (Libel) என்றும் கூறலாம். இந்தியக் குற்றவியல் சட்டத்தின் (IPD) 499-ஆம் பிரிவு அவமதிப்பு எதுவென்று விளக்குகின்றது. 550-ஆம் பிரிவு தண்டனையைக் குறிப்பிடுகின்றது.

ஒருவரைப் பற்றி அவமதிக்கும் வகையில் பேசுவதோ, மற்றவர்கள் படிக்கும் வகையில் எழுதுவதோ சைகைகள் மூலம் வெளிப்படுத்துவதோ அவமதிப்புக் குற்றத்தின் கீழ் வர வேண்டுமானால் அதில் மூன்று குறிப்பிட உள்ளடக்கங்கள் இருக்க வேண்டும். அவை 1. யாராவது ஒரு மனிதரைப் பற்றிய அவமதிப்பாக இருக்க வேண்டும் 2. அப்படிப்பட்ட அவமதிப்பு பேசிய அல்லது மற்றவர்கள் படிக்க வேண்டுமென்று எழுதிய சொற்களாலோ, சைகைகளாலோ, தெரியக்கூடிய வெளியீட்டு முறைகளாலோ இருக்க வேண்டும் 3. அத்தகைய அவமதிப்பு ஒருவரின் புகழைப்பாதிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடோ அல்லது புகழ் பாதிக்கப்படுமென்று அறிந்தோ செய்திருக்க வேண்டும்.

அவமதிப்பு தொடர்பானவற்றை 1. மக்களின் வெறுப்பை கிண்டலை, கேலியைத் தூண்டக் கூடியவை. 2. மக்கள் வெறுத்தோ, புறக்கணித்தோ, ஒதுக்கக் கூடியவை. 3. ஒருவரின் பணியையோ தொழிலையோ பாதிக்கக் கூடியவை 4. வாணிபத்தைப் பாதிக்கக் கூடியவை என்ற நான்கு வகையாகப் பகுக்கலாம்.

**விதிவிலக்குகள்**

ஒருவரை அவமதிப்புச் சட்டத்தின் கீழ் பந்து குறிப்பிட்ட சூழ்நிலைகளில் தண்டிக்க முடியாதென்று 499-ஆம் பிரிவு விதிவிலக்கு அளித்திருக்கின்றது. இதன்படி பொது நலன் கருதி உண்மையை வெளியிடாமலிருத்தல். பொதுநலன் கருதி சிலவற்றை வெளியிடல் அரசு ஊழியர்களைப் பற்றி நியாயமாகக் கருத்துக்கூறல் பொதுநலனுக்குத் தேவையானவற்றை வாதிடல் நல்ல எண்ணத்தோடு நீதிமன்ற நடவடிக்கைகளை வெளியிடல். நீதிமன்றத் தீர்ப்புப் பற்றியோ சான்று பற்றியொ நல்ல எண்ணத்தோடு கருத்துக்கூறல் பொதுநடவடிக்கைகள் பற்றி பொதுவான நோக்கில் விமர்சனம் செய்தல் சட்டப்படி அதிகாரம் உடையவர்கள் சட்ட வரம்புக்குள் கருத்துக்கூறல். நல்ல எண்ணத்தோடு அதிகாரத்தில் உள்ளவர்களில் குறைகளைக் கூட்டிக்காட்டல், பொதுநலனையோ, தனி மனிதர்களையோ காப்பதற்காகச் சிலரை குறை கூறுதல், பொதுநலன் கருதி ஒருவரை எச்சரித்தல் ஆகியவை அவமதிப்புக் குற்றமாகாது.

வழக்கு: 1973 –ஆம் ஆண்டில் குற்றவியல் வழக்குத் தொடர்விதிப்படி 199(1) யார் அவமதிப்புக்கு உள்ளானார்களோ அவர்கள்தான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியும். ஆனால் இந்தியக்குடியரசு தலைவர் துணைத்தலைவர் மாநில ஆளுநர் மத்திய மாநில அமைச்சர்கள் ஆகியவர்கள் அவமதிப்புக்கு ஆளானதாகக் கருதினார். அவர்கள் சார்பில் அரசு வழக்குரை ஓர் வழக்கைத் தொடரலாம்.

அவமதிப்பு வழக்கு, அவமதிப்புச் செய்தவர் மேல் மட்டுமல்ல, அதனை வெளியிட்ட நாளிதழின் பதிப்பாளர், அச்சிட்டவர், ஆசிரியர் ஆகியவர் மீதும் தொடரலாம். சட்டப்படி அவமதிப்பு உறுதிசெய்யப்பட்டால், பொறுப்பானவர்கள் அனைவரும் தண்டனைக்குரியவர்கள்.

தண்டனை: அவமதிப்புச் செய்தவர்களுக்கு, இந்தியக் குற்றவியல் சட்டம் 500-ஆம் பிரிவின்படி இரண்டாண்டுகள் வரை சிறைத்தண்டனையோ, அபராதமோ இரண்டுமோ கொடுக்கலாம் சட்டக்குழு (The law commission) இதோடு கூட தீர்ப்பினைச் செய்தித் தாட்களில் வெளியிட வேண்டுமென்றும், குற்றம் உறுதி செய்யப்பட்டவர், வெளியீட்டுச் செலவினை ஏற்க வேண்டுமென்றும் பரிந்துரைத்துள்ளது.

பொதுச்சட்டத்தின் மானஇழப்பு வழக்குத் தொடர்பவர் இழப்பீடு பெறமுடியும். குற்றவியல் சட்டப்படி வழக்குத் தொடர்ந்தால் அவமதித்தவர் தண்டனை பெறுவார்.

**நீதிமன்ற அவமதிப்புச்சட்டம்**

நாட்டின் உயர்ந்த மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய இடம் நீதிமன்றம், அதனால் அதற்கு மதிப்பளிக்கும் வகையில் அச்சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன்படி,

1. நீதிமன்ற நடவடிக்கைகளையும், நீதித்துறையைச் சார்ந்தவர்களையும், அவமதித்துப் பேசுவதும் எழுதுவதும் பெருங்குற்றமாகும்.
2. நீதிமன்றத்தில் இருக்கும் செய்திகளைப் பற்றி விவாதிப்பதும் தீர்ப்புக்குப் பின்பு திறனாய்வு செய்வதும் தண்டனைக்குரிய குற்றமாகும்.
3. நீதிமன்றத் தீர்ப்பினைக் கண்டிப்பதும், தீர்ப்புக்கு முன்பே வழக்கில் உள்ளவரை எழுத்தால் குற்றவாளியாக்குவதும் குற்றமாகும்.
4. நீதிமன்ற நடுவர்களைத் தரக்குறைவாக எழுதுவதும், கருத்துப்படங்களாக வரைவதும் கூட அவமதிக்கும் குற்றமாகக் கருதப்படுகிறது.
5. நீதிமன்றத்துக்குள் புகைப்படம் எடுக்க அனுமதியில்லை.

1954-ஆம் ஆண்டு வந்த இதழ்கள், செய்தித்தாள்கள் (பொதுநூலகங்கள்) சட்டம் நடுவணரசு பரிந்துரைக்கும் நூல்களுக்கு வெளியீடுகளில் ஒருபடியை இலவசமாகக் கொடுக்க வகை செய்கிறது. 1955-ஆம் ஆண்டு வெளிவந்த பரிசுப்போட்டிகள் பற்றிய சட்டம் இதழ்கள் நடத்தும் சுருக்கெழுத்ததுப்போட்டி, படிப்பில் முதல் மதிப்பெண் பெற்றோர் போன்றவற்றிற்குத் தரும் பரிசுத்தொகை ரூபாய்களைச் சரியாக வைத்திருக்க வேண்டும்.

**இதழ்கள் பதிவுச்சட்டம்**

இச்சட்டம் 1876-ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் உள்ளது. 1940, 1956-ஆம் ஆண்டுகளில் சில சீர்திருத்தங்களைப் பெற்றுள்ளது. இந்தியாவில் வெளியாகும் புத்தகங்கள், செய்தித்தாள்கள் அனைத்தும் தில்லியிலுள்ள செய்தித்தாள் பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்து சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும். புத்தகம் வெளியிட்ட இரண்டு நாட்களுக்குள் படியொன்றைப் பதிவாளருக்கு அனுப்புதல் வேண்டும். அனுமதி பெற்ற பின் நாள் வார இதழ்களை ஒன்றரை மாதத்திற்குள்ளும் பிற இதழ்களை மூன்று மாதத்திற்குள்ளும் வெளியிட வேண்டும். இவை அனைத்தும் இவ்வலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. செய்தித்தாள்கள் பற்றிய புள்ளி விவரங்கள் தொகுக்கப்பட்டு நாடாளுமன்றத்தின் ஒப்புதலோடு ஆண்டுதோறும் அறிக்கைப் புத்தகம் ஒன்று வெளியிடப்படுகிறது.

**பதிப்புரிமைச் சட்டம்**

கருத்துத் திருடர்களையும் எழுத்துத் திருடர்களையும் வளர விடாமல் இச்சட்டம் படைப்பாளருக்குப் பாதுகாப்புத் தருகிறது. புத்தகம், கட்டுரை, பேச்சு, நாடகம், படங்கள் ஆகியவை பதிப்புரிமை பெறுகின்றன. இப்படைப்புகளை உரியவர் அனுமதியின்றி அப்படியே வெளியிடுவது, கருத்துக்களைப் பயன்படுத்துவது, மொழிபெயர்த்து வெளியிடுவது இவையனைத்தும் இச்சட்டப்படி

தண்டனை பெறுங்குற்றங்களாகும். 1914-ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் உள்ள இச்சட்டம் 1956-இல் சில திருத்தங்களைப் பெற்றுள்ளது. இருபத்தெட்டு வருடங்களுக்குப் பதிப்புரிமை வழங்கி, அதனை மீண்டும் இருபத்தெட்டு வருடங்களுக்குப் பதிப்பிக்கும் உரிமையைப் பழைய சட்டத்தில் அரசு வழங்கியிருந்தது. இப்பொழுதுள்ள சட்டப்படி ஆசிரியரின் வாழ்க்கைக்காலமும் அதற்குப் பின்பு ஐம்பது ஆண்டுகளுக்கும் பதிப்புரிமை வழங்கப்படுகிறது. விற்பனைக்குக் கிடைக்காத புத்தகங்களைப் படியெடுத்துக் கொள்ள நூலகங்களுக்கு மட்டும் இச்சட்டம் அனுமதி வழங்கியுள்ளது.

**அலுவலக இரகசியக் காப்புறுதிச்சட்டம்**

மக்களாட்சியில் மக்கள் நாட்டில் நடப்புக்களை எல்லாம் தெரிந்து கொள்வது தேவையாகின்றது. அரசு எல்லா விவரங்களையும் சேகரித்து வைக்கின்றது. நிர்வாகத்தினர் பலவற்றை முடிவுசெய்து செயல்படுத்துகின்றனர். இவற்றைப் பற்றிய விவரங்களைச் சேகரித்து மக்களுக்குத் தெரிவிப்பது. இதழ்களின் பணியாகின்றது. ஆனால் நிர்வாகத்தின் திறமை கருதி, நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டின் தொடர்புகள், குற்றப்புலனாய்வுகள், அமைச்சரவை முடிவுகள், சில தனிப்பட்ட மனிதர்கள் பற்றிய தகவல்கள் ஆகியவை தொடர்பான சிலவற்றை அரசு ரகசியங்களைக் கட்டிக்காப்பது தேவையாகின்றது. இப்படிப்பட்ட அலுவலக ரகசியங்களை இதழ்கள் அறிந்து வெளியிடுவது சட்டப்படி குற்றமாகும்.

சட்டம்: 1923-ஆம் ஆண்டின் அலுவல இரகசியங்கள் சட்டம் (1) ஒற்றறிதல் (2) இரகசிய விவரங்களை மற்றவர்களுக்குத் தருதல் ஆகிய குற்றங்களைத் தெளிவாக வரையறுத்து கூறுகின்றது.

இச்சட்டத்தின்படி மூன்றாம் பிரிவு யாராவது நாட்டின் பாதுகாப்பிற்குப் பாதகமான முறையில் (1) தடைசெய்யப்பட்ட பகுதிக்குள் செல்லுதல் அங்குள்ள

இரகசிய விவரங்களைச் சேகரித்து மற்றவர்களுக்கு வழங்குதல் (2) பகைவர்களுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ பயன்படும் வகையில் வரைபடங்கள் தீட்டியோ, திட்டம் வகுத்தோ, மாதிரிகளை உருவாக்கியோ தருதல் (3) பகைவர்களுக்குப் பயன்படக்கூடிய விவரங்களைப் பெற்றோ சேகரித்தோ, பதிவு செய்தோ, வெளியிட்டோ வழங்குதல் குற்றங்களாகுமென்று தெளிவுபடுத்துகின்றது.

1962-ஆம் ஆண்டின் அணுசக்தி திட்டம் (Atomic Energy Act) இருக்கின்ற அல்லது அமைக்கப் போகின்ற அணுஉற்பத்தி நிலையங்கள் பற்றி அதிகாரம் பெற்றவர்கள் தவிர மற்றவர்களுக்குச் செய்திகளைத் தருவதைக் குற்றமாக்குகின்றது. இதைப்போல வேறு சில சட்டங்களும் இருக்கின்றன.

நடைமுறை: ஒன்றை இரகிசயமாகவோ இல்லையாவெனத் தீர்மானிப்பது சிக்கலானதாகும். சில வேளைகளில் அலுவலர்களும் அரசியல் தலைவர்களும் தங்களது தவறுகள் வெளியில் தெரியாமலிருக்க பலவற்றை இரகசியங்கள் என்று மூடி மறைக்கலாம். மக்கள்நலன் கருதி இதழ்கள் அவற்றை வெளிப்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, இந்திய அரசு வெளிநாட்டில் இராணுவத்தளவாடங்கள் வாங்கியதில் ஏற்பட்ட முறைகேடுகளை ‘இண்டியன் எக்ஸ்பிரஸ்’ (Indian Express) வெளிப்படுத்தியபொழுது அரசின் சில ஆவணங்களையும் பதிப்பித்தது. இதனை இச்சட்டத்தின் கீழ் குற்றமென அரசு கருதியது. இதனைப்போன்று பல நிகழ்ச்சிகள் நடந்துள்ளன.

**இதழாளனுக்குரிய சட்டம்**

1956-ஆம் ஆண்டு நிறைவேற்றப் பணிசெய் இதழியலாளர் சட்டம் (The working journalist Act) பத்திரிக்கைகளின் பணி செய்கின்றவர்கள் தொடர்பான

ஊதியம் வைப்புநிதி பணிக்காலம் விடுறை ஆகியவற்றை வரையறுத்துக் கூறுகின்றது. இதழியலாளர்கள் யார் என்பதை விளக்குகின்றது.

செய்தித்தாளில் பணிசெய்கின்ற ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள் ஆகியோர் வாரத்தில் ஆறுநாட்கள் மட்டுமே பணிசெய்ய வேண்டும். ஏழாவது நாள் அவர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும்.

இச்சட்டம் வேலைக்காலத்தை ஒரு நாளைக்கு ஆறுமணி நேரமென்றும், வாரத்திற்கு 36 மணிநேரமென்றும் ஒரு திங்களுக்கு 144 மணிநேரமென்றும் வரையறுத்துக் கூறுகின்றது. செய்தியாளர்கள் (Reporters) ஒரு நாளில் ஒரு பணி (Assignment) செய்தால் போதும். அவர்கள் ஒரு நாளில் இரு பணிகளை மேற்கொள்ள நேரிட்டால் மறுநாள் அவர்கள் பணிசெய்ய வேண்டியதில்லை.

**ஊதியக்குழு:** இச்சட்டம் குறிப்பிட்ட கால இடைவெளியில் பத்திரிக்கையாளர்களின் ஊதியங்களை நிர்ணயிப்பதற்காக ‘ஊதியக்குழு’ நியமிக்க வழிவகுக்கின்றது. இதன்படி மாறுகின்ற சூழ்நிலைக்கேற்ப இதழிலியளார்கள் உயர்ந்த ஊதியம் பெற வாய்ப்புள்ளது.

**பத்திரிக்கை சுதந்திரம்:** ஜனநாயக நாடான இந்தியாவில் இவ்விதழ்களுக்கென்று தனிச்சுதந்திரம் தரப்பட்டுள்ளதைக் காணலாம். 1952-ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட இதழியல் குழுவினர் பத்திரிக்கைச் சுதந்திரம் என்ன என்பதை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். “அரசின் எவ்விதமான ஆணையோ தலையீடோ இன்றி தனிப்பட்ட கருத்தினையும், தான் பெறுகின்ற செய்திகளையும் அச்சடிக்கப்பட்ட எழுத்துக்களின் வழி வெளிப்படுத்துவதேயாகும்” என்பதே அது இச்சுதந்திரம் இன்று குடியரசு நாடுகளில் உரிமையுடன் செயல்படுவதைக் காணலாம். உலகின் மிகப்பெரிய

குடியரசு நாடாகிய இந்தியாவில் இதழ்கள் மிகச்சிறப்பாகப் பணியாற்றுகின்றன. ஜனநாயகம் தழைக்க இதழ்கள் பல வகையில் துணைபுரிகின்றன.

பாடம்–4

# செய்தி தெரிவித்தல்

## செய்திகள்

உலகின் நடைமுறை நிகழ்ச்சிகள் வழக்கத்திற்கு மாறாக அமையும்போது செய்திகள் பிறக்கின்றன. செய்திகள் புதுமையாகவும், சூடாகவும், சுவையாகவும் இருக்கும். கண்ணோட்டத்தால் செய்திகள் சிறப்புறும். பொறுமை, விரைவு, நிலையாமை என்ற மூன்று பண்புகளை இ∴து உடையது.

## செய்தி இலக்கணம்

செய்தி என்பது புதியது, குறிப்பிடத்தக்கது, வழக்கத்திற்கு மாறானது என்னும் பொருளில் வழங்கி வந்துள்ளது. இவ்வாறு வழக்கத்திற்கு மாறான நிகழ்ச்சிகளை நான்கு திசைகளிலிருந்து பெற்றவுடன் ‘NEWS’ (North, East, West, South) என்ற பன்மைச்சொல் உருவானது. ரோலண்டு ஈஒல்ஸிலி என்னும் இதழியல் ஆசிரியர் “பெருத்த எண்ணிக்கையுடைய வாசகர்கள் விரும்புகிற முற்றிலும் உண்மையான நிகழ்ச்சிகளை அல்லது கருத்துக்களைச் செய்திகள் எனலாம்” என்பர். இதழாசிரியர் டான் “செய்திகள் புதுமையாகவும் வழக்கத்திற்கு மாறாகவும் நடைபெற்றதாக இருக்க வேண்டும்” என்பார். இதற்கு இவர் பின்வரும் உதாரணத்தைக் காட்டுவார்.

**“நாய் மனிதனைக் கடித்தால் செய்தியாகாது**
**மனிதன் நாயைக் கடித்தால் செய்தியாகும்”**

இந்திய இதழ்கள் பதிவுச்சட்டமோ “நாட்டு நடப்புச் செய்திகளையும், அவை பற்றிய கருத்துக்களையும் உள்ளடக்கி, குறிப்பிட்ட காலங்களில் அச்சடித்து வெளிவருவனவே செய்தியாகும்” எனக் கூறும் இச்செய்திகள் வகையாலும், மதிப்பாலும் இதழ்களை மெருகு செய்கின்றன.

**செய்தி வகை**

செய்திகளை 1. எதிர்நோக்கும் செய்திகள் (Expected News) 2. எதிர் நோக்காத செய்திகள் (Unexpected News) என இருவகைப்படுத்தலாம்.

**1. எதிர்நோக்கும் செய்திகள்**

செய்திகளைப் பற்றிய அறிவிப்புகள், விளக்கங்கள் முதலியவற்றை முன்னமேயே அறிவதால் திட்டமிட ஏதுவாகிறது. எதிர்நோக்கும் செய்திகளால் இவ்வகையில் விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், நாடகம், அரசியல் நடைமுறைகள் பற்றிய செய்திகளைக் கூறலாம்.

**2. எதிர்நோக்காத செய்திகள்**


எதிர்பாராமல் வழக்கத்திற்கு மாறாகத் திடீரென்று தோன்றும் செய்திகள் எதிர்நோக்காத செய்திகளாகும். இதனைச் சிறப்புச் செய்திகள் என்றும் கூறுவர். விபத்து, இறப்பு, கலவரம், போர், புரட்சி போன்ற நிகழ்ச்சிகளால் இவ்வகைச் செய்திகள் பிறக்கின்றன.

**செய்தி மதிப்பு**

எல்லாவகை இதழ்களிலும் செய்திகளை வெளியிடும் முறையாலும் அவற்றிற்கு ஒதுக்குகின்ற இடத்தாலும் செய்திக்கு மதிப்பு உண்டாகிறது. மேலும் காலந்தவறாது செய்திகளை முந்தித் தருவதாலும் வட்டாரத்தோடு தொடர்புடையதாக இருப்பதாலும் சமுதாயக் கண்ணோட்டத்திலும், புகழ் அதிகாரம், செல்வாக்கு முதலிய மேம்பாடு காரணத்தாலும், புதிய விளைவுகளை ஏற்படுத்துவதாலும் மனிதநேயத்தை வெளிப்படுத்துவதாலும், மாற்றங்கள், அறிவியற் கண்டுபிடிப்புகள் முதலிய புதுமையைக் கூறுகின்ற வகையாலும், தன்னிலைச் சார்பான தொழில், பணி பொழுதுபோக்கு இவற்றைப் பற்றிய செய்திகள் வெளியாகின்ற நிலையாலும் செய்திக்கு மதிப்பு ஏற்படுகின்றது.

**செய்தி அமைப்பு**

செய்தியை இரண்டு வகையில் காணலாம். அவை 1. தலைப்பு (Head) 2. செய்திக்கதை (News story) என்பன. செய்திக்கதையை செய்திச்சுருக்கம் (Lead) செய்தி விளக்கம் (Body) என இருவகைப்படுத்தலாம். செய்திக்கு தலைப்பாகும். கருவிலும் சற்று விளக்கமுடையது செய்திச் சுருக்கம். செய்திவிளக்கம் செய்திக் கதையைக் கூறுகிறது. இச்செய்திச் சுருக்கம் நேரடிமுறை, கவர்ச்சி முறைகளில் அமைந்துவிடுகிறது.




**1. நேரடி முறை**

கௌஹத்தி செப்.2

இம்முறையில் செய்தி பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது. பரபரப்புடன் எதிர்பார்க்கப்படும் அஸ்ஸாம் சட்டசபை நாளை கூடுகிறது. நாளை சட்டசபையில் நடக்கவிருக்கும் பலப்பரிட்சையில் மந்திரி சபை பிழைக்காது என்பது தெரிந்துவிடும்.

**2. கூற்றுமுறை**

சிதம்பரம் ஆக.24

‘காங்கிரஸ் கட்சி தனது வேட்பாளரை நிறுத்தினாலும். பெரிய குளத்தில் தி.மு.கழகம் போட்டியிடும் என்று கலைஞர் சிதம்பரத்தில் செய்தியாளர்களிடையே தெரிவித்தார்.

**3. முரண்பாட்டு முறை**

நெல்லை ஆக.5

வேலியே பயிரை மேய்ந்த கதை இங்கு நடந்துள்ளது. போலிஸ்காரர் ஒருவர் குடித்துவிட்டு கலவரம் செய்ததாக கைதுசெய்யப்பட்டுள்ளார்.

**4. கவர்ச்சி**

வேலூர் மே.31

வேலூர் அருகே லாரி மோதி கோர விபத்து; பைக்கில் வந்த மருத்துவ கல்லூரி மாணவி மூளைச் சிதறி கோர சாவு.

செய்திகளைப் பத்திகளாகப் பிரித்து, கவர்ச்சியான பத்தித்தலைப்புகள் கொடுக்கலாம். சட்டமன்றம் விளையாட்டு, வானொலி, விலைவாசி, இன்றைய நிகழ்ச்சிகள், நீர்மட்டம் வெளிநாட்டுச் செய்திகள் முதலியவற்றிற்கும் குறிப்பிட்ட இடங்களை ஒதுக்குவதும் செய்தி தெரிவித்தலில் சிறந்த நிலையாகும்.

**செய்தியாளரின் கடமைகள் - செயல்கள் - தகுதிகள்**

1. செய்தியாளர்களுக்கு அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலப் பொறுமையும் இடையறா முயற்சியும் தேவை.
2. செய்தியின் மதிப்பு அறிவும் அறிவுத்திட்டம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

3. சட்ட நுணுக்கங்களை அறிந்து இருத்தல் வேண்டும்.
4. விரைவாகப் பிறர் அறியாமல் அலுவலகத்திற்குச் செய்தி அனுப்பும் திறமுடையவராக இருத்தல் வேண்டும்.
5. பல்துறை அறிவு பெற்றவராக இருத்தல் வேண்டும்.
6. கடின உழைப்பு அறிவுத்திறன், கட்டுரை வன்மை, கலைநோக்கு, தட்டெழுத்து, சுருக்கெழுத்து முதலியவற்றில் ஆர்வமும், பயிற்சியும் பெற்றிருத்தல் வேண்டும்.
7. சில நேரங்களில் பெயர் குறிப்பிடாமல் செய்தி தந்து அலுவலகப் பெயர் காத்தல் வேண்டும்.
8. செய்தியாளர் சமுதாயப்பொறுப்பு மிக்கவர் என்ற உணர்வு வேண்டும்.
9. சிரித்த முகத்தோடு ஒன்று இன்சொல் பேசிக் கனிகாய் போன்ற செய்திகளையும் கவர்ந்து சேகரிக்கும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்.
10. அச்சமும் கூச்சமும் நீங்கித் தாமாகவே பிறரிடம் அறிமுகம் செய்துகொள்ளும் பண்பு உடையவராக இருத்தல் வேண்டும்.
11. சரியான நேரத்தில் சரியான முகவரிக்கு சரியான செய்திகளைத் தரும் திறமுடையவராக இருத்தல் வேண்டும்.
12. நெஞ்சில் உரமும் தொழிலில் நேர்மைத் திறமும் உடையவராக விளங்க வேண்டும்.
13. உணவிற்கு உப்பு போல் சமுதாயத்திற்குக் கவர்ச்சி செய்திகளைத் தருதல் வேண்டும்.
14. நன்கொடை என்ற பெயரால் செய்தியாளருக்குரிய நன்மதிப்பை இழந்து விடக்கூடாது.
15. ஆண்டி முதல் அரசர் வரை அனைவரையும் அரவணைத்துச் செல்லும் பண்பாளராகச் செய்தியாளர்கள் விளங்க வேண்டும்.

**செய்திகளை அடையும் வாயில்கள்**

செய்திகளை செய்தியாளர்கள் சேகரிக்கும் வாயில்கள் பலவாகும். அவைகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1. நிகழ்ச்சியில் நேரடிப் பங்கேற்றல் (Participating in action)

போர், விளையாட்டு முதலிய நிகழ்ச்சிகளில் செய்தியாளர்கள் நேரடியாகப் பங்கேற்றுச் செய்திகளைத் திரட்டுவர்.

2. நிகழ்ச்சியில் பார்வையாளராகப் பங்கேற்றல் (Observing the action)

வழக்கு விசாரணை, சட்டசபை நிகழ்ச்சிகளைப் பார்வையாளராக இருந்து செய்திகளை சேகரிப்பர்.

3. பங்குபெற்றவர் அல்லது பார்வையாளர்களிடம் கேள்விகள் வழியாகச் செய்தி சேகரித்தல் (Asking questions of some one who participates in the action of abserved it)

நிகழ்ச்சிகளில் பங்குபெற்றவரை அணுகி நேரத்தை உறுதி செய்துகொண்டு செய்தியினைப் பற்றிய பொது அறிவுடன் வினாக்கள் தொகுத்து செய்திகளைச் சேகரிப்பது இம்முறையாகும்.

4. அறிக்கைகள் சான்றாதாரங்கள், பார்வை நூல்கள் வழித் தொகுத்தல் (Reading reports documents and reference book)

வணிகச் சங்கங்கள் வெளியிடும் அறிக்கைகளையும் அறிவியல் நூல்கள் மூலம் அறிவியற் செய்திகளையும் இவ்வகையில் தொகுத்தல்.

**அறிவியல் முறை**

கருத்துக்கணிப்பு நடத்ததுல் முக்கியப்புள்ளிகளைத் தொடர்புகொள்ளுதல் புள்ளியியல் அடிப்படைச் செய்திகளைச் சேகரித்தல் ஆகிய பணிகளையும் செய்தியாளர் மேற்கொள்ளலாம்.

**செய்திக்கூறுகள்**

மனித ஆர்வச் செய்திகள் மூன்ற கூறுகள் உடையவை.

1. செய்தியின் பொருள் (Subject) மனித ஆர்வத்தைத் தூண்டுவதாக இருக்க வேண்டும். பொதுவாக வாசகர்கள் தங்கள் வாழ்க்கையோடு தொடர்புப்படுத்திப் பார்க்கக் கூறியவற்றிலும் மனித இல்லத்திற்குப் பொதுமையான அனுபவங்கள் என்று கருதக்கூடியனவற்றிலும் ஆர்வம் கருதக் கூடியனவற்றிலும் ஆர்வம் காட்டுகின்றனர். (எ.கா) காதல், சிறப்பு, வெற்றி, தோல்வி, தியாகம், போராட்டம், குற்றம், பாலுணர்ச்சி, பலாத்காரம், துன்பம், மந்திரம், தந்திரம் பேய் போன்றவற்றைக் கூறலாம்.
2. செய்தியின் அமைப்புமுறை (Organization) வாசகர்களைக் கவர்ந்து செய்தியை முழுமையாகப் படிக்ககத் தூண்டுவதாக இருக்க வேண்டும். செய்தியின் தொடக்கமே குட்டிக்கதை போலவோ, வியப்பிற்குரிய செயலின் விளக்கம் போல கவர்ச்சியான மேற்கோளைக் கொண்டதாகவோ இருக்கலாம்.
3. செய்தியைக் கூறும் மொழிநடை (Diction) வாசகர்களைச் சுவையுடன் படிக்கச் செய்யக் கூடியதாக அமைய வேண்டும். துள்ளல் நடையில் நீரோட்டமாகச் செய்தியைக் கூறினால் வாசகர் ரசித்துப்படிப்பார்கள்.

**செய்தி கூறுகள்**

ஒரு கருத்து செய்தியா இல்லையா என்பதை முதலில் நிருபர் தீர்மானிப்பவர் அவர் சேகரித்துத் தருபவை எல்லாம் செய்தியாகாது. அச்செய்திகள் பின்வரும் கூறுகளை உடையதாக இருக்க வேண்டும்.

**உடனடி செய்திகள்**

சுவையாக இருக்க வேண்டுவது போல சூடாகவும் இருக்க வேண்டும். ஆறிய கஞ்சி பழங்கஞ்சி என்பது போல பழைய செய்தியை வெளியிடக்கூடாது. எனவே ஒரு முக்கிய செய்தி கிடைத்ததும் உடனடியாக வெளியிட வேண்டும்.

**அறிந்த இடம்**

வாசகர்கள், தங்கள் பக்கத்து ஊரில் நடக்கும் நிகழ்ச்சிகளைத்தான் பெரிதும் படிக்க விரும்புவர். அமெரிக்காவில் நடந்த விமான விபத்தைவிட அலங்காநல்லூரில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு விபத்து வாசகர்களை ஈர்க்கும். எனவே அருகில் நடைபெற்ற செய்திகளையே அதிகம் தாங்கி வெளியிடுவது நலம்.

**முந்து செய்தி**

செய்திகளை முந்தித் தர முயற்சிக்க வேண்டும். ‘சற்றுமுன் கிடைத்த தகவல்’ ‘மின்னல் செய்தி’ என்ற போர்வையில் ஊடகங்கள் செய்திகளை முந்தித் தரவே முயற்சிக்கின்றன.

**சிறப்பு**

நாட்டின் சிறப்பான இடம், புகழ்பெற்ற மனிதர்கள் போன்றவை பற்றி புகைப்படங்களும் கட்டுரைகளும் செய்திகளாகும்.

**அளவு**

செய்தி மட்டும் முக்கியம் அல்ல. அதில் கலந்து கொண்டோரின் அளவு குறித்தும் பத்திரிக்கைகள் வெளியிட வேண்டும். (எ.கா) திமுக பேரணி திருச்சி குலுங்கியது.

**நிகழ்ந்த இடம்**

சில செய்திகள் நிகழ்ந்த இடம் தேடிச் சென்றால்தான் கிடைக்கும். (ஸ்ரீரங்கத்தில் திருமண மண்டபத்தில் மின்கசிவு. மணமகன் உட்பட 50 பேர் பலி) இச்செய்தியைப் பெற வேண்டும் எனில் நேரடியாகச் சென்றால்தான் சோகமான பரிதாபமான இச்செய்தியைச் சேகரிக்க இயலும்.

**விளைவு**

பின் விளைவுகளை ஏற்படுத்தும் எந்தச்செய்தியும் செய்தியாகும். (திமுக கட்சி உடைகிறது. மதிமுக உதயம்)

**வியப்பு**

சில செய்திகள் ஆச்சரியப்படத்தக்க வகையில் இருக்கும். அவையும் செய்தியாகும். (வேப்பமரத்தில் பால் வடிகிறது இனிப்பாக இருக்கிறது)

**ஐயப்பாடு**

சந்தேகத்திற்கு இடமானதும் செய்தியாகும். (தமிழக அமைச்சரவையில் மாற்றம்) மாற்றத்திற்கான காரணம் தெரியவில்லை.

**உணர்ச்சி**

உணர்ச்சியைத் தூண்டுவனவும் செய்தியாகும். (ராஜிவ் காந்தி சுட்டுக்கொல்லப்பட்டார்)

**பேட்டிகள்**

பேட்டி காணுதல்:

செய்தி மூலங்களில் முதன்மையானது பேட்டி, பேட்டி நடத்தத் தெரியாதவர்கள் செய்தியாளராக முடியாது. பேட்டி ஒரு கலை. அதற்கு அறிவும் அனுபவமும் வேண்டும் என்கிறார் இராமச்சந்திரன்.

**நோக்கம்**

1. ஒரு செய்தி தொடர்பாக மேலும் விபரங்களை அறிய பேட்டி உதவுகிறது.
2. ஒரு நிகழ்ச்சி குறித்து பல்வேறு கருத்துக்கள் முக்கியமானவர்கள் குறித்த சாதனைகள், சோதனைகள் ஆகியனவற்றை அறிய பேட்டி உதவுகிறது.

**பயன்கள்**

பொதுமக்களின் கருத்துக்களை உருவாக்கவும் மேன்மேலும் விளக்கங்களைப் பெறவும், பல்வேறுப்பட்ட குணநலன்களை உணரவும் புதியபுதிய செய்திகளை உருவாக்கவும் இப்பேட்டி பயன்படுகிறது.

**பேட்டியின் வகைகள்**

பேட்டி காண்பவர் கூச்சம் அச்சம் கொள்ளக்கூடாது. முன்பாகவே பேட்டி தருபவரிடம் இடம் நேரம் ஆகியனவற்றை உறுதிசெய்து கொண்டபின் பேட்டிக்குச் செல்ல வேண்டும். கேட்கப்பட வேண்டிய வினாக்களை முன் கூட்டியே தயாரித்து வைக்க வேண்டும். வியத்தகு விளைவுகளைத் தருகின்ற பேட்டிகள் பெரும்பாலும் எதிர்பாராத திருப்பங்களைக் கொண்டிருக்கும் என்பர் ஜான் கோகன்பாக்.

**நடுத்தெருப்பேட்டி**

நடுத்தெருவில் சென்றுகொண்டு இருப்போரிடம் பேட்டி காண்பது. சிலர் பேட்டி தர மறுக்கலாம். (எ.கா) நீங்கள் யாருக்கு வாக்களித்தீர்கள்?

**தற்செயல் பேட்டி**

திடீரென திட்டமிடாமல் ஒருவரை ஏதாவது ஒரு விருந்திலோ பொது இடங்களிலோ பார்க்கும்போது கேள்வி கேட்பது. திடீரெனச் சிலர் அவசரத்தில் ஏதோ சிந்தனையில் சில உண்மையைச் சொல்வது உண்டு.

(எ.கா) ரஜினி படம் குறித்து ராமதாஸ் கருத்து.

**ஆளுமை விளக்கப்பேட்டி**

வியத்தகு சாதனைகள் செய்தவரிடம் பேட்டி காணுதல் (எ.கா) திருச்சி கின்னஸ் சாதனை செய்த நடிகர் அலெக்சுடன் ஒரு பேட்டி.

**செய்திப்பேட்டி**

ஒரு செய்தியைக் குறித்து மற்றவர்களிடம் தொடர்பு உடையவர்களிடம் பேட்டி காண்பது.

(எ.கா.) நடிகர் அஜித்திடம் சூப்பர்ஸ்டார் ரஜினி என்று கூறியவுடன் சூப்பர்ஸ்டார் யார் வேண்டுமானாலும் ஆகலாம் என்று கூறி பரபரப்பை ஏற்படுத்தினார்.

**தொலைபேசிப்பேட்டி**

தொலைபேசி மூலம் பேட்டி காணுதல். இதற்கு அலைச்சலும், நேரமும் மிச்சம். ஆனாலும் அவர்தான் பேசுகிறாரா என்பதை அறியமுடிகிறது.

(எ.கா.) நீங்கள் விரும்பும் பாடல் எது? அதை நாங்கள் ஒலி/ஒளி பரப்புகிறோம் என தொலைபேசியில் கேட்பது.

**அடைக்காத்தல் பேட்டி**

சிலர் தாங்களாகவே வலிய வந்து தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பார்கள். இதை அடைக்காத்தல் பேட்டி என்பர்.

(எ.கா.) இத்தாலியில் பிறந்த சோனியா இந்தியாவில் பிரதமர் ஆகலாமா? நிருபர்களையே கேள்வி கேட்டு மடக்கினார் தமிழக முதல்வர் செல்வி.ஜெ.ஜெயலலிதா.

**பட்டம் பறக்கவிடும் பேட்டி**

சிலர் பேட்டிக்காக அழைத்து தங்கள் கருத்துக்களையே தொடர்ந்து வலியுறுத்துவார்கள். இதைப் பட்டம் பறக்கவிடும் பேட்டி என்பர்.

(எ.கா.) வைகோ தன் சிறைவாழ்க்கை, சிவகாசியில் போட்டியிடாமை ஆகியன குறித்து உணர்ச்சிவசப்பட்டு தொடர்ந்து கூறுதல்.

வெற்றிகரமாக பேட்டியை நடத்த திட்டமிடுதல், இணங்க வைத்தல், தெளிவாக அறிதல், தொடர் முயற்சி ஆகிய நான்கும் தேவை என்றவர் ஜேம்ஸ். எல்.நீல் மற்றும் சூசானேஸ் பிரவுன்.

“வியத்தகு எதிர்பாராத திருப்பங்களைக் கொண்டிருக்கும் நடத்துபவரின் கேள்விக்கு ஏற்பவும் விளைவு இருக்கும் என்பர் ஜான்ஹோஹன் பர்க்.

பேட்டி தருபவர்கள் தாம் கூறிய செய்திகள் சிலவற்றை வெளியிட வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டால் வெளியிடக்கூடாது. இதை இதழியல் அறம் என்பர். பேட்டியை முடிந்தால் ஒலிப்பதிவு நாடாக்களில் பதிவுசெய்யலாம். பேட்டி முடிந்தவுடன் பேட்டி தருபவர்களுக்கு நன்றி தெரிவித்தல் பண்பாடாகும்.

**ஆர்வநிலைக் கதைகள்**

தொடக்கக் காலத்தில் மனித ஆர்வச் செய்திகளுக்கு ஆசிரியர்கள் மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கவில்லை. மிகவும் ஆழமான பயனுள்ள

செய்திகளிலிருந்து மக்களின் கவனத்தை இவை திசைதிருப்புவனவாக உள்ளனவென்று கருதி ஒதுக்க முயன்றனர். ஆதலால் இவை மனித ஆர்வச்செய்திகள் என்ற கேள்விக்கு ‘இரத்தம் பணம், பாலுணர்ச்சி இவைதான் மனித ஆர்வத்திற்குரியவை என்று கேலி செய்தனர். மக்களின் ஆர்வம் அழகான பெண்கள், இனிய குழந்தைகள், விலங்குகள் ஆகியவற்றின் மீதுதான் இருக்கின்றது என்றனர். இந்தக் கூற்றில் ஓரளவு உண்மை இருக்கிறது. இது மட்டுமல்லாமல் எவை எல்லாம் வண்ணமாகவும் கவர்ச்சியாகவும் உணர்வுபூட்டுவனவாகவும், ஆர்வத்தைத் தூண்டுவனவாகவும் இருக்கின்றனவோ அவற்றில் ஆர்வம் காட்டுகின்றனர்.

**கருத்துப்படங்கள்**

பொதுமக்களின் எண்ணப்பிரதிபலிப்பே கருத்துப்படங்களாகும். கருத்துப்படங்கள் என்பவை படத்தலையங்கள். இந்தியாவில் முதன்முதல் கருத்துப்படங்கள் 1857-இல் ‘டெல்ஹி கெசட்’ என்ற இதழ் வெளிவந்தது. பாரதியாரின் ‘இந்தியா’ இதழின் மூலம் பக்கத்தில்தான் முதன்முதல் தமிழ்நாட்டில், கருத்துப்படம் வெளிவரத் தொடங்கியது. தேசபக்தனில் சில மாதங்களே வெளிவரத் தொடங்கியது. விநோதினி இதழிலும் இப்படங்கள் வந்தன. காலணா இதழ்களும் கருத்துப்படங்களைத் தந்தன. அவற்றுள் குறிப்பிடத்தகுந்தது ‘காந்தி’ இதழாகும். இன்றைக்கு நாளிதழ்கள் முதல்பக்கத்திலும் வார இதழ்கள் உட்பக்கங்களிலும் கருத்துப்படங்களை வெளியிடுகின்றன. கருத்துப்படங்களின் உட்பொருளாக அரசியல் போராட்டம் விலைவாசி உயர்வு, சமூகப் பிரச்சனைகள் காணப்படுகின்றன.

## கேலிச்சித்திரங்கள்

கருத்துப்படங்களில் கருத்துதான் முக்கியமானது. ஆனால் கேலிச்சித்திரங்களில் மனிதர்களின் தோற்றம் அல்லது செய்கை மரபுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. சர்ச்சில் பற்றிய கேலிச்சித்திரம் என்றால் வாயில் சுருட்டும், நேரு பற்றியதென்றால் சட்டைப் பொத்தானில் ரோஜாப்பூவும் முக்கியமாக இடம்பெறும். ஸ்டாலின் மீசை, பாரதியார் தலைப்பாகை, நிக்சனின் முகடு, மொரார்ஜியின் காதுகள், ராஜாஜியின் கறுப்புக்கண்ணாடி, பெரியாரின் கைத்தடி முதலியன இவர்களின் அடையாள முத்திரைகளாக கேலி சித்திரங்களில் வெளிப்படுகின்றன. இதழ்களில் பெரும்பாலும் அரசியல் பற்றிய கேலிச்சித்திரங்களே மிகுதி.

## படத்துணுக்குகள்

தமிழில் நகைச்சுவைக்கு முதலிடம் கொடுத்து வெளிவந்த முதல் இதழ் ஆனந்தவிகடன். நகைச்சுவைக்கு அணி சேர்ப்பது படம். சில படங்களைப் பார்த்தவுடனே நமக்குச் சிரிக்கத் தோன்றும். படங்கள் இல்லாத நகைச்சுவை துணுக்குகள் ஒப்பனை செய்து கொள்ளாத பெண்களைப் போன்றவை. தினத்தந்தியில் ‘ஆண்டிப்பண்டாரம்’ ராணியில் ‘குரங்கு குசலா’ ஆகியவை துணுக்குப் படங்களாக கருத்துக்களைக் கூறும் வகையில் வெளிவருகின்றன.

துணுக்குகளை வாசகர்கள் உருவாக்கலாம். வாழ்க்கை வரலாற்று நூல்கள் பொதுக்கூட்டங்கள் வெளியே செல்லும் இடங்கள் இவை போன்றவை துணுக்குள் கிடைக்கும் இடம்.

பாடம்–5

# பதிப்பித்தலும் எழுதுதலும்

இதழியல் மிகவும் முக்கியமான பணியாகச் செப்பணிடுதல் (பதிப்பித்தல்) (Editing) திகழ்கின்றது. ஒரு செய்தித்தாளின் இறுதி வடிவம் அதனுடைய பதிப்பித்தல் பணியைச் சார்ந்திருக்கிறது.

ஒரு செய்தித்தாளில் அலுவலகத்திலிருந்து வண்டி வண்டியாகச் செய்திகள் வந்து குவிகின்றன. எல்லாவற்றையும் வெளியிடுவது என்பது இயலாக செயலாகும். அவற்றைத் தக்க முறையில் வடிகட்டி தேவையானவற்றைத் தெரிந்தெடுத்து வடிவமைத்து, வாசகர்கள் எளிதாக படிக்கும் வகையில் பதிப்பிக்கின்ற பணியை ஆசிரியரோ துணையாசிரியரோ செய்வர்.

செய்தியை அவ்வாறு செப்பனிட்டு எழுதுவதில் சிலவற்றில் கவனமாக இருக்க வேண்டும்.

1. சுருக்கம்: செய்தியினை எவ்வளவு குறைவான சொற்களில் கூற வேண்டுமோ அவ்வளவு குறைவாக ரத்தினச் சுருக்கமாகக் கூற வேண்டும். தேவையற்ற சொற்களையும் வாக்கியங்களையம் அகற்றிவிட வேண்டும். சுருங்கக்கூறி விளங்க வைக்க வேண்டும்.
2. தெளிவு: ஒரு செய்தி விளக்கும் நிகழ்ச்சியோ கருத்தோ சிக்கல் நிறைந்ததாக இருக்கலாம். ஆனால் அதை வெளியிடுகின்ற பொழுது சராசரி வாசகரும் புரிந்துகொள்ளும் வகையில் எளிமைப்படுத்தி, தெளிவான நடையில் வெளியிட வேண்டும். குழப்பமான வாக்கிய அமைப்பிருந்தால் வாசகர் செய்தியை விளங்கிக்கொள்ள இல்லாமல் திண்டாடுவர். ஆதலால் செய்தியின் தெளிவு செய்தியின் மதிப்பைக் கூட்டும்.

3. உள்ளங்கொள்ளும் வகையில் கூறுதல்: செய்தியை வலுவான ஆற்றல்மிக்க நடையில் கூறுகின்ற பொழுது அது செய்தியாளரின் உள்ளத்தில் தடம்பதிக்கிறது. மொழிநடைதான் செய்தியை உயிரோட்டமுடையதாக்குகின்றது. 'சொற்சிலம்பம்' அறிந்தவர்கள் சொற்களைப் பின்னிப்பிணைத்த புதுமையாய் கவர்ச்சியாய் சுவையாய் விறுவிறுப்பாய் செய்தியினை வெளியிடுவார்கள்.
4. சரியாக வெளியிடுதல்: செய்திகளை வெளியிடும்போது செய்திகள் சரியானவைதானா என்பதையும், உண்மைக்கும் புறம்போகாமல் செய்தி வெளிவருகின்றதா என்பதையும் கூர்மையாகக் கவனிக்க வேண்டும்.
5. தவறான மொழிநடை தவிர்த்தல்: இரு பொருள்படும் வகையான மாறுபட்ட பொருள்தரும் வகையிலோ செய்தியில் உவமை உருவகம் போன்றவற்றைக் கூறக்கூடாது. மொழியின் மரபையும் சொற்களுக்கு நடைமுறையில் வழக்கத்தில் உள்ள உட்பொருளையும் உணர்ந்து பயன்படுத்தவேண்டும். இல்லையேல் செய்தியை வெளியிட்டதன் நோக்கம் சீர்குலையவோ தவறான விளைவுகள் ஏற்படவோ வழி ஏற்படும்.

**ஆசிரியர், செய்தி ஆசிரியர், துணையாசிரியர் கடமைகள், தகுதிகள், பொறுப்புகள்**

**ஆசிரியர்**

ஒரு பெரிய நாளிதழின் ஆசிரியர் பணி என்பது பெருமைக்குரிய பொறுப்பான பணியாகும். தங்களது எழுத்தாற்றலாலும், செய்திகளை வெளியிடும் துணிச்சலாலும் இதழை நடத்திய திறமையாலும் உலகப்புகழ்பெற்ற ஆசிரியர்களும் இருந்திருக்கின்றனர்.

ஆசிரியர் ஒரு செய்தித்தாளின் அச்சாணியாவார். சட்டப்படியும் நடைமுறைப்படியும் செய்தித்தாளில் வெளியிட்டவற்றிற்கும் வெளியிடத் தவறியவற்றிற்கும் பொறுப்பேற்க வேண்டியவர் அவர்தான். செய்தித்தாளில் அவதூறாக ஏதாவது வெளிவந்தால் அதற்கு அவர்மீது தான் வழக்குத் தொடர்வார்கள். அவமதிப்புக்காக நீதிமன்றம் நாடாளுமன்றம், சட்டப்பேரவை ஆகியவற்றின் முன்னால் நிற்க வேண்டியவரும் அவரே, என்று ரெங்கசுவாமி பார்த்தசாதி ஆசிரியரின் நிலையை விளக்குகிறார்.

ஆசிரியர் பத்திரிக்கையின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் துணைசெய்யும் வகையில் இயங்குநிலையில் செயல்பட வேண்டும். மக்களின் மனப்பான்மையை ஊகித்துணர்ந்து அவர்களின் விருப்பு வெறுப்புக்களைப் புரிந்து நடைமுறைச் சிக்கல்களை அறிந்து, அவற்றிற்கேற்ப பத்திரிக்கையை நடத்தி விற்பனையை உயர்த்த வேண்டும்.

ஒரு பத்திகளை பொதுநல நோக்கில் செயல்பட்டாலும், ஆதாய நோக்கில் செயல்பட்டாலும் அதனுடைய ஆசிரியரிடம் பொதுநலம் பேணும் பொறுப்புணர்ச்சி இருக்க வேண்டும். பொறுமையாகவும், மனித நேயத்தோடும் செயல்படுவதோடு பொதுமக்களுக்கு எது நலம் பயக்கும் எது கேடு விளைவிக்கும் என்பதைத் தீர்மானிக்கும் அறிவுகூர்மை வேண்டும்.

பத்திரிக்கை ஆசிரியர்க்கு நாட்டின் நலனைக் கட்டிக்காக்கும் பொறுப்பு இருக்கின்றது. ஆதலால் மக்களின் காவலன் என்ற முறையில் அரசு மேற்கொள்ளும் நல்ல ஆக்கப்பணிகளுக்கு ஆசிரியர் ஆதரவு தர வேண்டும். மக்களாட்சியில் அரசின் முன்னேற்றத்திட்டங்களை விளக்குவதும் அவற்றை நிறைவேற்றும் வகையில் மக்களின் கருத்தைத் திரட்டுவதும் பத்திரிக்கை ஆசிரியரின் கடமையாகும்.

ஆசிரியர் வாசகர்களுக்கும் கடமைப்பட்டிருக்கின்றார். வாசகர்கள்தான் பத்திரிக்கையின் நுகர்வோர் அவர்கள் உச்சநிலையில் மனநிறைவு பெறும் வகையில் செயல்படுவது ஆசிரியர் கடமையாகும்.

பத்திரிக்கை ஆசிரியர் தன் மனசாட்சியின் படி நடந்துகொள்ள வேண்டும். உள்ளத்தின் குரல் எப்போதும் சத்தியத்தின் குரலாகவே இருக்கும்.

**செய்தி ஆசிரியர்**

மிகப்பெரிய செய்தித்தாட்கள் தனியாக செய்தி ஆசிரியர் ஒருவரைப் பொறுப்பில் வைத்திருக்கின்றன. பத்திரிக்கையின் முக்கியமான பணியாளர்களில் ஒருவராக செய்தி ஆசிரியர் விளங்குகின்றார். செய்தித்தாள்களைத் திட்டமிட்டு உருவாக்குவதில் ஆசிரியருக்குத் தோன்றாத் துணையாக இருப்பவர் செய்தி ஆசிரியர்.

ஒரு செய்தித்தாளின் முதுகெலும்பாகச் செய்தி ஆசிரியர் அமைகின்றார். ரெங்கசாமி பார்த்தசாரதி, "ஆசிரியரின் கண்களாகவும், காதுகளாகவும் செய்தி ஆசிரியர் இருக்கின்றார்" மட்டுமல்ல, "அவர் ஆசிரியரின் மனச்சான்றின் கண்காணிப்பாளராக திகழ்கின்றார். ஆசிரியரின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற்றவராக, செய்தித்தாளை உருவாக்கும் பொழுது எந்தவகை மோதலையும் கருத்து வேறுபாட்டையும் தவிர்ப்பவராக செய்தி ஆசிரியர் இருக்க வேண்டும்" என்று கூறுகின்றார்.

ஒரு சிறந்த செய்தி ஆசிரியர் எல்லா முக்கியமான செய்திகளும் தனது செய்தித்தாளில் வருவதற்குப் பாடுபடுவார். அப்படி வெளிவரும் செய்திகளிலும் குறிப்பிடத்தக்க அளவுச் செய்திகள் அவரது செய்தித்தாளில் மட்டுமே வெளிவருபவையாக இருப்பதனைத் தனிப்பெருமையாகக் கருதுவர்.

தனது இதழில் மட்டுமே வெளியாகும் தனிச்செய்திகள் (Exclusive stories) செய்தித்தாளுக்குப் பெருமை சேர்ப்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். அப்படிப்பட்ட செய்திகள் சரியானவைகளா என்பதைத் தேவையானால் விசாரித்து அறிந்த பின்பே வெளியிட வேண்டும். இதில் செய்தி ஆசிரியரின் பொறுப்பு மிகுதியாகும்.

செய்தியாசிரியர் அவரது பணிகளைத் திறமையாகச் செய்ய வேண்டுமானால், பல்வேறு திறமைகள் அவரிடம் இருத்தல் அவசியம். உரிய காலத்தில் சரியான முறையில் செய்தித்தாள் வெளிவர செய்தியாசிரியர் விரைவாக செய்திகளைத் தீர்மானித்து துணையாசிரியர் மூலம் வடிவம் கொடுத்து வெளியிட வேண்டும்.

பொதுவாக செய்தியாசிரியர் அளவற்ற பொறுமையுடையவராகவும் எல்லா வகையான செய்திகளிலும் ஆர்வமுடையவராகவும் இருக்கவேண்டும்.

**இரவுச் செய்தி ஆசிரியர்**

நாளிதழ்களில் இரவில் வரும் செய்திகளைக் கவனிக்கத் தனியாக இரவுச்செய்தி ஆசிரியர் (Night News Editor) இருப்பார். பல நேரங்களில் செய்தித்தாளின் அச்சுப்பணி முடிந்து அது வெளிவரும் வேலையில்தான் ஏதாவது ஒரு பெரிய செய்தி வெளிவரும். ஒரு பெரிய தலைவரின் மரணம் பற்றியோ, விமான விபத்து பற்றியோ, ரெயில் கவிழ்ப்புப் பற்றியோ திடீரென்று நள்ளிரவில் செய்தி வரும்.

முதலில் தொலைபேசியில் செய்திகளைத் திரட்டி கடைசிச் செய்தியாக முக்கியமானவற்றை அன்றையச் செய்தித்தாளில். வெளியிட முயலவேண்டும். செய்தியாளர்களை அனுப்பி முழுவிபரங்களையும் திரட்டி மறுநாள் வெளியிட வேண்டும்.

**துணையாசிரியர்கள்**

ஒவ்வொரு செய்தித்தாளிலும் அதன் அளவிற்கேற்ப துணை ஆசிரியர்கள் பணி செய்கின்றனர். இவர்கள் செய்தித்தாளின் காரியங்கள் யாவிலும் கைகொடுப்பவர்களாக இருப்பார்கள். துணையாசிரியரும் ஏதாவது ஒரு பகுதிக்குப் பொறுப்பேற்றுப்பார். இவர்களை வெளிஉலகம் அறிவதில்லை. உடம்புக்குள் இருக்கும் எலும்புகள் போல இவர்கள் செய்தித்தாள் அமைப்பிற்கு உறுதியளிப்பவர்களாக இருப்பார்கள்.

உதவி ஆசிரியர்களை, மாநிலச்செய்தி ஆசிரியர் (State Editor) நகரச்செய்தி ஆசிரியர் (City Editor), செய்தி ஆசிரியர் (News Editor), ஞாயிறு மலர் ஆசிரியர் (Sunday Editor), கலைப்பிரிவு ஆசிரியர் (Art Editor), விளையாட்டுப்பகுதி ஆசிரியர் (Sports Editor) என பல பெயர்களில் அழைப்பார்கள்.

துணையாசிரியர் தான் செய்திகளையும், பிறவற்றையும் பதிப்பிக்கும் வகையில் செப்பனிட்டுத் தருகின்றனர். ஆசிரியரைச் செய்தித்தாள் என்ற கோபுரத்தின் கவசமாகக் கொண்டால் துணையாசிரியரை அடித்தளக் கல்லாகக் கருதலாம்.

துணையாசிரியரை ‘அவர் ஒரு படைப்புக்கலைஞர்’ என்று எம்.வி.காமத் வர்ணிக்கிறார்.

நார்த் கிளிப் (North Cliffe) என்பவர் செய்தியாளர்கள் செய்தித்தாளை எழுதுகின்றார்கள். துணையாசிரியர்கள் அதனை உருவாக்குகின்றார்கள் என்கின்றார்.

1. துணையாசிரியரிடம் மிகவும் நுட்பமான இருவகை ஆற்றல் இருக்க வேண்டும். விவரங்களைக் கவனமாக ஆராய்ந்து கொண்டிருக்கிற

பொழுதே, அது ஒட்டுமொத்தமாக எப்படி இருக்கின்றதென்பதையும் கவனிக்க வேண்டும்.

2. நல்ல துணையாசிரியர் நல்ல ஆங்கிலத்தில் எழுதக்கூடியவராக இருக்க வேண்டும். நல்ல மொழிநடையில் அமையாதவற்றை அவர் செப்பனிட வேண்டும்.
3. நாட்டில் நடைபெறும் முக்கியமான நிகழ்ச்சிகளையும் அவற்றின் போக்குகளையும் நன்கு தெரிந்திருக்க வேண்டும்.
4. அவர் பணியாற்றும் செய்தித்தாளைப் பற்றியும் அதன் கொள்கைகள் பற்றியும் தெளிவாகப் புரிந்திருக்க வேண்டும்.
5. எல்லா நேரங்களிலும் அவர் விழிப்புடன் இருக்க வேண்டும்.
6. அவருக்கு நூற்கள், நாடகங்கள், செய்தித்தாட்கள், மதிப்புரைகள், சட்டம் அரசின் அமைப்பு முறை, இடங்களின் பெயர்கள், அரசியல் மற்றும் சமுதாயத் தொடர்புகள், புவியியல், வரலாறு, மனித இயல்பு, வாழ்க்கை ஆகியவை எல்லாம் தெரிந்திருக்க வேண்டும்.
7. இலக்கியத்தின் தகுதி செய்தியின் தகுதி ஆகியவற்றை உணர்கின்ற ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும்.
8. சின்னஞ்சிறு விவரங்களையும் அறிந்தவராக அவர் இருக்க வேண்டும்.
9. பொது அறிவை மேல்நிலையில் பெற்றவராக இருக்க வேண்டும்.
10. மிக நீண்ட அறிக்கையை அதனுடைய முக்கியக் கருத்துக்களை விட்டுவிடாமல் சுருக்கித் தருகின்ற ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும்.
11. செய்தி சரியானதா? என்பதை அறிந்து கொள்வதில் கண்ணாக இருக்க வேண்டும். ஐயப்பாட்டிற்கு உரியனவற்றை வெளியிடக்கூடாது.
12. செய்தி ஆசிரியர் ஒதுக்குகின்ற பணிகளைத் துணையாசிரியர் உரியகாலத்தில் செய்தி தரவேண்டும்.

13. துணையாசிரியரின் முதன்மையான பணி அவரிடம் கொடுக்கின்ற செய்தியைப் படியைப் படித்து அதில் வேண்டாதவற்றை ஒதுக்கித் தள்ளி அதன் செய்தி மதிப்பை உணர்ந்து வெளியிடத்தக்கவகையில் செய்தியாக வடிவமைத்துக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு செய்திக்கும் எவ்வளவு இடம் ஒதுக்கப்பட இயலும் என்பதை அறிந்து செய்திக்கு இறுதி வடிவம் கொடுக்க வேண்டும். சில வேளைகளில் செய்தியாளரிடமிருந்து வந்த செய்தி துணையாசிரியர் செப்பனிட்ட நிலையில் தன்னுடைய உருவத்தை இழந்து, செய்தியாளரே இனங்கான முடியாத நிலையில் உருமாறி வெளிவரலாம். ஆதலால்தான் செய்தியாளர்கள் துணையாசிரியர்களை, "செய்திக்கொலைகாரர்கள் என்றும் இறைச்சிக் கடைக்காரரைப் போல இரக்கமற்று செய்திகளை வெட்டி உருவத்தை சிதைப்பவர்கள்" என்றும் குறைகூறுகின்றனர்.

14. அச்சுக்கோத்த செய்தியை இறுதியாக அச்சிடுவதற்கு முன்னால் திருத்துவதற்காக துணையாசிரியரிடம் அனுப்புவார்கள். துணையாசிரியர் எழுத்துப்பிழைகள் மட்டும் திருத்தினால் போதாது. செய்தி முழுமையாக எந்த முக்கியமான விவரத்தையும் இழக்காமல் உருவம் பெற்றிருக்கின்றதா என்பதைக் கவனிக்க வேண்டும். ஏதாவது விடுபட்டிருந்தால் திருத்தும் நிலை அதனை சேர்த்துக்கொள்ள இயலும். துணையாசிரியர் 'அச்சிடலாம் (O.K)' என்று குறித்து அனுப்பிய பின்புதான் அதனை அச்சிடுவார்கள்.

15. மேற்பார்வைப் பணியும் இவருடையது. செய்தியில் ஏதாவது அவதூறு இருக்கின்றதா? அதனை வெளியிடுவது சட்டப்படி குற்றமாகுமோ

செய்திக்குத்தக்க ஆதாரம் இருக்கின்றவாவென்பதைக் கவனிக்க வேண்டும்.

16. ஒரு துணையாசிரியரும் நல்ல தரமான அகராதிகள் வைத்திருக்க வேண்டும். ஐயங்களைத் தெளிவுப்படுத்திக்கொள்ளத் தேவையான பொது அறிவு நூற்கள் இருக்க வேண்டும். மாவட்டம் மாநிலம் நாடு உலகம் பற்றிய படங்களைக் கொண்ட புவியியல் படநூல் (Atlas) துணையாசிரியரிடம் இருக்க வேண்டும். தலைவர்கள், குறிப்பிட்ட மனிதர்கள் ஆகியோரின் படங்களின் தொகுப்பை உதவி ஆசிரியர் வைத்திருப்பது நல்லது.
17. துணையாசிரியரின் பணி முக்கியமானது. ஒரு செய்தித்தாளை உருவாக்கும் பணியில் துணையாசிரியரின் பணி பத்திரிக்கைக்கு ஆதாரமாக அமைகிறது.

### பாடம்–6

## செய்தியின் கட்டமைப்பு

ஒரு செய்தியின் அமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்பதை செய்தியை முதலில் எழுதுகின்ற துணையாசிரியரும் அதனைச் செப்பனிட்டு வெளியிடுகின்ற துணையாசிரியரும் நன்கு அறிந்திருக்க வேண்டும். ஏனெனில் செய்தியின் சாரத்தைப் போன்றே செய்தியின் அமைப்பு முறையும் முக்கியமானது. ஒரு செய்திக்குச் செய்தி மதிப்பை வழங்குவதில் அமைப்புமுறை சிறப்பான இடம்பெறுகின்றது.

“ஒரு செய்தியின் அமைப்பை நான்கு காரணிகள் அழுத்தமாகத் தீர்மானிக்கின்றன. செய்தியின் உருவமைப்பு, எழுதக் கிடைக்கும் நேரம், செய்தித்தாளில் வெளியிடக்கிடைக்கும் இடம், எழுத்தாளரின் திறமை ஆகியவை அவை” என்று ஜான் ஹோஹன்பெர்க் கூறுகின்றார்.

செய்தி உயிர் என்றால் இதன் அமைப்பு முறை உடலாகின்றது. எனவே செய்திக்கு கொடுப்பது போன்றே அதன் அமைப்பு முறைக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

**மூன்று பகுதிகள்**

செய்தித்தாளில் வெளிவருகின்ற எந்தச்செய்தியைப் பார்த்தாலும் அதில் வெளிப்படையாக மூன்று பகுதிகள் இருப்பதனைக் காணலாம்.

முதலில் ஒரு தலைப்பு (Headlines) மிகப்பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருக்கும். இது வாசகரைக் கவர்ந்து இழுக்கும் வகையில் அமையவேண்டும்.

வாசகர்கள் பலவகை. நுனிப்புல் மேய்வதைப் போல் செய்திகளின் தலைப்புகளை மட்டும் அவசரமாகப் படித்து ‘நடந்திருப்பவை’ இவைதான் என்று

கருதுகின்ற வாசகர்கள் இருக்கின்றனர். இவர்களுக்குத் துணைசெய்யும் வகையில் தலைப்பு இருக்கவேண்டும்.

இரண்டாவதாக, செய்தியின் முகப்பு (Lead) அமைகின்றது. முகப்புப்பத்தியோடு சேர்ந்து செய்தி நடைபெற்ற இடத்தையும் தேதியையும் குறிப்பிடுவார்கள். செய்தியைப் படிக்கின்ற வாசகர் எந்த இடத்தில் எப்பொழுது அது நிகழ்ந்தது என்பதையும் அதன் சாரத்தையும் முகப்புப்பத்தியில் அறிந்துகொள்வர்.

தலைப்புகளைப் படித்ததோடு, செய்தியின் சாரத்தையும் அறிந்துகொள்ள விரும்புகின்ற வாசகர்கள் உள்ளனர். இவர்கள் செய்தியின் முகப்புப் பகுதியைப் படித்து அதனைப் புரிந்துக்கொள்ள விரும்புகின்றனர். இதற்கேற்றறாற்போன்று முகப்பு அமைவது வாசகர்களுக்கு வசதியாக இருக்கின்றது.

மூன்றாவதாக செய்தியின் உடல் (Body) பகுதி. இதில் செய்தியின் விரிவாக்கம் இருக்கும் செய்தி முழுவடிவம் பெறுவது இங்குதான்.

சில வாசகர்கள் செய்தியை முழுமையாக அதனுடைய எல்லா நுண்ணிய விவரங்களோடும் அறிந்துக்கொள்ள எண்ணுகின்றனர். அவர்களுக்காக செய்தியின் உடல்பகுதியை விரிவாகவும் விளக்கமாக அமைத்துத் தருவது தேவையாகின்றது.

**தலைப்பு**

ஒரு செய்திக்குத் தலைப்பு என்பது அந்தச் செய்தியின் கருப்பொருளாகும். விரல்விட்டு எண்ணக்கூடிய சொற்களில் பார்த்த உடன் மொத்த செய்தியையும் புரிந்து கொள்ளும் வகையில் அமைவது தலைப்பு. எடுத்துக்காட்டு. 31.01.88-இல் தினமணியில் வெளிவந்த முதன்மைத் தலைப்பு

“ஜானகி அரசு டிஸ்மிஸ், மத்திய ஆட்சி அமல். சட்டசபை கலைக்கப்பட்டது”

நல்லதலைப்பு ஆற்றல்மிக்கதாக, சரியானதாக கண்ணில் பட்டவுடன் சுண்டி இழுப்பதாக இருக்கும். இது இதழின் செல்வாக்கினைக் கூட்டும். நல்ல தலைப்பு செய்தியின் திறவுகோலாக அமைகிறது. அது செய்தியை விளம்பரப்படுத்துகின்றது. செய்திச்சுருக்கத்தை மாத்திரை வடிவில் வாசகர்கட்கு அளிக்கின்றது. பத்திரிக்கையை அழகுபடுத்துகிறது. கவர்ச்சியில்லாத தலைப்ப உப்பில்லாப் பண்டமாகும் என்று கலைவாணியும் பிறரும் கூறுகின்றனர்.

**தலைப்பின் பணிகள்**

ஒரு தலைப்பு சில முக்கியமான பணிகளைச் செய்ய வேண்டுமென எதிர்பார்க்கிறோம். அவை,

1. சாரத்தைக் கூறல்: செய்தி தலைப்பு வாசகருக்குச் செய்தியின் சாரத்தைக் கூற வேண்டும். சுருக்கமாக பார்த்த உடன் செய்தியின் உயிர்நாடி வாசகரின் கவனத்தைத் தொட வேண்டும்.
2. முக்கியத்துவத்தை உணர்த்துதல்: செய்தியின் தலைப்பைப் பார்த்தஉடன் அதன் முக்கியத்துவம் வாசகருக்குத் தெரிய வேண்டும். இதற்கு தலைப்பில் பயன்படுத்துகின்ற சொற்கள் மட்டுமின்றி, அவற்றை அச்சிட்டிருக்கின்ற முறை எழுத்துக்களின் அளவு, மொத்தத்தில் தலைப்பின் அளவு ஆகியவையும் உதவுகின்றன.
3. வாசகரைக் கவர்தல்: வாசகர் செய்தியின் மூலம் கவரப்பட்டால்தான் செய்தியைப் படிப்பார். விறுவிறுப்பும் துடிதுடிப்பும் நிறைந்த உயிர்த்துடிப்பான செய்தித்தலைப்பு வாசகர்களைக் கவரும்.
4. கவர்ச்சியான தோற்றமளித்தல்: ஒரு செய்தித்தாளுக்குக் கவர்ச்சியான தோற்றத்தைத் தலைப்பு தருகிறது. வார, மாத இதழ்களுக்குக்

கவர்ச்சியான வண்ண அட்டை இருக்கிறது. செய்தித்தாளுக்குத் தலைப்புகள்தான் கவர்ச்சியை அளிக்க வேண்டும்.

5. விற்பனையைக் கூட்டுதல்: செய்திகளின் தலைப்பு காரசாரமாக இருந்தால் வாசகர்கள் செய்தித்தாளை வாங்கிப்படிப்பார்கள்.

## முகப்பு (The Lead)

ஒரு செய்தியின் தலைப்பினை அடுத்து இடம்பெறுவது முகப்பு ஆகும். செய்தியின் முதல்பத்தி முகப்பாகிறது. இதனைச் செய்தியின் அறிமுகம் (Intro) என்றும் கூறலாம்.

செய்தியின் முதல்பத்தியாக அமையும் முகப்பு மொத்தச் செய்தியின் சுருக்கமாகத் திகழ்கின்றது. இது பெரும்பாலும் ஒரு வாக்கியமாகவோ, சில சொற்களைக் கொண்ட வாக்கியங்களாகவோ இருக்கும். நல்ல முகப்பு என்ன? யார்? எங்கே? எப்பொழுது? ஏன்? எப்படி? என்னும் ஆறு கேள்விகளுக்குமுரிய விடைகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டுமென்ற கூறுவார்கள்.

முகப்பு, மொத்த செய்தியையும் ஒருங்கிணைத்துக் கூறுகின்றது. செய்தியின் போக்கினைச் சுட்டிக்காட்டுகின்றது. செய்தியிலுள்ள சுவையான பகுதிகளைப் படம்பிடித்துக்காட்டி, வாசகரின் ஆர்வத்தைத் தூண்டுகிறது.

### நோக்கங்கள்

ஒரு செய்தியின் முகப்பிற்கு சில நோக்கங்கள் இருக்கின்றன. அவை,

1. அறிவித்தல்: செய்தி எதனைப் பற்றியதென்பதை முகப்பு வாசகருக்கு அறிவிக்க வேண்டும்.
2. படிக்கும் மனநிலையை தோற்றுவித்தல்: வாசகரிடம் செய்தியைப் படிக்கும் மனநிலையை முகப்பு தோற்றுவிக்க வேண்டும்.

3. ஆர்வத்தைத் தூண்டல்: செய்தியைப் படிக்கின்ற வாசகர் தொடர்ந்து செய்தியைப் படிக்கும் வகையில் அவரிடம் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் முகப்பு இருக்க வேண்டும்.

செய்தியில் அடங்கியிருக்கின்ற விவரங்களையும் செய்தியின் போக்கினையம் உள்ளது உள்ளபடி முகப்பு எதிரொலிக்க வேண்டும். வாசகர்களைக் கவர வேண்டும் என்பதற்காக, செய்தியில் 'இல்லாததையும் பொல்லாததையும் முகப்பில் கூறக்கூடாது.

ரெங்கசாமி பார்த்தசாரதி, "ஒரு நல்ல முகப்பில் நான்கு இயல்புகள் இருக்க வேண்டும். 1. இது வாகசரைக் கவர்ந்திருக்க வேண்டும். 2. அது அவருக்கு ஏதாவது கூற வேண்டும். 3. அது அதனை மிக விரைவாகச் செய்ய வேண்டும். 4. அது அதனை நேர்மையாகச் செய்ய வேண்டும் என்கிறார்.

நல்ல முகப்பு எளிமையாக, சுருக்கமாக, முழுமையாக, வீறு கொண்டதாக, கவர்ச்சியாக, நேரடியாக உள்ளத்தின் பதிவதாக சரியானதாக இருக்கும் நல்ல முகப்புகள் மொழிநடையிலும் அணுகுமுறையிலும் வேறுபடும். ஆக்கத்திற்குள்ள துணையாசிரியர் புதுப்புது முறையில் முகப்புகளை எழுதுவார். வாசகர்கள் சுவைத்துச் செய்தியை படிக்க நல்ல முகப்புகள் வழிவகுக்கும்.

### உடல் பகுதி (Body)

செய்தியின் தலைப்பையும் முகப்பையும் எழுதிய பிறகு, செய்தியின் உடல்பகுதியை எழுதவேண்டும். முதற்பத்தியான முகப்பில் செய்தியில் உள்ள முக்கியமானவற்றைக் கூறிவிடுவதாய், மீதிச் செய்தியே செய்தியின் உடல்பகுதியாக வளர்கிறது.

செய்தியின் உடல்பகுதியை எழுதுவதற்க முன்னால் மூன்று குறிப்புகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும். முதலாவதாக செய்தியை முழுமையாகப் படித்து

அதில் வாசகர்களுக்கு எவை முக்கியமென்பதைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். இரண்டாவதாக செய்திக்குத் தேவையான எல்லா விவரங்களும் இருக்கின்றனவா என்பதைக் கவனிக்க வேண்டும். மூன்றாவதாகச் செய்தியை எவ்வளவு விரைவாகக் கூற முடியுமோ அவ்வளவு விரைவாகக் கூறவேண்டும்.

செய்தியின் உடல்பகுதியைப் பல வகைகளில் கூறுகின்றனர்.

1. தர்க்கமுறை அமைப்பு (Logical order)
2. உச்சநிலைப்படுத்தும் முறை (Highlight Method)
3. காலவரிசை அமைப்பு முறை (Chronological Order)
4. தலைகீழ்க் கூம்பு முறை (Inverted Pyramid Type)

## I. தர்க்கமுறை அமைப்பு (Logical order)

ஒரு செய்தியை அதன் இயல்பான முறையில் விளக்குவது ‘தர்க்கமுறையாகும்’. இதில் முகப்பும் உடல்பகுதியும் இருக்கின்றன.

முகப்பினை வலுவாக ஆதரித்து நிற்பதாகச் செய்தியின் உடல் இருக்கும். நாம் ஒரு நண்பரைத் திடீரென்று சந்திக்கின்றோம். அவர் புறப்பட்டுவிருக்கும் பஸ்ஸில் அமர்ந்திருக்கின்றார். அவருக்கு பஸ் புறப்படுமுன் ஒரு செய்தியைக் கூற வேண்டும். என்னமுறையில் கூறுவோமோ அதுதான் தர்க்கவியல் முறையாகு இருக்கும். எடுத்துக்காட்டாக இருவருக்கும் வேண்டிய ஒருவருக்குத் திருமணம் முடிவான செய்தியைக் கூறுவதாக வைத்துக்கொள்வோம். பஸ் எப்பொழுதும் புறப்பட்டு விடுமென்ற கால உணர்வோடு செய்தியைக் கூறுவோம்.

உங்களுக்குத் தெரியுமா, நமது நண்பர் பாண்டியனுக்குத் திருமணம் நிச்சயமாகிவிட்டது. பெண் மதுரையில் எம்.ஏ படித்தவள். வேலை பார்க்கவில்லை. திருமணம் மதுரையில் மார்ச் 30-ஆம் நாள்.

செய்தியில், திருமணம் நிச்சயமாகி விட்டது என்பது முகப்பு. பின் வருவது அதற்கு ஆதாரமாக அமைக்கப்பெற்ற உடல்பகுதி. இயல்பாக விரைந்து செய்தியைக்கூறும் முறையாக இது இருப்பதால் இதனைத் தர்க்கவியல் முறை என்கிறோம்.

இம்முறையை பத்திரிக்கை ஆசிரியர்கள் விரும்புவதற்கு சில காரணங்கள் உள்ளன.

1. சில சொற்களில் செய்தியைக் கூறிவிடலாம்.
2. குறைந்த அளவு நேரத்தில் செய்தியை எழுதலாம்.
3. அச்சிட பத்திரிக்கையில் குறைந்த அளவு இடம் போதும்.
4. இதனை எழுத மிகுதியாக திறமை வேண்டாம்.
5. விரைந்து படிக்க விரும்பும் வாசகருக்கு ஏற்றமுறை.

## II. உச்சநிலைப்படுத்தும் முறை (Highlight Method)

ஒரு நிகழ்ச்சியை முழுக்க விளக்க வேண்டியதில்லாமல் அதன் உச்சநிலையை மட்டும் விளக்க இந்தமுறையில் செய்தியைக் கூறலாம். ஒரு பேச்சாளர் ஒரு மணிநேரம் பேசி இருப்பார். அவருடைய பேச்சை அப்படியே வெளியிட முடியாது. அவர் வலியுறுத்திக் கூறிய உச்சநிலைக் கருத்தை மட்டும் செய்தியில் எடுத்துரைத்தால் போதும். விளையாட்டுப் போட்டிச் செய்திகளை இம்முறையில் வெளியிடலாம். இம்முறையில் சிறப்பு, செய்தியின் சாரமாக, உயிர்நாடியக இருப்பதை மட்டும் வெளிச்சம் போட்டுக்காட்டுவதாகும்.

## III. காலவரிசை அமைப்பு முறை (Chronological Order)

ஒரு நிகழ்ச்சி எப்படி நடைபெற்றதோ, அதே கால வரிசையில் செய்தியை விளக்குவது இம்முறையாகும். பொதுவாக ஒரு குற்றம் தொடர்பான

செய்தியையோ அரசின் விசாரணை அறிக்கையையோ, வளர்ச்சித் திட்டம் பற்றிய விவரங்களையோ இம்முறையில் வெளியிடலாம்.

இந்த முறையின் சிறப்பு, வாசகர் செய்தியின் வளர்ச்சி முறையை அறிந்து கொள்ள உதவுவது இம்முறையின் சிறப்பாகும். ஒரு செய்தி எப்படி என்ன வரிசையில் நடத்ததென்பதைச் சாதாரண சராசரி வாசகரும் புரிந்து கொள்ள இம்முறை உதவுகின்றது.

## IV. தலைகீழ்க் கூம்பு முறை (Inverted Pyramid Type)

செய்தியின் இறுதியை மிகவும் முக்கியமான பகுதியை முதலில் கூறி பின் முக்கியத்துவம் குறைந்தவற்றை அதாவது முக்கியத்துவத்தின் இறங்கு வரிசையில் கூறிச்செல்வதைத் தலைகீழ்க்கூம்பு அமைப்பு முறை அல்லது தலைகீழ்க் கோபுர அமைப்பு முறை என்று கூறலாம். இதில் செய்தி தலைகீழாக நிற்கின்றது.

மிகவும் பழைமையான, மிகவும் வசதியான, மிகவும் பயன்பாடுடைய, மிகவும் தவறாகக் கையாளுகின்ற செய்திமுறையாகத் தலைகீழ் கூம்பு முறை இருக்கின்றது. இது விவரங்களை அவற்றின் குறைந்து செல்கின்ற முக்கியத்துவத்தில் கூறும் முறையாகும் என்று ஜான்ஹோஹென்பெர்க் விளக்குகின்றார்.

இச்செய்தி அமைப்பில் மிகவும் முக்கியமானது செய்தியின் தலைப்பாகின்றது. இது செய்தியின் முடிவாக வாசகர்களைக் கவர்ந்திழுக்கின்றது. மிகவும் முக்கியமற்றவைகள் செய்தியின் இறுதியில் வருகின்றன.

தலைகீழ்க்கூம்பு அமைப்புமுறையில் செய்தியின் முன்னுரையாக அதன் முக்கிய பகுதி இடம்பெறுகின்றது. பின்னர் அதற்கு ஆதாரமாக இருக்கின்ற

விவரங்கள் தொடர்கின்றன. அவற்றிற்கு வலுவளிக்கும் மேற்கோள்களும் கருத்துக்களும் செய்தியின் பின்பகுதியில் இடம்பெறுகின்றன. இந்த அமைப்பு முறையினை எம்.வி.காமத் கீழ்க்கண்டவாறு வரைந்து காட்டுகிறார்.

“முன்னுரை - மிகவும் முக்கியமானவைகள்”

மிகவும் சுவையான விவரங்கள் கொண்டது.

செய்திக்கு ஆதரவாக: பின்புலமாக

அமையும் விவரங்கள்

மேற்கோள் அல்லது

முக்கியத்துவம்

குறைந்தவை

முக்கியத்துவம்

அற்றவை.

**கட்டுரைகள்; சிறப்புக்கட்டுரைகள்**

முக்கிய நிகழ்ச்சியின் போது அது குறித்த கட்டுரை வெளியிடுவது அதன் முக்கியத்துவத்தை உணரவைக்கும். விடுதலை நாளன்று சுதந்திரப் போராட்டக் கட்டுரை, செயற்கைக்கோள் பறக்கவிடும் நாள், விண்வெளி ஆய்வு பற்றியக் கட்டுரை போன்றவை இதற்கு சான்று.

சில பத்திரிக்கைகள், தேர்தலையொட்டி வாக்காளர்களின் கடமைகள், அரசியல் கட்சிகளின் கொள்கைத் தேர்தல் விதிகள் என்பன போன்றவற்றை உள்ளடக்கிய சிறப்புக்கட்டுரைகளும் வெளியிடும்.

இலக்கியம் அறிவியல் பயணம் ஆன்மீகம் அயல்நாடு தொடர்பான கட்டுரைகள் சிறப்புக்கட்டுரைகளாக வெளிவந்து செல்வாக்குப் பெற்றுவருகின்றன.

சிறந்த சிறப்புக்கட்டுரை ஆர்வத்தைக் கொடுக்கின்ற தொடக்கப்பகுதி, நெஞ்சத்தைக் கொள்ளைக் கொள்ளும் நடுப்பகுதி, கருத்தை உறுதிசெய்து மனதில் நிலைத்திருக்கச் செய்யும் நிறைவுப்பகுதி என மூன்று பகுதிகளைக் கொண்டு இருக்கும்.

ஒரு நாட்டின் ஆட்சி மாற்றம், புரட்சி ஏற்படும்போது அந்த நாட்டைப் பற்றி வரலாற்று அடிப்படையில் கட்டுரை எழுதுவது மத்திய அரசின் வரவு செலவுத்திட்டம் தொடர்பான பட்ஜெட் செய்திகள் ஒரு தலைவர் பதவி ஏற்றால் இறந்துபோனால் வாழ்க்கைக் குறிப்பை வெளியிடுவது போன்றவை சிறப்புக்கட்டுரைகளாகக் கருதப்படும். சிறப்புக்கட்டுரை எழுதுவோர் அந்தந்தத் துறையில் வல்லவராக இருத்தல் வேண்டும்.

**மதிப்புரைகள்**

மதிப்புரைகள், புதிதாக வெளிவரக் கூடிய நூல்களைப் பற்றித் திறனாய்வு செய்யும் பகுதி. நூலின் பெயர், ஆசிரியரின் பெயர், மொத்த பக்கங்கள், விலை, வெளியீடு, ஆண்டு கிடைக்கும் இடம் போன்ற செய்திகளை இதன்வழி அறியலாம்.

1. இம்மதிப்புரைகள் இந்நூல்கள் எப்படிப்பட்டவை என்பதைக் காட்டுகின்றன.
2. மதிப்புரைகள் நூல்களின் உட்பொருளைத் தெளிவாக்கி அவற்றை நூலாசிரியர் எவ்வாறு கையாளுகிறார் என்பதை விளக்குகின்றன.
3. அடிப்படைக் கருத்துக்களை இவைகள் காட்டுவதால் இவை வாசகர்களை அந்நூலைப் படிக்கத் தூண்டுகின்றன.
4. புத்தக உலகின் வரவுகளை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துகின்றன.

நூல் மதிப்புரையில மூன்று பகுதிகள் உள்ளன.

1. நூல் விளக்கம்: சிறிய பத்தியில் நூல்பெயர், ஆசிரியர் பெயர், பதிப்பகம், விலை முதலிய விவரங்க்ள இடம்பெறுகின்றன.

2. பொருள் விளக்கம்: நூற்பொருள், நூலாசிரியரின் நோக்கம், சிறந்த பகுதிகள் தரப்படுகின்றன.

3. மதிப்புரை குறைநிறைகளை எடுத்துக்கூறும் பகுதி: குறையிருப்பின் களையச் சில உத்திகளும் மதிப்பீட்டாளர்களால் எடுத்துக்கூறப்பட்டிருக்கும்.

**தலையங்கங்கள்**

மனித உயிருக்கு இன்றியமையாதப்பகுதி இதயமாகும். அதுபோல இதழ்களின் இதயப்பகுதி தலையங்கமாகும். தலையங்கம் இடம்பெறா இதழ்கள் முதுகெலும்பும் நாடும் இல்லா மனிதனையும், மறைதிரை இல்லா வீட்டினையும், அழகுபடுத்தாத கிறிஸ்துமஸ் மரத்தினையும் ஒக்கும் என்பர் காய்லே வார்ட்ராப். இதழ்களில் எல்லாச் செய்திகளிலும் தலைமையானது. அதனால்தான் இதனைத் தலையங்கம் என்று கூறலாம்.

ஆன்மா, மனச்சான்றே தலையங்கம் என்பார் எம்.வி.காமத். வாசகர்களால் பெரிதும் புறக்கணிக்கப்படும் பகுதி தலையங்கம். அதனால் அமெரிக்காவில் பல பத்திரிக்கைகள் தலையங்கம் வெளியிடுவதில்லை என்பர் ஜான்கோகன்பர்க். லீடர் (Leader) என்ற சொல்லுக்கு ஆங்கில அகராதி பொருள் தரும்போது எடிட்டோரியல் எனப் பொருள் தருகிறது.

தினமணி, தினகரன், இந்து, தி நியூ இண்டியன் எக்ஸ்பிரஸ் ஆகிய நாளிதழ்களும், துக்ளக், ஆனந்தவிகடன், கல்கி, குமுதம் போன்ற பெரும்பாலான வார இதழ்களும் தலையங்கம் வெளியிடுகின்றன.

**இயல்புகள்**

1. நல்ல தலையங்கம் தெளிவான நடையில் வலுவான கருத்துக்களோடு இருக்க வேண்டும். குழப்பம் இருக்கக்கூடாது.
2. கட்டுரை போல் நீண்டதாக இருக்கக்கூடாது.
3. சுற்றி வளைக்காமல் எடுத்து எடுப்பிலேயே சிக்கல்களைக் கூறி கருத்துக்களைத் தொகுத்துத்தர வேண்டும்.
4. விதி: தலையங்கம் எழுதுவோர் ஓர் அறிவியலாளரைப் போல சமுதாயத்திற்கு நம்பிக்கை தருபவராக உண்மையானவராக இருக்க வேண்டும்.
5. பொருள்: எது குறித்தும் தலையங்கம் எழுதலாம்.
6. இந்தியா பாகிஸ்தான் கிரிக்கெட்போட்டி முன்னாள் தேர்தல் ஆணையர்களான டி.என்.சேவுன் எம்.எஸ்.கில் போன்றோர் காங்கிரஸில் சேர்ந்தது சரியா? தவறா? போன்ற தலைப்புகளில் தலையங்கம் தீட்டப்படாமை.

**வகைகள்**

ஆங்கிலப் பத்திரிக்கைகள் தலையங்கத்தை மூன்றாகப் பிரிக்கின்றன. அவை,

1. அடுத்த பொருள் பற்றிய துணை தலையங்கம்
2. பொதுவாகக் கருதப்படும் மேம்போக்கான தலையங்கம்

எனவே ஒவ்வொரு பத்திரிக்கையம் தலையங்கம் வெளியிட வேண்டும். காந்தியடிகள் தாம் நடத்திய ‘யங் இண்டியன்’ ‘ஹரிசன்’ போன்றவற்றில் சிறப்பாக எழுதியுள்ளார்.

முதன்முதலில் தலையங்கம் எழுதியவர் பாரதியார். தான் நடத்திய இந்தியா பத்திரிக்கையிலும், பணிசெய்த சுதேசமித்திரன் பத்திரிக்கையிலும் தலையங்கம் எழுதினார்.

### இதழ்களில் விளம்பரங்கள்

உலகில் உள்ள ஒவ்வொரு பொருளும் விளம்பரத்தால் பெருமையடைகின்றது. நுகர்ச்சியாற்றலை மிகுதிபடுத்தி, வாங்கும் ஆர்வத்தை உண்டாக்கியும் ஊக்கிவித்தும் வாழ்க்கைத்தரத்தை மேன்மைப்படுத்த வழிகோலுவதே விளம்பரமாகும். இவ்விளம்பரங்கள் இதழ்களின் மூச்சாக உள்ளன. ரீடர்ஸ்டைஜஸ்ட் மாத இதழில் விளம்பரத்திற்கு இடம்கிடைப்பது அரிது. முன்பு இதழ்கள் அரசு விளம்பரங்களைக் கட்டணமின்றி வெளியிட்டன (பொங்கல் ஜெர்னல்). ஆனால் பிற்காலத்தில் எல்லா இதழ்களும் அரசிடமிருந்து கட்டணம் வாங்கிக் கொண்டே விளம்பரங்களை வெளியிடத் தொடங்கின. இன்று பம்பாய், கல்கத்தா, சென்னை போன்ற நகரங்களில் விளம்பர நிறுவனங்களும், டில்லியில் ‘இந்திய அரசு விளம்பர நெறியகமும்’ இருந்து இத்துறைக்கு உதவுகின்றனர்.

### விளம்பரங்களின் அமைப்பு

1. நம்பிக்கை அளிக்கும் வகையில் விளம்பரங்கள் அமைந்திருக்க வேண்டும்.
2. பக்கங்களுடன் மனதில் பதிந்து நினைவில் நிற்கும் வகையில் விளம்பரம் இருக்க வேண்டும்.
3. கவனத்தைத் திருப்பும் வகையில் அளவான கவர்ச்சியோடு அது காணப்படுதல் வேண்டும்.
4. பொருள்களின் தன்மை பயன்பாடு பயன்படுத்தும் முறைகள் ஆகிய செய்திகளுடன் அது இருக்கவேண்டும்.

5. அது வாங்கிக் கொண்டிருக்கும் வாடிக்கையாளர்களை மீண்டும் வாங்கத் தூண்டுவதாக இருக்க வேண்டும்.
6. படங்கள் விளம்பரத்தைத் தொடர்புடையதாக அமைந்திருக்க வேண்டும்.

சில சான்றுகள்:

கவர்ச்சி விளம்பரம்: பல் போனால் சொல் போகும். பற்களைச் சொத்தை வராமல் தடுக்க உடனே பயன்படுத்துவீர் கோபால் பற்பொடியை. சொல்லாமல் சொல்லும் நல்ல சரக்கிற்கு விளம்பரம் தேவையில்லை.

பொதுநிலையில் விளம்பரங்களை இரண்டாகவும் சிறப்புநிலையில் ஆறு வகைகளாகவும் பிரித்துக்காணலாம்.

**பொதுவகைப்பிரிவு**

1. தயாரிப்புப் பொருளைப் பற்றிய விளம்பரம்
2. தயாரிப்பு நிறுவனம் பற்றிய விளம்பரம்

**சிறப்புவகைப் பிரிவு**

1. வணிக விளம்பரங்கள் (வங்கிகள் துணி ஆலைகள்)
2. பொது விளம்பரங்கள் (திரைப்படம்)
3. சில்லறை விளம்பரங்கள் (சீயக்காய்த்தூள்)
4. பகுக்கப்பட்ட விளம்பரங்கள் (கல்வி, காணவில்லை)
5. செய்திக்கதை வடிவ விளம்பரங்கள் (முதலில் கதை முடிவில் விளம்பரம்)
6. துண்டு அறிக்கைகள் (இதழ்களின் உள்ளே துண்டு அறிக்கை)

### வெளியிடும் முறைகள்

விளம்பரங்களை வெளியிடும் முறைகள் வெளியிடுவோர் நோக்கிற்கேற்ப அமையும் நிலையில் பலவகைப்படும். அவை,

1. நேரிடை முறை
2. தன்னிலை விளக்கமுறை
3. உரையாடல் முறை
4. கேலிப்படங்கள் முறை
5. படங்கள் வழிமுறை
6. பாடல்வழி முறை
7. வினாவிடை முறை
8. பயன் உணர்ந்தோர் மூலம் உணர்த்தும் முறை

### விளம்பரங்களின் பயன்கள்

1. பொருட்களின் மதிப்பினையும் பயனையும் கூறுவதால் எளிதாக நுகர்வோர் பொருட்களை வாங்கிடுவார்.
2. உற்பத்தியாளர், விற்பனையாளர், நுகர்வோர் இவர்களை இணைக்கும் பாலங்களாக விளம்பரங்கள் அமைந்துள்ளன.
3. தொழில் அமைப்பு முறைகள் வேலைவாய்ப்புப் பற்றி செய்திகள், புதிய கண்டுபிடிப்புகள், மாற்றங்கள் இவற்றை அறியக் கைக்கொடுக்கின்றன.
4. அரசினரின் திட்டங்கள் வெளிப்படுத்தப்படுவதால் அரசின் போக்கை மக்கள் அறிய உதவுகின்றன.